**writerpayon:** எனது அன்பார்ந்த வாசகர்களுக்கு என்னுடைய வணக்கம்.
*9/11/2009 15:45*

**writerpayon:** Heavenly Forest என்ற ஜப்பானிய திரைப்படத்தை இன்று பார்த்தேன். கவித்துவமான திரை இலக்கியம் என சொல்லும்படியாக இருந்தது.
*9/11/2009 16:07*

**writerpayon:** மாலை ஒரு நண்பர் அமீர் கான் நடித்த கஜினி சார் படத்தை வீட்டில் பார்க்க அழைத்துள்ளார். கஜினி சார் ரோலில் சூர்யாவின் நடிப்பு அளவிற்கு இருக்குமா?
*9/11/2009 16:41*

**writerpayon:** Internal Affairs கொரியப்படம் என தவறாக எழுதியிருக்கிறேன். அது Infernal Affairs என்கிற சமகால ஹாங்காங் படமாம். தகவல் தருபவர்களுக்கு கவனம் தேவை.
*9/11/2009 18:00*

**writerpayon:** சமகால ஸ்பானிஷ் இலக்கியம் குறித்து தமிழில் எழுதுவதில் உள்ள சுகம் ஆங்கிலத்தில் கையொப்பமிடுவதில் கிடைப்பதில்லை. #தமிழ்
*9/11/2009 22:06*

**writerpayon:** YOU WOULDN'T STEAL A CAR என்றொரு குறும்படம் டிவிடியில் பார்த்தேன். கவித்துவமான போட்டோகிராபி, சிறப்பான எடிட்டிங் உத்தி. அவசியம் பாருங்கள்.
*9/12/2009 11:00*

**writerpayon:** Archie's Double Digest எனும் கிராபிக் நாவலை நண்பர் அனுப்பினார். ஆர்ச்சி, வெரனிகா, பெட்டி என மூன்று கதை மாந்தர்களிடையேயான உறவுகளின் உளவியல்.
*9/12/2009 16:57*

**writerpayon:** நியு உட்லண்ட்ஸ் ஓட்டலில் சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு வெளியே ஆட்டோவிற்காக காத்திருக்கையில் ஒரு பூ என்னிடம் பேசியது. பூ என்றால் நிஜமாகவே பூ.
*9/12/2009 18:38*

**writerpayon:** பாஷோவை படித்து விட்டேன். மிகவும் பாதித்த ஹைகூ:- ஓடைமீது மிதக்கும் சருகு. காடையிலிருந்து உதிரும் இறகு. பாடையானது விறகு. வசந்தத் தேநீர் பருகு.
*9/12/2009 22:27*

**writerpayon:** இந்திய நேரம் 12.31. உறக்கம் சிகரத்தைத் தொடும் நேரம் வந்து விட்டது. ஜப்பானிய ஷாட் கிளாஸில் சாக்கேயை ஊட்டிவிட கனவில் கெய்ஷா காத்திருக்கிறாள்.
*9/13/2009 00:32*

**writerpayon:** யோஜி யாமடாவிற்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்:- http://tinyurl.com/oj3slo
*9/14/2009 09:34*

**writerpayon:** கிளியின் கோரச் செந்நாக்கு நீண்டு வளர்ந்து மலைப்பாம்பாய் சிறுவனை சுழற்றி வீசுவதாக எழுதியிருந்தால் சிறப்பாக வந்திருக்கும். http://bit.ly/V2cvu
*9/14/2009 09:52*

**writerpayon:** ஆல் அவுட் கொசுவிரட்டி விளம்பரத்தில் அப்படி வரும். ஏன், அந்த

விளம்பரத்திற்குப்பின் எனது பெரும்சகதி நாவலில்கூட ஒரு நாக்கை சேர்த்திருக்கிறேன்.
*9/14/2009 10:06*

**writerpayon:** இலக்கிய சொல்லாடலில் இதை "நாக்குபோடுதல்" என்கிறார்கள். ரஷ்ய-கியூப எழுத்தாளர் பாவ்லோவ் கொய்லோவின் "ரசவாந்தி" (Upchuckist) நாவலில் இதை காணலாம்.
*9/14/2009 10:13*

**writerpayon:** பொன்விழா காணும் தூர்தர்ஷனுக்கு வாழ்த்துக்கள். தஸ்தாயெவ்ஸ்கியை படிக்கும்முன் எனது எழுத்திற்கு வித்திட்டது அதன் செவ்வாய்க்கிழமை நாடகங்கள்தாம்.
*9/14/2009 11:03*

**writerpayon:** மதியம் சூப்பர்குட் பிலிம்ஸில் கதை டிஸ்கஷன் இருக்கிறது. சண்டக்கோழியை முன்மாதிரியைக வைத்து கதை தயாரிக்க சொல்லியிருக்கிறார்கள்.
*9/14/2009 11:29*

**writerpayon:** இரு ஜென் கதைகளின் மொழியாக்கங்கள்:- http://tinypaste.com/e20ff
*9/14/2009 14:11*

**writerpayon:** @worldcinema Please send me dvd's.
*9/14/2009 15:18*

**writerpayon:** இரானிய இயக்குனர் அப்பாஸ்கானின் Flying Boy:- சிறுவன் கலீலின் பட்சி பறந்துவிடுகிறது. பட்சியைத் தேடும் கலீலின் பயண அனுபவங்கள் மனதைத் தொடுகிறது.
*9/14/2009 15:40*

**writerpayon:** யுஎஸ் வந்தால் எடைக்கு எடை ஆங்கிலப்புத்தகமும் டிவிடியும் தருவதாக அங்குள்ள ஒரு வாசகர் கூறுகிறார். முதலில் Chow Yun Fat போல் குண்டாக வேண்டும்.
*9/15/2009 00:37*

**writerpayon:** Bicycle Thief:- விக்டோரியாதேசிகாவின் காவியம். திருடுபோன சைக்கிளை தேடி கிடைக்காமல் தந்தை மகனெதிரில் திருடனாகிறார். ஸ்பானிய சினிமாவின் சிகரம்.
*9/15/2009 14:16*

**writerpayon:** RT டி.வி.யில் நள்ளிரவு அடல்ஸ் ஒன்லி நிகழ்ச்சிகள் ஒளிபரப்ப அனுமதி : மத்திய அரசு பரிசீலனை http://bit.ly/18yn6Q (நள்ளிரவில் ஒளிபரப்பி என்ன பயன்
*9/15/2009 14:42*

**writerpayon:** ஜூஸ் கடையில் ஒரு குழந்தையைப்பார்த்து புன்னகைத்தேன். கொன்னுடுவேன் என்றது. பெற்றோரிடம் சொல்லலாமா என யோசிக்கையில் குழந்தையே தானாக விலகிப்போனது.
*9/15/2009 19:57*

**writerpayon:** சிறிய அற்புதங்களுக்காக கடவுளுக்கு நன்றி.
*9/15/2009 19:58*

**writerpayon:** எனது தயிர்மை கட்டுரையில் citation needed என்கின்ற வார்த்தைகள் தவறுதலாக இடம்பெற்றதை சுட்டிக்காட்டிய வாசகர் துபாய் ராஜாராமுக்கு

நன்றி.
*9/15/2009 20:23*

---

**writerpayon:** இன்று ஆலிவர் ஸ்டீனின் பிறந்தநாள். குழந்தையாக பிறந்த அவர் உழைப்பால் வளர்ந்து Born on the 5th of July, Platoon ஆகிய சிறந்த படங்களை இயக்கினார்.
*9/16/2009 10:04*

---

**writerpayon:** விகடனில் தொடர் எழுதினால் விகட எழுத்தாளர் என்று அழைப்பதா?
*9/16/2009 10:30*

---

**writerpayon:** பிலிம் சேம்பரில் நிக்கோலாஸ்கேஜ் நடித்த Ghost Writer பார்த்தேன். கிராபிக்ஸ் தனித்துவமான வியப்பை அளித்தது. கவர்ச்சி உண்டு, காவியத்தன்மை இல்லை.
*9/16/2009 10:46*

---

**writerpayon:** எனக்கு ஜிப்பா அணிய பிடிக்கும். என்போன்றவர்கள் அணிந்தாக வேண்டிய உடை அது. ஞானிபோல சிலர் அதை சீருடையாக்கியிருப்பதால் நான் அணிய முடியாமல் போனது.
*9/16/2009 11:04*

---

**writerpayon:** நேற்று அரசி தொடரைப் பார்க்கமுடியவில்லை. மெகா அப்லோடில் கிடைக்காது. இரவெல்லாம் கணினியை அணைத்துவிட்டு இருளில் அமர்ந்தபடியே செயலற்று இருந்தேன்.
*9/16/2009 12:01*

---

**writerpayon:** சமகாலத் தேனீரில் சர்க்கரை குறைவாகவே கலக்கப்படுகிறது. வாடிக்கையாளரின் தேவையல்லாமல் மாஸ்டரின் விருப்பமே வணிக நடைமுறையை நிர்ணயிக்கிறது.
*9/16/2009 12:52*

---

**writerpayon:** பேட்ரிக் ஸ்வேஸ் மரணம் மனதை அழுத்துகிறது. நேற்றுதான் அவரை டிரவால்டோவுடன் ஒப்பிட்டு நண்பருடன் பேசிக் கொண்டிருந்தேன்.
*9/16/2009 13:24*

---

**writerpayon:** பாவம் பேட்ரிக் ஸ்வேஸ். இன்றும் இரவெல்லாம் கணினியை அணைத்துவிட்டு இருளில் அமர்ந்தபடியே செயலற்று இருக்க வேண்டியதுதான்.
*9/16/2009 13:28*

---

**writerpayon:** என்னை கவர்ந்த ஜென் கதை:- எங்கே என் சில்லறை என்று ஜென் குரு கேட்கிறார். அமெரிக்கக் கடைக்காரர் சொல்கிறார்:- மாற்றம் உள்ளிருந்து வர வேண்டும்.
*9/16/2009 14:33*

---

**writerpayon:** இந்த ஜென்கதையை மொழியாக்கம் செய்தது லார்டு லபக்குதாஸ்.
*9/16/2009 14:33*

---

**writerpayon:** எனக்கும் மற்ற எழுத்தாளர்களுக்கும் என்ன வித்தியாசம்? மற்ற எழுத்தாளர்களின் மனத்தில் எண்ணங்கள் தோன்றும். எனக்குக் குறிப்புகள் தோன்றும்.
*9/16/2009 17:36*

---

**writerpayon:** 10000 ட்விட்டர் குறிப்புகள் சேர்ந்தபின் புத்தகமாக வெளியிட திட்டமிட்டிருக்கிறேன்.

*9/16/2009 17:39*

**writerpayon:** பரணிலிருந்து இரும்புபெட்டியை இறக்கும்போது மஞ்சுபார்கவி ஆட்டோகிராப் போட்ட ஒரு தெலுங்குப்புத்தகம் கிடைத்தது. பத்தி எழுதுவதற்கு நல்ல சப்ஜெக்ட்.
*9/17/2009 14:11*

**writerpayon:** கடைசியில் இரா. முருகன்தான் எனக்கு எதிரியா? http://bit.ly/4nBpoD
*9/17/2009 17:16*

**writerpayon:** எனக்கு மாந்திரீய யதார்த்தம் கற்றுக் கொடுத்த மலையாள மந்திரவாதி அச்சச்சுதன் பிள்ளா காலமாகிவிட்டார். அவருக்கு எனது மனமார்ந்த அஞ்சலிகள்.
*9/17/2009 18:35*

**writerpayon:** என்னைப் போலவே யாரும் சொல்லாத விஷயங்களை சொல்கிறார் http://solvanam.com/?p=2691 கட்டுரையை முடித்திருக்கும் விதம் மனதைத் தொடுகிறது.
*9/18/2009 11:38*

**writerpayon:** வேம்பயர்கள்(vampire) என நான் எழுதியது வேம்பர்கள் என பிழையாக டைப்ஆகி பெரும்சகதி நாவலிலும் அப்படியே வந்துவிட்டது. தெரிந்தால் சந்தி சிரிக்கும்.
*9/18/2009 11:50*

**writerpayon:** Tristana- லூயி புனுவலின் காவியம். இளம்பெண்ணும் முதியவரும் படம்நெடுக வந்து வசனம்பேசுகிறார்கள். யதார்த்தம் மீறிய தார்மீக மதிப்பீடுகளின் அலசல்.
*9/18/2009 12:10*

**writerpayon:** Norbit- பிரையன் ராபின்ஸின் காவியம். அனாதை இல்லத்தை வாங்கப் பாடுபடும் அனாதை இளைஞனின் அனுபவங்கள். இத்தாலிய நியோ ரியலிசத்திற்கு மாற்று அழகியல்.
*9/18/2009 13:02*

**writerpayon:** நான் ஏதோ மலையில் கல்லுடைப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தெரியவில்லை. நான் மலையை உடைத்துக் கொண்டிருக்கிறேன். - காளிதாஸ்
*9/18/2009 13:05*

**writerpayon:** யாரோ ஒருவர் என்னை மீண்டும் மீண்டும் கைப்பேசியில் அழைத்து டைரக்டர் சீமான் வீடுதானே என்று கேட்கிறார். எப்படி வந்தது இந்தக் குழப்பம்?
*9/18/2009 14:41*

**writerpayon:** வித்யாசமாக பண்ண வேண்டும் என லிங்குசாமி சொல்கிறார். ஹிட்ச்காக் டிவிடி தொகுப்பை வாங்கிச்சென்ற நண்பரோ இன்னமும் திரும்பத் தரவில்லை. தவிக்கிறேன்.
*9/18/2009 16:13*

**writerpayon:** எனது ட்விட்டரை தொடங்கியபின் 49 ட்வீட்களை எழுதிவிட்டேன். இன்றிரவுக்குள் 50 ட்வீட்களை எட்டிவிடத் திட்டமிட்டிருக்கிறேன். #இலக்கியம் #சினிமா
*9/18/2009 18:08*

**writerpayon:** ரூபாய் நோட்டுகள் எவ்வளவு கைகளுக்கு மாறினாலும் தமது இயற்கை மணத்தை இழப்பதில்லை. அவைகளை எண்ணும்போது இதை உணர முடிகிறது.
*9/18/2009 18:49*

---

**writerpayon:** சமகால கர்ணன் ரஜினி சார் http://onlysuperstar.com/?p=4695
*9/19/2009 10:38*

---

**writerpayon:** எனக்கும் ஜெயமோகனுக்கும் என்ன வித்யாசம்? நான் இணைய சுனாமி, அவர் இணைய சுந்தர ராமசாமி. பொறாமையாகத்தான் இருக்கிறது.
*9/19/2009 10:57*

---

**writerpayon:** தமிழ் பௌத்தம் பற்றிப் பத்தி எழுத தரவு தேவை. வெங்கடேசனிடம் கேட்கலாம். ஆனால் காவல் கோட்டம் பற்றி நான் எழுதியபின் அவருக்கு என்மேல் நெடுங்கோபம்.
*9/19/2009 11:09*

---

**writerpayon:** பிடித்து வைத்த கல்லுப் பிள்ளையார் போல நான் ஒருவன் இங்கு இருக்கும்போது அவ்ரை யார் 1000 பக்க நாவல் எழுதச் சொன்னார்கள்?
*9/19/2009 11:11*

---

**writerpayon:** Seventh Seal- இங்க்மார் பெர்க்மனின் காவியம். ஒரு வீரனும் மரணமும் செஸ் ஆடுகின்றனர். வீரன் வென்றால் தப்புவான். மனிதனால் மரணத்தை வெல்லமுடியுமா?
*9/19/2009 12:42*

---

**writerpayon:** எனது நாவல்கள், சிறுகதைகள், திரைப்பட வசனம், திரைப்பட பாடல்கள், விகடன் பத்தி உள்ளான படைப்புகளை வாசிப்பவர்களுக்கு ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்.
*9/19/2009 13:06*

---

**writerpayon:** எனது ட்விட்டர் ட்வீட்களை புத்தகமாக தொகுக்கும்போது செம்பதிப்பாகவே கொண்டுவந்துவிடும்படி உயர்மையிடம் கேட்டிருக்கிறேன்.
*9/19/2009 13:11*

---

**writerpayon:** ஜெயமோகனின் பெயரை வைத்து அவரை கிண்டல் செயது நான் எழுதிய பழைய கட்டுரையை மீண்டும் படித்தேன். சிரித்துசிரித்து வயிறு புண்ணாகி புரையோடிவிட்டது.
*9/19/2009 14:12*

---

**writerpayon:** புண்ணாகி புரையேறிவிட்டது என்று இருக்க வேண்டும்.
*9/19/2009 14:13*

---

**writerpayon:** இளையராஜா சார் மூக்கால் பாடிய பழைய பாடல்கள் நம்மை 80களின் மடியில் கிடத்துகின்றன.
*9/19/2009 14:49*

---

**writerpayon:** Rashomon- குரோசாவாவின் காவியம். ஒரு பெண் ரேப் ஆக கணவன் சாகிறான். பலர் அதுபற்றி இஷ்டப்படி பேசுகிறார்கள். புறவன்முறையின் தனித்துவ சித்தரிப்பு.
*9/19/2009 18:19*

---

**writerpayon:** மாந்திரீக யதார்த்த படைப்பு எழுதும்போது "காக்கை" என எழுதாமல் "புராதன சியாமள விகாச பட்சி" என்று எழுத வேண்டும். #தமிழ் #இலக்கியம்

#மாந்திரீகம்
*9/19/2009 19:16*

---

**writerpayon:** http://bit.ly/qRDk8 இந்த பா.ராகவன் சிறுகதை தொடக்கத்திற்குத் தன் கதையிலிருந்தே உதாரணம் காட்டிக்கொள்கிறார். என் கதைகளில் முதல் வரியே இல்லையா?
*9/19/2009 21:30*

---

**writerpayon:** Armour of God- ஜாக்கி சானின் காவியம். போலி துறவிகள் வசமுள்ள பொக்கிஷத்தை மீட்க ஒரு இளைஞன் போராடுகிறான். ஹாங்காங் சினிமாவின் உச்சம். நல்லிரவு.
*9/19/2009 22:55*

---

**writerpayon:** @fanghua1988 உங்கள் மூலமாக வலைதளத்தில் எதையும் வாங்குவதில் எனக்கு உடன்பாடு இல்லை. அதற்கு மாறாக தெற்காசிய சினிமா பற்றிப் பேசுவோமே?
*9/22/2009 11:03*

---

**writerpayon:** Tom Yum Goong- பிரச்யா பிங்கியின் காவியம். இளைஞன் யானையை மீட்கிறான். யானையின் உடல்மொழியும் காமிரா நகர்வும் சிறப்பு. தாய் சினிமாவின் சிகரம்.
*9/22/2009 12:55*

---

**writerpayon:** திரைக்கதை எழுதும் மென்பொருளை பற்றி வலைதளத்தில் எழுதினேனே தவிர திறந்து பார்த்தால் ஒன்றும் புரியவில்லை. எத்தனை நேரம்தான் வெறித்துப் பார்ப்பது?
*9/22/2009 12:57*

---

**writerpayon:** Battleship Potemkin- ஐஸன்ஸ்டீனின் காவியம். கப்பலில் ரஷ்யப்புரட்சி. ஆயிரம்பேர் அகன்ற படிகளில் ஓடுகிறார்கள். ஷோஸ்டகவிச்சின் இசை உரமேற்றுகிறது.
*9/22/2009 15:44*

---

**writerpayon:** ஆட்டோவிற்கு காத்திருக்கையில் என்னிடம் ஒருவர் வந்து "நீங்க ரைட்டர்தானே?" என்றார். சில லட்சம் பேருக்காவது என்னைத் தெரிந்திருப்பதில் திருப்தி.
*9/22/2009 16:22*

---

**writerpayon:** இரானிய சினிமா மட்டும் இல்லை என்றால் நாமெல்லோரும் எங்கே இருப்போம்? நினைக்கவே பதறுகிறது.
*9/22/2009 17:45*

---

**writerpayon:** Tom and Jerry- வில்லியம் ஹனாவின் காவியம். எலி-பூனை மோதல். விளிம்புநிலை மனிதர்களிடையே ஓயாத போராட்டத்திற்கு உருவகம். தனித்துவமான காமிரா நகர்வு
*9/22/2009 20:45*

---

**writerpayon:** சிலர் கேள்வி கேட்கிறார்கள் என்றால் அதற்கு என்ன பொருள்? அவர்கள் அந்த கேள்விக்கு பதில் வைத்திருக்கிறார்கள் என்று பொருள். #அவதானிப்பு #சிந்தனை
*9/22/2009 22:37*

---

**writerpayon:** நவீன இலக்கியத்தில் எதையும் நேரடியாக எழுதக்கூடாது. திரித்தும் தலைகீழாக்கியும் எழுத வேண்டும். #இலக்கியம் #தமிழ்
*9/22/2009 22:54*

---

**writerpayon:** சிறுகதைகளில் தகவல் பிழை இருக்கலாமா என ஒரு வாசகர் கேட்கிறார். சிறுகதையில் அது முக்கியம் அல்ல. பத்தி, அபுனைவு நூல்களுக்குதான் தகவல் பிழை தேவை.
*9/23/2009 00:24*

---

**writerpayon:** புலம்பெயர்ந்த சமகால ஈழ நாவலாசிரியர்களை வலைதளத்தில் பாராட்டினால் அமெரிக்கா செல்ல ஸ்பான்சர் செய்வார்களா? ஆஸ்திரேலியா போனால் கூடப் போதும்.
*9/23/2009 13:16*

---

**writerpayon:** ஆயிரக்கணக்கான பக்கங்கள் எழுதிவிட்ட பின்னர்கூட அமெரிக்கா செல்லாதிருப்பது அவமானமாக இருக்கிறது.
*9/23/2009 13:19*

---

**writerpayon:** RT @tamils #TamilCinema : சூப்பர் ஸ்டார் வீட்டு வரவேற்பறை கூறும் செய்தி: மனதுக்கு பிடித்த பொன்மொழிகளை வீட்டில.. http://bit.ly/18NeeH
*9/23/2009 13:27*

---

**writerpayon:** முக்கிய விமர்சகர்கள் Love in the Time of Cholera குப்பை படம் என்கிறார்கள். நானோ பாராட்டி எழுதியிருக்கிறேன். எனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.
*9/23/2009 13:58*

---

**writerpayon:** பழைய மகாபலிபுரம் சாலையில் நேராக சென்றால் மாமல்லபுரம் என்றொரு ஊர் வருகிறது. நிறைய சிற்பங்களும் ஒரு கடற்கரை கோவிலும் உள்ளன. தனித்துவமான ஊர்.
*9/23/2009 14:22*

---

**writerpayon:** Kafka on the Shore:- முரகாமியின் நாவல். ஒரு சிறுவன் ஒரு நூலகத்தில் இருவருடன் பழகுகிறான். பிலிப்கேப்ரியல் மொழியாக்கத்தில் சிறப்பான எழுத்துரு.
*9/23/2009 15:20*

---

**writerpayon:** Selected Poems: Anna Akhmatova. இவை அக்மதோவா தேர்ந்தெடுத்த கவிதைகளா அவரது கவிதைகள்தானா என புரியவில்லை. ஆனால் கவித்துவமான தனித்துவம் கொண்டவை.
*9/23/2009 16:51*

---

**writerpayon:** பின்நவீனத்துவத்தில் தனித்துவத்திற்கு மதிப்பின்றி இருக்கலாம். இருந்தாலும் நான் அதை விடுவதாயில்லை. அது எனது பின்நவீனத்தன்மையை பாதிக்கவில்லை.
*9/23/2009 16:55*

---

**writerpayon:** இட்லிக்கு குஷ்பு பெயரை வைக்காமல் பெர்னாண்டோ சோரன்டினோ பெயரையா வைக்க முடியும்? ராஜநாயகத்தின் தார்மீகக் கோபத்திற்கு சரியான இலக்கு வேண்டாமா?
*9/23/2009 19:48*

---

**writerpayon:** தூங்கும் நேரம் வந்துவிட்டது. உலக சினிமா, உலக இலக்கியம், உலக இசை, உலகக் கலை, உலக ஆளுமைகள், உலக உருண்டை அனைத்திற்கும் நல்லிரவு.

*9/24/2009 00:39*

---

**writerpayon:** காலை வணக்கம். கண்ணாடியைப் பார்த்து எனக்கு சொல்லிக்கொண்டேன்.
*9/24/2009 09:56*

---

**writerpayon:** பொதுவாக என் பத்திகளை என் வீட்டு வாட்ச்மேனிடம் கொடுத்து படிக்கச் சொல்வேன். அவருக்கு புரியவில்லை என்றால்தான் பிரசுரத்திற்கு அனுப்புவேன்.
*9/24/2009 10:09*

---

**writerpayon:** கோணங்கியும் இதே வழிமுறையை கையாள்கிறார். ஆனால் அவருக்கு ஏது வாட்ச்மேன்? தனக்குத் தெரிந்த பேராசிரியர்களிடம் கொடுக்கிறார்.
*9/24/2009 10:10*

---

**writerpayon:** ஒருபக்கக் கதைகளை கேவலமாக எண்ணக்கூடாது. சுருக்கமாக எழுதுவது சிரமம். எனது பலநூறுபக்க நாவல்கள் எல்லாம் ஒருபக்கக் கதைகளாக தொடங்கியவையே. #போதனை
*9/24/2009 10:28*

---

**writerpayon:** மொழிபெயர்ப்பாளர் லார்டு லபக்குதாசுடன் ஓட்டலில் மதிய உணவு. மொழியாக்கம் பற்றி என்னிடம் உரையாற்றுவார். ஆப்பிள் ஜூஸோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்.
*9/24/2009 12:02*

---

**writerpayon:** Gandhi:- அட்டன்பரோவின் காவியம். காந்தி முதல் காட்சியிலேயே இறப்பதால் சஸ்பென்ஸ் இல்லை. பென்கிங்ஸ்லி நடிப்பில் பரோ தனித்துவ வரலாறு படைக்கிறார்.
*9/24/2009 12:11*

---

**writerpayon:** ஆர்டர் செய்த உணவுகள் தீர்ந்ததும் காசை கொடுத்துவிட்டு நடையைக் கட்டினோம். லார்டு லபக்குதாஸ் ஏதோ பதற்றத்தில் இருக்கிறார்.
*9/24/2009 13:41*

---

**writerpayon:** வேகவைத்த சாம்பார் அரிசி, வேகவைத்த அன்னாசிப்பழ ரச அரிசி, வேகவைத்த வெண்ணெய்ப்பால் அரிசி, முட்டைச்செடி கறி.... லார்டு லபக்குதாசின் அபிமான உணவு.
*9/24/2009 13:44*

---

**writerpayon:** ஒரு சமகால வலைபதிவில் "இலார்டு இலபக்குதாசு" என எழுதிவிட்டார்கள். லார்டு கடுப்பில் இருக்கிறார். Tscii எழுத்துருவுக்கு மாற்றி படிக்கச்சொன்னேன்.
*9/24/2009 13:46*

---

**writerpayon:** முட்டைச்செடியில் பாவாடையை அகற்றவில்லை என வருந்தினார் லபக்குதாஸ். விடுங்கள் இனி உலகம் இப்படித்தான் இருக்கும் என சமாதானப்படுத்தி அனுப்பினேன்.
*9/24/2009 13:47*

---

**writerpayon:** The Eel:-ஷோஹை இமாமுராவின் காவியம். மனைவியை கொன்று சிறை செல்லும் நாயகன் வீடுதிரும்பி ஒரு விலாங்குமீனுக்கு நண்பனாகிறான். தீவிர உளவியல் பார்வை.
*9/24/2009 14:38*

---

**writerpayon:** ஜப்பானிய பெண்கள் எல்லோரும் ஒரேமாதிரி இருக்கிறார்கள். நாயகன் நாயகியுடன் உடலுறவுகொள்கிறானா அவளது அம்மாவுடனா எனத்

தெரியாமல் எழுதுவது சிரமம்.
*9/24/2009 14:40*

---

**writerpayon:** கவபாட்டா-முரகாமி இடையே காக்கை தூக்கிச்செல்லும் செத்த எலியாக தென்படும் வேறுபாடு, பக்க எண்ணிக்கை. முரகாமி காத்திரமான எழுத்துக்கு சொந்தக்காரர்.
*9/24/2009 15:20*

---

**writerpayon:** நவஜோ கதைகளிலிருந்து சில கருத்தாக்கங்களை எடுத்தேன். சிறுகதைக்கு அல்லது நாவலுக்கு ஆகும். யாருக்கு தெரியப் போகிறது?
*9/24/2009 15:53*

---

**writerpayon:** கடந்த ட்வீட் எனது 99வது ட்வீட். சற்று நேரத்திற்குள் 100 ட்வீட்களை எழுதி முடித்துவிடுவேன்.
*9/24/2009 15:56*

---

**writerpayon:** எனது 100 ட்விட்டர் படைப்புகளின் முதல் தொகுதி.... http://www.megaupload.com/?d=YKCL1CGB அல்லது http://www.scribd.com /doc/20157654/-1
*9/24/2009 16:53*

---

**writerpayon:** பரந்த நீலச் சுவரில் கைச்சுண்ணாம்பை லேசாக தடவியது போல வானில் தனியாக சிறியதொரு மேகம். பார்ப்பவர்களுக்கு அழகானதாகத் தெரியுமோ என்னவோ.
*9/24/2009 18:03*

---

**writerpayon:** வில்லனாக நடிப்பீர்களா என ஒரு இயக்குனர் கேட்டார். நடிக்க வராது என்றேன். மார்க்வெஸ் பற்றி பேசுங்கள், நாங்கள் டப்பிங் செய்துகொள்கிறோம் என்றார்.
*9/24/2009 22:35*

---

**writerpayon:** எழுதுவதை என்னால் நிறுத்தவே முடியாது. லபக்குதாசை உலக சிறுகதை பற்றி பேச வைக்கலாம் என்றேன். அவர் ஸ்டார் இல்லையே என்றார் இயக்குனர். நியாயம்தானே.
*9/24/2009 22:42*

---

**writerpayon:** ஓரிரவு எழுதிக்கொண்டிருக்கையில் களைப்பில் தூங்கிவிட்டேன். விடிந்து எழுவதற்கும் என் கை தானாக கடைசி வரியை எழுதி முடிப்பதற்கும் சரியாக இருந்தது.
*9/24/2009 22:52*

---

**writerpayon:** அதனால்தான் சொல்கிறேன்:- எழுதுவதை என்னால் நிறுத்த முடியாது. அது காலரா போன்ற நோய். அதனால்தான் என் பத்திகளை "இன்னும் பரவும்" என முடிக்கிறேன்.
*9/24/2009 22:57*

---

**writerpayon:** பாஷோ கவிதையுடன் விடைபெறுகிறேன்:- புற்கள் அறுக்கும் நிலவு / மூங்கில் தோட்டம் கிசுகிசுக்க / கிணற்றில் தாமரை. மொழியாக்கம் லபக்குதாஸ். நல்லிரவு.
*9/25/2009 00:08*

---

**writerpayon:** காலை வணக்கம். எனக்கு சொல்லிக்கொண்டேன். இன்று பொழுது சீக்கிரம் விடிந்துவிட்டது.
*9/25/2009 09:48*

---

**writerpayon:** உங்களை மிகவும் பாதித்த புத்தகம் எது என பலர் என்னிடம் கேட்கிறார்கள். ஏதாவது ஜப்பானிய அல்லது ஹங்கேரிய நாவலை சொல்வேன் என எதிர்பார்க்கிறார்கள்.
*9/25/2009 09:51*

---

**writerpayon:** உண்மையில் என்னை மிகவும் பாதித்த புத்தகம் ராஜேஷ்குமாரின் "ஊசி முனையில் உஷா". அதை படித்தபின்தான் இனி தமிழில் படிக்கக்கூடாது என முடிவுசெய்தேன்.
*9/25/2009 09:53*

---

**writerpayon:** பட்டுக்கோட்டை பிரபாகரின் "சுட்டுவிடு சுசீலா" கூட அந்த அளவு பாதிக்கவில்லை.
*9/25/2009 10:01*

---

**writerpayon:** அதே போல நண்பர் லபக்குதாசுக்கு திருப்புமுனை பொன்னர் சங்கர். ஜெயமோகனுக்கோ லபக்குதாசின் மொழியாக்க சிறுகதைகள்.
*9/25/2009 10:16*

---

**writerpayon:** நடிகர் விஜய் என்பது போல் எழுத்தாளர் பேயோன் என குறிப்பிடுகிறார்கள். அது தேவையில்லை. முதலில்தான் தேவை இருந்தது.
*9/25/2009 11:38*

---

**writerpayon:** Un Chien Andalou:- லூயி புனுவலின் கியூபிச காவியம். நாயக படிமமும் நாயகி படிமமும் நேசிக்க, வில்லன் படிமம் இறுதியில் சாகிறது. சிறந்த எடிட்டிங்.
*9/25/2009 12:06*

---

**writerpayon:** Plan 9 from Outer Space:- எட்வர்ட் உட்டின் காவியம். வேற்றுகிரகவாசிகள் பூமியை தாக்கி இறந்தவர்களை எழுப்புகின்றனர். தனித்துவ நடிப்பு, எடிட்டிங்
*9/25/2009 15:33*

---

**writerpayon:** பிரிட்ஸ் லாங்கின் மெட்ரோபோலீஸ், FW முர்னாவின் நோஸ்பெராட்டு ஆகியவையின் வரிசையில் "பிளைன் 9"க்கு அழியாத இடம் உண்டு. எட்வர்ட் டி வுட் ஒரு மேதை.
*9/25/2009 15:50*

---

**writerpayon:** மதியம் உட்லண்ட்ஸில் நின்றிருக்கையில் சாரு நிவேதிதா வந்து ஹலோ சொல்லிவிட்டு போனார். அவரிடமிருந்து ஏதோ கெட்டவாடை. விஸ்கி சாப்பிட்டிருப்பார் போல
*9/25/2009 16:27*

---

**writerpayon:** http://www.myonlineinternetwebsite.com/ சமகால அமெரிக்க கலை மற்றும் தத்துவம் குறித்த தனித்துவ உரையாடல்கள் அடங்கிய பயனுள்ள வலைதளம்.
*9/25/2009 17:35*

---

**writerpayon:** அல்டாக்ஸ் ஹக்ஸ்லியின் Brave New World சிறந்த செவ்வியல் அறிபுனை பிரதி. எதிர்காலத்தில் பல சம்பவங்கள் நடப்பதை ஹக்ஸ்லி கூர்மையாக பதிவுசெய்கிறார்
*9/25/2009 17:45*

---

**writerpayon:** Surf Excel:- சமகால குறும்படம். ஒரு பெண்ணின் நாய் இறக்கிறது. ஒரு சிறுவன் நாயாக நடித்து அவளை தேற்றுகிறான். சிறப்பான எடிட்டிங், தேர்ந்த இயக்கம்
*9/25/2009 20:35*

---

**writerpayon:** தொலைக்காட்சியோ திரையரங்கோ, நிகழ்ச்சிக்கு முன்னும்பின்னும் இடையிலும் குறும்படங்கள் திரையிடுவது அவற்றுக்கு எதிர்காலம் இருப்பதையே காட்டுகிறது.
*9/25/2009 20:48*

---

**writerpayon:** ஜப்பானிய படங்களில் பெண்கள் பல சமயங்களில் பேசுவதற்கு பதிலாக தலையை மட்டும் அசைக்கிறார்கள். சுரோணித சாகித்யங்களில்கூட அப்படி செய்வது ஆச்சரியம்.
*9/25/2009 21:01*

---

**writerpayon:** என்னைப்போன்ற எழுத்தாளர்கள் பாவம். எவ்வளவு சம்பாதித்தாலும் கடைசிவரை இலக்கியம் பேச வேண்டும். ஓய்வுபெற்று ஏதாவது கோல்ஃப் கிளப்பில் ஆட முடியாது.
*9/25/2009 21:11*

---

**writerpayon:** RT செய்ததற்கு நன்றி இகாரஸ்பிரகாஷ். உங்கள் எஞ்சிய வாழ்நாள் காலம் முனைப்பற்ற அகத்தேடலில் கழியட்டும்.
*9/25/2009 22:03*

---

**writerpayon:** @dynobuoy மொட்டையாக பேசுபவன் எழுத்தாளன் அல்ல. அவன் மறுமொழியில் அழகியலும் கருத்து செறிவும் டியூபிலிருந்து பேஸ்ட் போல வெளிப்பட வேண்டும்.
*9/25/2009 23:26*

---

**writerpayon:** பாஷோ கவிதையுடன் விடைபெறுகிறேன்:- தாமரை பூக்கும் கிணறே / வாளிக்குள் பூவை விட்டு / தவளையை தந்ததேனோ? மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*9/25/2009 23:57*

---

**writerpayon:** காலை வணக்கம். எனக்கு.
*9/26/2009 10:51*

---

**writerpayon:** போனில் இனிய குரலில் என் முகவரி கேட்ட 20 வயது வாசகிக்கு என் வீட்டிற்கு வந்து சேரும்போது 55 வயதாகிறது. ஒரு ஆட்டோ பயணத்தில் 35 வயது ஏறிவிடுமா?
*9/26/2009 10:56*

---

**writerpayon:** எழுத்துலகின் முகமன் சார்ந்த தராதர பாரதூர மதிப்பீடுகளை வலைதளத்தில் யாரும் புரிந்துகொள்வதில்லை.
*9/26/2009 11:11*

---

**writerpayon:** உரைநடையால் ஆண்களைதான் கவரமுடியும். கவி எழுதினால் ரசிகைகளை பெறலாம். பாலகுமாரன் விஷயம் வேறு. அவருக்கு அதிர்ஷ்டத்தின் விசிறிக்காற்று வீசுகிறது.
*9/26/2009 12:58*

---

**writerpayon:** நான் ஆண்களுக்கான பாலகுமாரனோ என்று சில சமயங்களில் சந்தேகம் ஏற்படுகிறது.
*9/26/2009 13:01*

---

**writerpayon:** @gbwksiotmagc என்னை பின்தொடர்வதற்கு நன்றி. எனது படைப்புகளில் உங்களுக்கு விருப்பமானது எது?
*9/26/2009 13:11*

---

**writerpayon:** சலிக்காமல் மிஸ்டு கால் கொடுக்கிறார் லபக்குதாஸ். பிறகு கேட்டால் "பீட்டர் ஹாண்ட்கே" என்று மட்டும் சொல்லி ஸ்தம்பிக்க வைத்து திசைதிருப்புவேன்.
*9/26/2009 14:23*

---

**writerpayon:** இப்படி சுமார் 100 பெயர்களை சேர்த்து வைத்திருக்கிறேன். சிக்கலான சந்தர்ப்பங்களில் பிரம்மாஸ்திரம் போல் பிரயோக்கலாம். தமிழ் பெயர்கள் உதவாது.
*9/26/2009 14:25*

---

**writerpayon:** மற்ற எழுத்தாளர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் தீவிர வாசகர்களும்கூட இப்படி நிறைய பெயர்களை வைத்திருக்கக்கூடும். எல்லோரும் மனிதர்கள்தானே!
*9/26/2009 14:26*

---

**writerpayon:** லபக்குதாஸ் நல்ல மனிதர். ஆனால் உலகச் சிறுகதை பற்றி பேசுவதை என்னால் தாங்கமுடியவில்லை. இதற்கு ஒரே தீர்வு உலகச் சிறுகதை பற்றி நான் பேசுவதுதான்.
*9/26/2009 14:27*

---

**writerpayon:** வெளிநாட்டில் இருப்பதுபோல் தமிழ் பதிப்பகங்களுக்கு எடிட்டர் இல்லை. தமிழில் அப்படி ஒரு பழக்கம் வருவதற்குள் நிறைய எழுதி சம்பாதித்துவிட வேண்டும்.
*9/26/2009 15:01*

---

**writerpayon:** என்னை "biggest poser in local literary history" என புகழ்கிறார் ஒரு வாசகர். எனக்கு போஸ்கொடுப்பது பிடிக்காது. அதனால் அவர் சொல்வது புரியவில்லை.
*9/26/2009 15:06*

---

**writerpayon:** புகைப்படக் கலை எழுத்து மற்றும் ஓவியம் போல் இயல்பாக வர வேண்டியது. போஸ்கொடுத்து எடுக்கப்படும் புகைப்படங்கள் கலை ஆகாது.
*9/26/2009 15:14*

---

**writerpayon:** இன்னொரு வாசகர் என்னை "poor man's Ripley - could be Robert or Tom Ripley" என்கிறார். விளிம்புநிலை மாந்தரை பற்றி எழுதுவதால் இந்த புகழுரையோ?
*9/26/2009 16:09*

---

**writerpayon:** Ran:- குரோசாவாவின் காவியம். ஒரு மன்னர் அதிகாரத்தை மகன்களுக்கு தந்துவிட்டு அவஸ்தைப்படுகிறார். குரோசாவாவின் தனித்துவ முத்திரை பளிச்சிடுகிறது.
*9/26/2009 16:58*

---

**writerpayon:** குரோசாவா Ran கதையை ஷேக்ஸ்பியரிடம் திருடியதாக சர்ச்சை எழுந்தது. ஆனால் ஷேக்ஸ்பியரே பெர்னார்ட் ஷாவிடம் அக்கதையை திருடியதால் விவகாரம் வளரவில்லை.
*9/26/2009 17:07*

---

**writerpayon:** எழுதுவதை சிலர் சுயமைதுனத்துடன் ஒப்பிடுகிறார்கள். எனக்கு புரியவில்லை. எழுதுவது சுயமைதுனம் எனில் அதை பலர் படிக்க பிரசுரிப்பது போர்னோகிராபியா?
*9/26/2009 19:12*

---

**writerpayon:** நான் சொல்கிறேன்- நமது அகநாக்கு மன வாயிலிருந்து வெளிக்கிளம்பி

எல்லோரையும் வளைத்துப் போட்டு நக்குவதுதான் எழுத்து.
*9/26/2009 19:15*

---

**writerpayon:** நான் உலக சினிமா டிவிடி வாங்கும் கடையின் உரிமையாளர் எடுத்து கொடுக்கும் படங்களை பற்றிதான் வலைதளத்திலும் பத்திகளிலும் எழுதுகிறேன்.
*9/26/2009 19:33*

---

**writerpayon:** டிவிடி கடைக்காரர்களின் உலக சினிமா அறிவு பிரமிப்பூட்டுவது. தகவல்பிழைகள் மலிந்த பிரெஞ்சு படம் வேண்டுமென்றேன். சட்டென்று எடுத்துக் கொடுத்தார்.
*9/26/2009 19:38*

---

**writerpayon:** பிரிட்னி ஸ்பியர்ஸ் என்னை பின்தொடருமளவு வளரவில்லை என்றாலும் அவரது ரசிகர்கள் என்னை பின்தொடர்வது மகிழ்ச்சியளிக்கிறது.
*9/26/2009 19:40*

---

**writerpayon:** உலகமே சுருங்கிக்கொண்டிருந்தாலும் என் வீட்டிற்கும் பிரசாத் ஸ்டுடியோவிற்கும் இடையேயுள்ள தூரம் குறைவதில்லை. #அவதானிப்பு
*9/26/2009 20:15*

---

**writerpayon:** விகடனில் "ஹாய் மதன்" இருக்கும்போது என் பத்தி எதற்கு என ஒரு துணை ஆசிரியர் கேட்டிருக்கிறார்.
*9/26/2009 22:51*

---

**writerpayon:** என் பங்குக்கு நானும் ஏதாவது கேட்க வேண்டாமா? அவரது கைப்பேசி எண்ணை கேட்டேன்.
*9/26/2009 22:58*

---

**writerpayon:** இந்த பிளாஸ்டிக் ஸ்டூல் மீது ஒரு ஈ அமர்ந்து என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறது. எழுதும்போது வண்ணத்துப்பூச்சி என்றுதான் எழுத வேண்டியிருக்கும்.
*9/26/2009 23:02*

---

**writerpayon:** விடைபெறுமுன் பாஷோ கவிதை:- பாறை மீது கரப்பான் அமர / கிடுகிடுக்கிறது பாறை / பருவ மாற்றம். மொழியாக்கம் லபக்குதாஸ். நல்லிரவு.
*9/26/2009 23:31*

---

**writerpayon:** இயக்குனர் பியரி பலர்டியு இறந்துவிட்டார். பாவம் யார் பெற்ற பிள்ளையோ. அவரை பற்றி அறிந்தபின் 2002லேயே அவர் படங்களை பார்த்ததுபோல் எழுத வேண்டும்.
*9/27/2009 23:41*

---

**writerpayon:** Jennifer's Body:- வாத்ஸ்யாயனர் செதுக்கிய சுரோணித சிற்ப உடலான நாயகி ஆண் ரத்தம் குடிக்கிறார். மெகன் பாக்ஸின் சமகால நடிப்பு பிரமிப்பூட்டுவது.
*9/27/2009 23:49*

---

**writerpayon:** அடுத்த கட்டுரைக்கு தலைப்பு:- ஆணியை வசீகரிப்பவனின் இரவு. இதற்கு அர்த்தம் இல்லை. ஆனால் இப்படி எழுதினால்தான் கவித்துவ உரைநடை என ரசிக்கிறார்கள்.
*9/28/2009 01:03*

---

**writerpayon:** எதை பற்றி எழுதுவது என இனிமேல்தான் சிந்திக்க வேண்டும். ஆணிகளை பற்றி ஒரு கிராமப்புற கதையை இட்டுக்கட்டி வியட்நாமிய சினிமாவுடன்

முடிச்சுபோடலாம்.
*9/28/2009 01:14*

---

**writerpayon:** ஷாருக்கானுக்கு மலேசிய விருது கிடைத்தது போல் எனக்கும் வியட்நாமிய விருது கிடைப்பது நிச்சயம். குறைந்தது ஜேப்பியார் பல்கலைக்கழக டாக்டர் ஆகலாம்.
*9/28/2009 01:19*

---

**writerpayon:** அதேசமயம் எனக்கு கலைவாணர் விருது வழங்கப்படாமல் இருக்க எனக்கு கிடைக்கும் மொத்த ராயல்டியில் பாதியை கொடுக்கக்கூட தயங்க மாட்டேன்.
*9/28/2009 01:23*

---

**writerpayon:** பாஷோ எழுதிய ஹைக்கூவுடன் விடைபெறுகிறேன்:- கொச்சிரா முகே / வாரே மோ சபிஷிகி / அகி நோ குரே. நல்லிரவு.
*9/28/2009 01:41*

---

**writerpayon:** காலை வணக்கம். விஜயதசமி நாள். நம் வீட்டு குழந்தைகள் மார்க்வெஸ் படிக்க துவங்க நல்ல நாள்.
*9/28/2009 11:49*

---

**writerpayon:** போலான்ஸ்கியை சிறையில் தள்ளிவிட்டார்கள். எப்பேர்பட்ட கலைஞன் அவர். ஒரு கலைஞன் குற்றம் செய்தால் குற்றமாகுமா? குற்றவுணர்வு தரும் தண்டனை போதாதா?
*9/28/2009 12:35*

---

**writerpayon:** நேற்றிரவு லபக்குதாசுடன் போன் உரையாடல். போனை வைக்குமுன் "நான் 40 கண்சிமிட்டல்களை பெற வேண்டும்" என அவர் சொன்னது இப்போதும் காதில் ஒலிக்கிறது.
*9/28/2009 14:04*

---

**writerpayon:** "குட்டிதூக்கத்தைதான் 40 கண்சிமிட்டல்கள் என சொல்வார்கள். இரவு தூக்கத்திற்கு 4000 கண்சிமிட்டல்கள்" என திருத்தினேன். திருந்தினார். நல்ல மனிதர்.
*9/28/2009 14:08*

---

**writerpayon:** எல்லா நாட்களும் ஒரே மாதிரி இருப்பதால்தான் அவற்றை வித்தியாசப்படுத்தி காட்ட அவற்றுக்கு எண்கள் (தேதிகள்) கொடுக்கப்பட்டனவோ? #சிந்தனை #அவதானிப்பு
*9/28/2009 14:19*

---

**writerpayon:** @anbudan_BALA உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் லார்டு லபக்குதாசை தெரியாதா? நானும் நீங்களும் ஒரே உலகில்தான் வாழ்கிறோமா? வியப்பாக இருக்கிறது.
*9/28/2009 14:24*

---

**writerpayon:** @anbudan_BALA நான் சொன்னது பொன்மொழி. பலரும் பாராட்டி மேற்கோள் காட்டுவதற்காகவே அது எழுதப்பட்டது. இதை நீங்கள் ஆராய்வதில் எனக்கு உடன்பாடு அல்ல.
*9/28/2009 14:30*

---

**writerpayon:** ஜெயமோகனின் பெயரை கிண்டல் செய்து எழுதிய பழைய கட்டுரையை மீண்டும் படித்தேன். அருமை. எனது நகைச்சுவை உணர்வை நினைத்தால் எனக்கே சிரிப்பு வருகிறது.
*9/28/2009 15:23*

---

**writerpayon:** இளையராஜா, ஏ,ஆர். ரஹ்மான் பற்றி வலைதளத்தில் நடக்கும் தேவையற்ற விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவே எனியோ மோரிகோன் பற்றி எழுதினேன். பயனில்லை.
*9/28/2009 15:47*

---

**writerpayon:** Citizen Kane:- ஆர்சன் வெல்ஸின் காவியம். ஒரு அமெரிக்கர் இறந்துவிடுகிறார், பிறகு பெரிய பத்திரிகையாளர் ஆகிறார். தனித்துவமான காட்சியியல் கவிதை.
*9/28/2009 17:32*

---

**writerpayon:** சாமானியர்களுக்கு காலை நேரம், மதிய நேரம், மாலை நேரம் என்றால் எனக்கு வாசிப்பு நேரம், உலக சினிமா நேரம், எழுத்து நேரம்.
*9/28/2009 18:33*

---

**writerpayon:** Mars Attacks:- டிம் பர்டனின் காவியம். போரின் கொடூரத்தை இதைவிட உருக்கமாக சித்தரிக்க முடியாது. தனித்துவ காமிரா நகர்வு, சிறந்த எடிட்டிங் உத்தி.
*9/28/2009 22:26*

---

**writerpayon:** "உங்க கதை நல்லாயிருக்கு" என ஒருவர் சொல்ல, "வேறு எப்படி இருக்கும்?" என்றாராம் புதுமைப்பித்தன். இப்போது நானும் அவர் நிலைமையில் இருக்கிறேன்.
*9/28/2009 22:28*

---

**writerpayon:** வசனகர்த்தா ருத் பிராவர் ஜாப்வாலாவும் பிரெஞ்சு கவி ழாக் பிராவரும் உறவினர்களா?
*9/28/2009 22:56*

---

**writerpayon:** @orupakkam நான் எழுதும் கதைகளுக்கும் நன்றாக இருப்பது தவிர வேறு தேர்வுகள் இல்லை என சொல்கிறேன்.
*9/28/2009 23:52*

---

**writerpayon:** எனக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்யாசம்? மற்றவர்கள் தமிழில் எழுதுகிறார்கள். நான் தமிழை எழுதுகிறேன்.
*9/28/2009 23:54*

---

**writerpayon:** ஒரு எழுத்தாளன் எழுதுவது மற்றவருக்கு புரியதேவையில்லை. அவன் எழுதுவது அவனுக்கே புரியாமல்போவது ஒரு ஜென் நிலை. இதுவே அவன் இலக்காக இருக்கவேண்டும்.
*9/29/2009 00:04*

---

**writerpayon:** விடைபெறுமுன் ஒரு ஜப்பானிய ஹைக்கூ: பறக்கும் ஓடை மேல் / மிதக்கிறது காற்று / மீண்டும் பட்டாம்பூச்சி. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*9/29/2009 00:21*

---

**writerpayon:** கலைவாணர் விருது வாங்குவதாக பயங்கர கனவு. படபடப்புடன் எழுந்தேன். பிறகு தூக்கம் வரவில்லை. தூக்க வர "போரும் அமைதியும்" படிக்க வேண்டியதாயிற்று.

*9/29/2009 09:37*

---

**writerpayon:** "தூக்க வர" என்பது "தூக்கம் வர" என்றிருக்க வேண்டும்.
*9/29/2009 09:38*

---

**writerpayon:** பழைய நண்பனொருவன் பெண் விஷயத்தில் கில்லாடி. அவனது உத்தி பற்றி கேட்டதற்கு, "உனக்கெல்லாம் உதவாது" என்றான். என் கலை வேட்கை அவனுக்கும் தெரிகிறது.
*9/29/2009 09:50*

---

**writerpayon:** பெண்களை கவர ஆசை என்றாலும் அதற்காக சமகால தமிழ்கவிதை எழுதும் நிலைக்கு ஆளாவதை நான் விரும்பவில்லை. இதற்கு நிச்சயம் ஆக்கபூர்வமான தீர்வு இருக்கும்
*9/29/2009 09:53*

---

**writerpayon:** நான் சாருவுக்கு 'சரக்கு' வாங்கி கொடுத்து அவர் போதையில் இருக்கையில் பல வெளிநாட்டு எழுத்தாளர்கள் பெயரை கறந்துவிடுவதாக அவர் வதந்தி பரப்புகிறார்
*9/29/2009 09:55*

---

**writerpayon:** சாருவின் அஜந்தா என்ன என்று புரியவில்லை. ஆனால் வாசகர்கள் அவர் பேச்சுகளை நம்ப வேண்டாம்.
*9/29/2009 09:56*

---

**writerpayon:** நமது கடை பெனாயிலை நாமே குடிக்கக்கூடாது என்பது பதிப்பாளர்களுக்கு ஏன் புரிவதில்லை?
*9/29/2009 11:55*

---

**writerpayon:** ஆஸ்கார் ரவிச்சந்திரனிடம் ஜென் பற்றி பேச துவங்கினால் தூங்கிவிடுகிறார். இடையிடையே சம்பந்தமில்லாமல் சத்தமாக சிரித்து எழுப்ப வேண்டியிருக்கிறது.
*9/29/2009 12:38*

---

**writerpayon:** தஸ்தாவேஜு என யாராவது சொன்னால் தஸ்தாயெவ்ஸ்கி என காதில் விழுகிறது. படித்தாலும் அப்படிதான்.
*9/29/2009 13:28*

---

**writerpayon:** http://www.something.com:- பயனுள்ள ஜென் வலை தளம்.
*9/29/2009 13:37*

---

**writerpayon:** சென்ற ட்வீட் எனது 199வது ட்வீட். இன்னும் ஒன்று எழுதினால் 200 ட்வீட் ஆகிவிடும்.
*9/29/2009 13:45*

---

**writerpayon:** எனது சமீபத்திய புகைப்படம் http://bit.ly/3YOM70
*9/29/2009 15:05*

---

**writerpayon:** உளியின் ஓசைக்காக கலைமாமணி விருது வாங்கியதாக கோரக் கனவு. அதிலிருந்து தீவிரகாய்ச்சல். டாக்டர் கொடுத்த மருந்து போதாமல் வேலியம் கேட்டு பெற்றேன்.
*9/30/2009 12:17*

---

**writerpayon:** வார இறுதியில் ஊராந்திரம். ஓவியர் வான்கா இந்தியா வந்தபோது தங்கிய வீடு திருப்பத்தூர் அருகே ஒரு கிராமத்தில் இருக்கிறது. போய் பார்க்க வேண்டும்.
*9/30/2009 12:21*

---

**writerpayon:** கொரிய சுரோணித சாகித்யங்களைவிட ஜப்பானிய சுரோணித சாகித்யங்களில் கலை நேர்த்தியும் ப்ரசன்டேஷனும் சிறப்பானவை. காமிரா நகர்வும் தனித்துவமும்தான்.
*9/30/2009 12:23*

---

**writerpayon:** @nchokkan தகவல் என்பது என்ன? கட்டுரை கிட்டுரை எழுதும்போது நாமாக உருவாக்கிக்கொள்வதுதானே? அந்த வீட்டை பார்த்தபின் விவரமாக பதிவிடுகிறேன்.
*9/30/2009 12:33*

---

**writerpayon:** காலையில் கோலம் போட கதவைத் திறந்தால் வாசலில் ஒருவர் கிடக்கிறார். சாராய வாடை இல்லை. போலீசுக்கு போன் செய்வதற்குள் எழுந்துவிட்டார். ரசிகராம்.
*9/30/2009 12:36*

---

**writerpayon:** அவருக்கு பஸ்ஸுக்கு காசு கொடுத்து அனுப்பி வைத்தேன், இவர்கள் எனக்கு தேவையில்லை. எனது ரசிகர்கள் உயர்ந்த, செல்வாக்கான இடங்களில் இருக்க வேண்டும்.
*9/30/2009 12:39*

---

**writerpayon:** பிரசாத் ஸ்டுடியோ அருகில் கவிஞர் தாமரையை பார்த்தேன். எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால் நன்றாக இருக்கிறேன் என்கிறார். எல்லாம் என் நேரம்.
*9/30/2009 15:16*

---

**writerpayon:** எப்படி இருக்கிறீர்கள் என எந்த பெண் கவிஞரை கேட்டாலும் நன்றாக இருக்கிறேன் என்றுதான் சொல்கிறார்கள். சாடிஸ்டுகள்.
*9/30/2009 15:41*

---

**writerpayon:** சினிமா தொடர்பிருந்தால் நடிப்பதை தவிர்க்க முடியாது போலும். சுனைனாவுக்கு அப்பாவாக நடிக்கிறீர்களா என ஆஸ்கார் பிலிம்ஸில் கேட்டார்கள்.
*9/30/2009 15:44*

---

**writerpayon:** அப்பாவாகத்தான் நடிக்க வேண்டுமா? எனக்கும்தானே சுனைனாவை பிடிக்கும்? என நான் அவர்களை கேட்க முடியவில்லை.
*9/30/2009 15:45*

---

**writerpayon:** நீண்ட காலத்திற்கு பின் நோயல் இருதயராஜுடன் பேசிக்கொண்டிருந்தேன். எனது படைப்புகளில் காணப்படுவது மாந்திரீக யதார்த்தம் அல்ல, animism என்றார்.
*9/30/2009 16:34*

---

**writerpayon:** ரஷ்ய கவி ஆசிப் மாண்டல்ஸ்டாம் பற்றி எழுதுவதாக சொன்னேன். வேண்டாமே, எனக்கு அவரை பிடிக்கும் என்றார் நோயல். நட்புக்காக சம்மதித்தேன்.
*9/30/2009 16:41*

---

**writerpayon:** அதற்கு பதிலாக இன்னொரு ரஷ்ய கவி அன்னா அக்மதோவா பற்றி

எழுதலாம். துப்பட்டா போடாத பெண்கவிஞர்களில் எனக்கு பிடித்த ஒரே கவிஞர் அவர்தான்.
*9/30/2009 16:50*

---

**writerpayon:** ஒருநாளுக்கு 20 பக்கங்களுக்கு மேல் எழுதும் எந்த எழுத்தாளனும் அடிப்படையில் ஒரு hack-தான் என்கிறார் நோயல்.
*9/30/2009 17:15*

---

**writerpayon:** அவர் என்னை சொல்லவில்லை. என்னை சொல்வதாக இருந்தால் எழுத்தாளர் என சொல்லியிருப்பார்.
*9/30/2009 17:16*

---

**writerpayon:** நண்பர் சொக்கனுடன் பேசிக்கொண்டிருந்தேன். மைக்கேல் ஜாக்சன் மரணம் குறித்து "மைக்கேல் ஜாக்சன் - ஒரு செவ்வியல் சாவு" என ஒரு புத்தகம் எழுதுகிறார்.
*9/30/2009 17:39*

---

**writerpayon:** The Hot Chick:- டாம் பிரேடியின் காவியம். ஒரு ஆண்-பெண்ணுக்கு பரஸ்பரம் உடல் மாறுகிறது. ஆப்பிரிக்க மாயாஜாலத்தின் உடல் அரசியலை பற்றிய ஆய்வு.
*9/30/2009 19:33*

---

**writerpayon:** ஓவியர் வான் கோச் தங்கிய வீட்டை பார்க்க திருப்பத்தூர் கிராமத்திற்கு செல்லும்போது எனது ட்விட்டரை மொழிபெயர்ப்பாளர் லபக்குதாஸ் பார்த்துகொள்வார்.
*9/30/2009 19:49*

---

**writerpayon:** ட்விட்டரை பற்றி அவருக்கு விளக்குமுன் அவர் குறுக்கிட்டு ட்விட்டர் என்பதன் அகராதி அர்த்தத்தை விளக்க துவங்கிவிட்டார்.
*9/30/2009 19:58*

---

**writerpayon:** பிறகு "அலெக்சாந்தர் கோர்டா" என சொல்லி அவரை அடக்கினேன். புரியாதவர்கள் பார்க்க http://twitter.com/writerpayon/status/4390373080
*9/30/2009 20:00*

---

**writerpayon:** @penathal இது ஒரு சமகால பின்நவீன வெளிப்பாட்டு தனித்துவ அழகியல் பகிர்வுப் பயணம் என்பதால் தனியாகத்தான் போகிறேன்.
*9/30/2009 20:03*

---

**writerpayon:** விடைபெறுமுன் பாஷோ கவிதை:- உலகிலேயே சூடான கிரகம் / சூரியன்தான் போலும் / இப்படி கொளுத்துகிறதே. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ்.
*9/30/2009 22:20*

---

**writerpayon:** இங்கிருந்து திருப்பத்தூர் செல்ல இரண்டு நாட்களாவது ஆகும். ஏனென்றால் நான் கிளம்புவதே நாளை இரவுதான்.
*10/1/2009 09:44*

---

**writerpayon:** எனக்கு ஜெயமோகன் அளவுக்கு வரலாறு தெரியாதோ என்கிற சந்தேகம் நேற்று தூங்கும் நேரம் வாட்ட துவங்கியது....
*10/1/2009 09:52*

---

**writerpayon:** வரலாறு எல்லோருக்கும் தெரியும். உலக சினிமா எத்தனை பேருக்கு தெரியும்? நான் தகவல் பிழை செய்தால் கண்டுபிடிக்கக்கூட தெரியாது. பிறகு நல்ல தூக்கம்.

*10/1/2009 09:54*

---

**writerpayon:** நேற்றும் கெட்ட கனவு. ஆஸ்பத்திரியில் ஜப்பானிய நர்ஸ் என்னை தவிர பிறரை முத்தமிடுகிறாள். வதாஷி வதாஷி என்று கத்துகிறேன். அவள் காதில் விழவில்லை.
*10/1/2009 11:07*

---

**writerpayon:** கனவு முடிந்ததும் நிரோத் விளம்பரம் வந்து அதே கனவு முதலிலிருந்து துவங்குகிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் எனக்கு அது புது வேதனையாக இருக்கிறது.
*10/1/2009 11:11*

---

**writerpayon:** @anbudan_BALA அவ்வளவு மோசமல்ல. பொதுவாக ஜப்பானிய பெண்கள் வரும் கனவுகள் எனது ஹராகிரியில் முடியும். அதை ஜான் வூ இயக்குவார். நேற்று தப்பித்தேன்.
*10/1/2009 11:23*

---

**writerpayon:** @anbudan_BALA Saussurean morphologyஇல் உங்களுக்கு பரிச்சயம் இல்லை போலும். தமிழ் படைப்புலகத்தின் இயங்கியலுக்கு முழுமைவாத அணுகுமுறை உதவாது.
*10/1/2009 12:04*

---

**writerpayon:** ட்விட்டரில் பலர் முற்றுப்புள்ளிக்கு பதிலாக ஸ்மைலி பயன்படுத்துகிறார்கள். #அவதானிப்பு #வலைதளம் #ட்விட்டர்
*10/1/2009 12:16*

---

**writerpayon:** @scanman சசூரை புரிந்துகொள்ள நாகார்ஜுனன் எழுதியதை படிக்கலாம். இன்னும் தெளிவாக புரிய வேண்டும் என்றால் டெரிடா எழுதிய கட்டுரைகளை படிக்கலாம்.
*10/1/2009 12:19*

---

**writerpayon:** @scanman டெரிடா, நாகார்ஜுனன், சசூர் எழுதியவை வலைதளத்திற்கு வெளியே தேடினால் கிடைக்கலாம். சிறுபத்திரிக்கை உலகில் யாரையாவது கேட்கலாமே.
*10/1/2009 12:49*

---

**writerpayon:** @scanman இதற்கு மேலும் விளக்கம் தேவை என்றால் Cartesian semantics பற்றி விரிவாக படிப்பது நல்லது.
*10/1/2009 12:53*

---

**writerpayon:** நரேந்திர மோடியை தேசிய விலங்காக அறிவிக்கும்படி பா.ஜ.க.வில் ஒரு அணியினர் கோருகிறார்களாம். எனக்கும் ஜெயமோகனுக்கும் தெரிந்த ஒருவர் கூறினார்.
*10/1/2009 12:54*

---

**writerpayon:** Pop Eye Show:- கார்ட்டூன் நெட்வொர்க்கின் காவியம். தனிமனிதனால் உலகை மாற்ற முடியும் என காட்டுகிறது. தனித்துவ காமிரா கோணங்கள் கைவந்திருக்கிறது.
*10/1/2009 15:13*

---

**writerpayon:** லார்டு லபக்குதாசுக்கு இரண்டு மணிநேரங்கள் ட்விட்டர் பாடம். ட்விட்டரில் எனக்கு தெரியாத அனைத்தையும் விரிவாக கற்றுக் கொடுத்தேன். இனி அவர் பாடு.
*10/1/2009 22:35*

---

**writerpayon:** விடைபெறுமுன் ஒரு பாஷோ கவிதை:- பூ உதிரும் மரம் / இலை உதறும் செடி / பிரதி செவ்வாய் விடுமுறை. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/1/2009 22:50*

---

**writerpayon:** என்னை விட பெரியவரா காந்தி?
*10/2/2009 10:13*

---

**writerpayon:** மனம் ஏற்க மறுக்கிறது.
*10/2/2009 10:15*

---

**writerpayon:** எழுத துவங்கிய புதிதில் 'ஞாலத்தின் மாணப் பெரியவன்' என்கிற புனைப்பெயரை பிரயோகித்த நினைவிருக்கிறது.
*10/2/2009 10:32*

---

**writerpayon:** @obama இல்லை நண்பரே, அமெரிக்காவில் உங்களுக்கு முன்பே ஜேம்ஸ் யரல் ஜோன்ஸ், மோர்கன் பிரீமேன் ஆகிய கருப்பு அதிபர்கள் இருந்திருக்கிறார்கள்.
*10/2/2009 11:16*

---

**writerpayon:** திருப்பத்தூர் ரயில் நிலையத்தில் இப்போதிருந்தே 4000 பேர் காத்திருப்பது அபத்தமாக இருக்கிறது. 100 பேருக்கு மேல் இருக்கக்கூடாது என கூறிவிட்டேன்.
*10/2/2009 11:55*

---

**writerpayon:** அடுத்த ஈரோடு புத்தக கண்காட்சிக்கு சொந்த ஜெட் விமானத்தில் செல்ல எண்ணம். விடுவார்களா பதிப்பாளர்கள்?
*10/2/2009 11:55*

---

**writerpayon:** ரயில் நிலையத்தில் அந்த ஊர் பெண் கவிஞர்கள் இரும்பு துப்பட்டாவுடன் காத்திருப்பதாக அறிந்தேன். பாதுகாப்புக்கு 100 பேர். மற்றபடி 50 பேர் போதும்.
*10/2/2009 12:06*

---

**writerpayon:** நான் பயணிக்கும் திருப்பத்தூர் எக்ஸ்பிரசின் முதல் வகுப்பு பெட்டி இன்னும் சற்று நேரத்தில் புறப்படவிருக்கிறது. விடைபெறும் நேரம் வந்திருக்கிறது.
*10/2/2009 18:52*

---

**writerpayon:** விடைபெறுமுன் ஒரு பாஷோ கவிதை:- புல் மீதமரும் / வண்ணத்துப்பூச்சியே / அரிசி கிலோ என்ன விலை? மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ்.
*10/2/2009 19:25*

---

**writerpayon:** சோதனை 1, 2 மற்றும் 3.
*10/3/2009 10:58*

---

**writerpayon:** வணக்கம். நான் லார்டு லபக்குதாஸ். மொழிபெயர்ப்பாளன். என்னுடைய மொழிபெயர்ப்புகள் உலகின் பல மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
*10/3/2009 11:01*

---

**writerpayon:** தான் இல்லாத சமயத்தில் டுவிட்டரை பார்த்துக்கொள்ள மற்றவரை நியமிப்பது பேயோனின டுவிட்டர் சார்ந்த பாதுகாப்பின்மை உணர்வை அம்பலப்படுத்துகிறது.
*10/3/2009 11:02*

---

**writerpayon:** எனது இலியட் மொழிபெயர்ப்பில் இலக்கணப் பிழைகளும் வாக்கிய அமைப்பு பிழைகளும் மலிந்திருக்கிறதாம். நண்பர்கள் கூறுகிறார்கள். நண்பர்களா அவர்கள்?!
*10/3/2009 11:05*

---

**writerpayon:** பேயோன் தன்னைப் பற்றி தானே கட்டியெழுப்பி வரும் பெருங்கதையாடல்களைக் கட்டுடைக்க டுவிட்டரை ஒரு வாய்ப்பாக கருதுகிறேன்.
*10/3/2009 11:21*

---

**writerpayon:** பேயோனின் பொழுதுபோக்கு, டிவி ரிமோட்டில் சேனலை அதிகரிக்கும் "+" பொத்தான்மீது க்ரியா அகராதியை வைத்துவிடுவது. சேனல் மாறுவதை பார்த்து ரசிப்பார்.
*10/3/2009 11:40*

---

**writerpayon:** இந்தப் பொழுதுபோக்கிற்கு அவர் வைத்திருக்கும் பெயர் "உலக சினிமா பார்த்தல்".
*10/3/2009 11:41*

---

**writerpayon:** பேயோனுக்கு கார் வாங்க ஆசை. 4 கார் வாங்கிப் போடலாம். ஆனால் எழுதி சம்பாதிக்கிறான் என்று திட்டுவார்களோ என்ற பீதியில் வாங்காமல் இருக்கிறார்.
*10/3/2009 14:23*

---

**writerpayon:** நீங்கள் ஒன்றும் தீவிர இலக்கியவாதி அல்லவே, எதற்கு வீண் பயம் என்று கேட்டால் முறைக்கிறார்.
*10/3/2009 14:25*

---

**writerpayon:** பேயோனின் இன்னொரு திறமை முன்னுரைகளையும் பின்-அட்டை விளக்கங்களையும் மட்டுமே படித்து விட்டு முழு புத்தகத்தையும் படித்தது போல் பத்தி எழுதுதல்.
*10/3/2009 14:32*

---

**writerpayon:** சில இணையதளங்களில் திரைப்படங்கள் மற்றும் புத்தகங்களின் முழு கதை இருக்குமாமே? படிக்கும் (அ) பார்க்கும் நேரத்தை அவற்றை மேய்வதில் செலவிடுகிறார்.
*10/3/2009 14:36*

---

**writerpayon:** பேசும்போது மற்றவர்களுக்கு கைபேசி அழைப்பு வந்தால் பேயோன் அதை அவமதிப்பாக நினைப்பார், வயிறெரிவார். "ரிங்கர்ல பிராப்ளமா?" என்று கேட்பார்.
*10/3/2009 15:31*

---

**writerpayon:** லத்தின் அமெரிக்க மொழி என்று ஒரு மொழி இருப்பதாக நீண்ட காலம் நம்பிக்கொண்டிருந்தார் பேயோன். நான்தான் அவருக்குப் புரிய வைத்தேன்.
*10/3/2009 17:39*

---

**writerpayon:** அதே போல ஸ்விஸ் மொழி சிறுகதைளை அவருக்கு அறிமுகப்படுத்தியதும் நான்தான்.

*10/3/2009 17:40*

**writerpayon:** மொழிபெயர்க்க: நாய் ஆண்டுகள் - குந்தர் கிராஸ், நார்வீஜிய மரக்கட்டை - ஹருகி முராகாமி, நமது நாட்களின் கூட்டுத்தொகை - இசபெல் அலண்டே.
*10/3/2009 22:23*

**writerpayon:** எதிர்சென்றான் - சோபாக்கிளிஸ், காண்டிடா & முதுநிலை பார்பரா - பெர்னார்ட் ஷா, போட்டம்கின் போர்க்கப்பல் திரைக்கதை, குஷ்வந்த் சிங் ஜோக்ஸ்.
*10/3/2009 22:29*

**writerpayon:** மொத்தம் 1200 பக்கங்கள் இருக்கும். இரண்டு மாதங்களில், புத்தகக் கண்காட்சி வருவதற்குள், மொழியாக்கி முடித்துவிடலாம்.
*10/3/2009 22:31*

**writerpayon:** இந்த இனிய சிந்தனையோடு படுக்கைக்குப் போகிறேன்.
*10/3/2009 22:34*

**writerpayon:** நம் உலக எழுத்தாளர் ஒரு ஊரில் உள்ள ஒரு மண்டபத்தைப் பற்றி நேரடி ரிப்போர்ட் போல கதைகதையாக பத்தி எழுதினார்.
*10/4/2009 15:05*

**writerpayon:** அடுத்த வாரம் விகடனில் அந்த ஊர் வாசகர் ஒருவர் அப்படி ஒரு மண்டபமே இல்லை என்று எழுதிவிட்டார். எழுத்தாளர் சில காலத்திற்கு ஊராந்திரம் போகவில்லை.
*10/4/2009 15:06*

**writerpayon:** பேயோன் போல வலைப்பீ தொடங்க ஆசை. நேரமிருந்தால் செய்யலாம்.
*10/4/2009 15:11*

**writerpayon:** அதாவது வலைப்பூ. வலைப்பீ என்றால் வேறு அர்த்தம் வரும்.
*10/4/2009 15:12*

**writerpayon:** அதற்கெல்லாம் நேரம் எங்கே என்று பேயோனிடம் சொன்னால் "சென்னையில்தான்" என்பார். எதையும் மேலோட்டமாகவே புரிந்துகொண்டு பழகியவர் பாவம்.
*10/4/2009 15:15*

**writerpayon:** வணக்கம். எனக்கு.
*10/5/2009 09:18*

**writerpayon:** திருப்பத்தூர் அருகே முதியணங்கூர் என ஒரு ஊர். அந்த ஊரில் முதியவர்களின் தலையை விரலால் தட்டினால் ணங் என்று சத்தம் வருகிறது. ஆரியபட்டர் சாபமாம்.
*10/5/2009 09:20*

**writerpayon:** முதியணங்கூரில் உள்ள ஒரு ஓட்டலில் மயில்களை வேலைக்கு வைத்திருக்கிறார்கள். பரோட்டா தட்டை அலகால் எடுத்து வருவதை பார்க்கவே தனித்துவமாக இருந்தது.
*10/5/2009 09:41*

**writerpayon:** 14 லட்சம் ரூபாய் காந்தி பேனா இருந்தால் எவ்வளவு செறிவாக எழுதலாம்!
*10/5/2009 09:51*

**writerpayon:** அன்னா நிக்கோல் ஸ்மித்தும் அன்னா அக்மதோவாவும் வேறு வேறு ஆளா?
*10/5/2009 10:25*

**writerpayon:** சென்னையில் அன்னா அக்மதோவா, அன்னா கரீனனா, அன்னா கிரிகோரிவ்னா (கிரிகோர்வினா) எல்லோருக்குமாக சேர்த்து ஒரு அன்னா அறிவாலயம் எழுப்பப்பட வேண்டும்.
*10/5/2009 11:03*

---

**writerpayon:** கோடம்பாக்கம் "கோ" என்ற எழுத்தில் தொடங்குவதால் கோலிவுட் என்கிறார்கள். ஹாலிவுட் "ஹா" என தொடங்குவதால் ஹாலிவுட் என்கிறார்கள். #அவதானிப்பு
*10/5/2009 12:07*

---

**writerpayon:** பாலிவுட் என்ற வார்த்தையை மாலிவுட் என எழுதும்படி ராஜ் தாக்கரே உத்தரவு போடவிருக்கிறாராம். ஜெயமோகனுக்கும் எனக்கும் தெரிந்த ஒருவர் கூறுகிறார்.
*10/5/2009 12:17*

---

**writerpayon:** வைணவத்தை "நாராயணத்துவம்" என்று எழுதினால் ஆகாதா? அதைப்போய் ஒரு விகடன் உதவி ஆசிரியர் மெனக்கெட்டு யார் யாரையோ போனில் கேட்டு மாற்றியிருக்கிறார்.
*10/5/2009 12:44*

---

**writerpayon:** ஒரு மாறுதலுக்காக பாரதியார் கவிதைகள் படித்துக்கொண்டிருக்கிறேன். அவர் தமிழிலா எழுதியிருக்கிறார்? ஒன்றுமே புரியவில்லையே.
*10/5/2009 13:45*

---

**writerpayon:** நூறு டிவிடி அட்டைகள் தேவைப்படுகிறது. கதை, இயக்குனர் பெயர், வெளிவந்த ஆண்டு ஆகியன உள்ள அட்டைகள் போதும். உலக சினிமா பற்றி எழுத வேண்டும்.
*10/5/2009 15:29*

---

**writerpayon:** ஒரு மணிநேரம் இடைவிடாமல் கண்ணாடியில் என் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். கடைசியில் என் முகம் கமலஹாசன் முகமாகிவிட்டது.
*10/5/2009 16:18*

---

**writerpayon:** நான் கவிதை எழுத துவங்கியது பலருக்கு தெரியாது. தொடர்ந்து எழுதாமல் விட்டதற்கு இரண்டு காரணங்கள்....
*10/5/2009 17:11*

---

**writerpayon:** 1. வைரமுத்துவை ஒரு விழாவில் பார்த்தபோது நான் கவிதை எழுதுவதை சொன்னேன். "தொகுப்புவெளியிட்டால் கவிஞர்கள் திருநாள் விருது உமக்குத்தான்" என்றார்.
*10/5/2009 17:13*

---

**writerpayon:** 2. உயர்மையில் பாவண்ணன் கவிஞர்களை அறிமுகப்படுத்தி தொடர் எழுத துவங்கியிருந்தார்.
*10/5/2009 17:24*

---

**writerpayon:** தலை 20 புத்தகத் தலைப்புகள் http://writerpayon.blogspot.com/2009/10/20.html அதீத மன எழுச்சி தரும் கவித்துவங்கள்....
*10/5/2009 17:33*

---

**writerpayon:** ஜெயமோகன் மணவை முஸ்தபாவை தூற்றியதை பற்றி லா. லபக்குதாஸ் மிகவும் வருத்தப்பட்டார். மொழியாக்கத்தில் லபக்குதாசின் ஆசான் அவர்.
*10/5/2009 19:21*

---

**writerpayon:** எட்டு மணிக்கு எப்படி வேகிறது! இயற்கைக்கே என்னை அடையாளம் தெரியவில்லையா?
*10/5/2009 20:02*

---

**writerpayon:** உலக சினிமாவை விட்டுப் பிரிந்து ஒருநால் இருந்துவிட்டேன். இறந்துவிட்டேன் என்று சொல்ல வேண்டும். நாளை 4 படங்களாவது பார்க்க வேண்டும்.
*10/5/2009 21:15*

---

**writerpayon:** @penathal காலத்தின் உதடுகள் என்றும் முணுமுணுக்கும் என் மகா காவியத்தின் இடைவெளிகளை கதை சொல்லலின் வழியே புத்துருவாக்கம் செய்கிறது சிவதாண்டவம்.
*10/5/2009 21:28*

---

**writerpayon:** ஒரு அமெரிக்க நண்பர் எனக்காக 25 கிலோவுக்கு உலக இலக்கிய புத்தகங்களை வலைதளத்தில் ஆர்டர் செய்திருக்கிறார். இன்று அவை வந்து சேர்ந்தன.
*10/5/2009 21:41*

---

**writerpayon:** @nchokkan எனக்கு விஷய கனமெல்லாம் தெரியாது. ஒரு நாளுக்கு இவ்வளவு கொயர் என்று கணக்கு வைத்துக்கொண்டு படிப்பவன் நான்.
*10/5/2009 21:51*

---

**writerpayon:** தெருவோர கடையில் 10 ரூபாய்க்கு கைபேசி கிடைக்கிறது. எந்த பொத்தானை தட்டினாலும் தேவுடாதேவுடா, ரண்டக்க ரண்டக்க பாடல்கள் இனிக்கின்றன. #musicmonday
*10/5/2009 22:00*

---

**writerpayon:** விடைபெறுமுன் பாஷோ கவிதை: படகிற்கு துணையாய் மிதக்கும் / ஒற்றை மேகம் / 29 இன்ச் டிவியில். மொழியாக்கம்: லார்டு லபக்குதாஸ்.
*10/5/2009 23:09*

---

**writerpayon:** விகடன் என் பத்தியை திரும்ப அனுப்பிவிட்டது. தகவல் பிழை ஒன்றுகூட இல்லையாம். எப்படி நடந்தது இந்த தவறு?
*10/6/2009 12:36*

---

**writerpayon:** தகவல் பிழைகள் விட்டுப் போனால் நீங்களே சேர்த்துக்கொள்ளலாம் என விகடனுக்கு அனுமதி அளித்திருந்தேன். தவறுதலாக சரியான தகவலை சேர்த்திருப்பார்கள்.
*10/6/2009 12:38*

---

**writerpayon:** Crime and Punishment:- நாயகன் கொலை செய்துவிட்டு வருத்தப்படுவதை ஜோசப் வான் ஸ்டன்பர்க் சிறப்பாக சித்தரிக்கிறார். படம் வருமுன்பே நாவல் வந்தது.
*10/6/2009 13:10*

---

**writerpayon:** பிரிட்னி ஸ்பியர்ஸ் ரசிகர்கள் மத்தியில் பிரபலமாகி வருகிறேன். 3,471,130 நாட்களில் பிரிட்னிக்கு இணையான பின்தொடர்வோர் எண்ணிக்கை பெற்றுவிடுவேன்.
*10/6/2009 13:14*

---

**writerpayon:** திருப்பத்தூரில் ஓவியர் வான்கா தங்கிய வீட்டை தேடிப்போனால் ஏமாற்றமே மிஞ்சியது. அது இடிக்கப்பட்டு அந்த இடத்தில் டாஸ்மாக் கடை வந்திருக்கிறது.

*10/6/2009 15:16*

---

**writerpayon:** @aayilyan நான் மது அருந்துவதில்லை. அது ரஷ்ய மதுவாக இருந்தாலும்கூட.
*10/6/2009 15:23*

---

**writerpayon:** சாமானியர்கள் தீபாவளிக்கு துணி வாங்குகிறார்கள். நான் டிவிடிகளையும் புத்தகங்களையும் வாங்குகிறேன்.
*10/6/2009 21:31*

---

**writerpayon:** @yathirigan பிரதிகள் எரிவதில்லை என நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? பொதுவாக போகி நாளில் சாரு மற்றும் பெண் கவிஞர்களின் புத்தகங்களை எரிப்பதுண்டு.
*10/6/2009 21:38*

---

**writerpayon:** "வாழ்க்கையில் எதுவும் நிச்சயமில்லை" என்றார் காலையில் ஒரு நண்பர். நல்ல பன்ச்லைன். சோகமாகவும் இருக்கிறது, தத்துவமாகவும் இருக்கிறது. பயன்படும்.
*10/6/2009 22:32*

---

**writerpayon:** கனவில் என்னை சந்திக்க அரைகுறை ஆடையில் ஜப்பானிய பெண்கள் காத்திருக்கிறார்கள். விடைபெறும் நேரம் வந்துவிட்டது.
*10/6/2009 23:19*

---

**writerpayon:** உலகின் முதல் நாவலை எழுதிய முராசாகி அம்மாள் இடோ காலத்து அழகிகள் புடைசூழ காத்திருப்பதை இப்போதே பார்க்க முடிகிறது. விடைபெறுகிறேன்.
*10/6/2009 23:20*

---

**writerpayon:** விடைபெறுமுன் பாஷோவின் கவிதை:- மேகம் மறைக்க / பூமியை சுற்றும் நிலவு / ஒரு திவலை. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/6/2009 23:26*

---

**writerpayon:** நேற்றிரவு தூங்கப் போனபோது நல்ல இருட்டு. காலை எழுந்து பார்த்தால் நல்ல வெளிச்சம். இடைப்பட்ட நேரத்தில் ஏதோ மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.
*10/7/2009 09:16*

---

**writerpayon:** நண்பர்களை அழைத்து இதை தெரிவித்தபோது சிலர் ஆமோதித்து உடனே போனை வைத்தார்கள். சிலர் பதிலேதும் தராமலே போனை வைத்தார்கள். அடுத்த பத்திக்கு இதுதான்
*10/7/2009 09:19*

---

**writerpayon:** யாரையாவது பிடித்து எப்படியாவது ஒரு இந்தி திரைப்படத்துக்கு கதை, வசனம், பாடல்கள் எழுதிவிட வேண்டும். சாரு நிவேதிதா வயிறெரிவார்.
*10/7/2009 10:36*

---

**writerpayon:** சமகால தமிழ் இலக்கியத்தின் பௌலொ கொய்லோவா நான்?
*10/7/2009 10:54*

---

**writerpayon:** எனது அடுத்த நாவல் காபாலிகர்களை பற்றியது. 8ஆம் நூற்றாண்டில் அவர்களது வளர்ச்சி பெருக துவங்கியது. ராஜராஜ சோழன் காலத்தில்...
*10/7/2009 11:13*

---

**writerpayon:** பக்கத்து வீட்டில் இருப்பவர் மகளுக்காக 'ஆடு தன் வரலாறு கூறுதல்' எழுதி என்னிடம் காட்டினார். அதில் ஆடு வெளிப்படுத்தும் ஈகோ

வியப்பேற்படுத்தியது.
*10/7/2009 14:45*

---

**writerpayon:** பயனுள்ள வலைதளம்:- http://www.yourethemannowdog.com/
*10/7/2009 15:16*

---

**writerpayon:** இணையத்தில் பெயருக்கு முன்னால் ரைட்டர் இருந்தால்தான் எழுத்தாளன். என் குடும்பத்தினர்கூட என்னை ரைட்டர் பேயோன் என்றே அழைக்கிறார்கள்.
*10/7/2009 15:24*

---

**writerpayon:** (விளம்பரம்) குறைந்த விலையில் தரமான ஆடைகள் வாங்க - போத்தீஸ்! "பட்டாசு இல்லாம தீபாவளியா? போத்தீஸ் இல்லாம தீபாவளி கொண்டாட்டமா?"
*10/7/2009 16:08*

---

**writerpayon:** ட்விட்டரில் ப்ரைம் டைம் என்பது எந்த நேரம்? எனது விளம்பரதாரர்கள் கேட்கிறார்கள். தகவல் அளித்தால் இன்றிரவு 7 மணிவரை நன்றிக்கடன்பட்டிருப்பேன்.
*10/7/2009 16:21*

---

**writerpayon:** (விளம்பரம்) மதுரையில் பிரம்மாண்டமாய் எழுந்தது லலிதாவின் ஜவுளி கோபுரம். கிராம் 1க்கு ரூ. 100 மதிப்புள்ள பரிசு கூப்பன்* *விதிகளுக்கு உட்பட்டது
*10/7/2009 16:43*

---

**writerpayon:** (விளம்பரம்) இவன்தான் எம் மகன் - my son. இவன் போடுற பனியன்-ஜட்டி Bison.
*10/7/2009 19:33*

---

**writerpayon:** எனது ட்விட்டரில் மேலும் விளம்பரங்கள் வரலாம். என் மேனேஜர் பெங்குவினுடன் பேசிக்கொண்டிருப்பதாக சொல்கிறார். அது எனக்கும் பிடித்த பறவை.
*10/7/2009 19:35*

---

**writerpayon:** @dynobuoy இந்த மாதிரி பேச்சுக்கு லார்டு லபக்குதாஸ் 'ஒவ்வொருவருக்கும் அவரது சொந்தம்' என்பார்.
*10/7/2009 20:05*

---

**writerpayon:** ஆஸ்கார் ரவிச்சந்திரன் கதை சொல்ல அழைத்திருந்தார். நான் கதை சொல்ல துவங்கியதும் தூங்கிவிட்டார்.
*10/7/2009 23:15*

---

**writerpayon:** அவரது மேஜையில் கிடந்த ப்ரிஸ்கிரிப்ஷனில் என் பெயரை பார்த்ததும்தான் எனக்கு விஷயமே புரிந்தது.
*10/7/2009 23:15*

---

**writerpayon:** கதை சொல்லுமுன் நானும் ரவிச்சந்திரனும் விஜயகாந்த் சாரின் 'கஜேந்திரா' பார்த்தோம். படத்திற்கு எவ்வளவு ரிசர்ச் தேவைப்பட்டிருக்கிறது!
*10/7/2009 23:20*

---

**writerpayon:** @orupakkam ரவிச்சந்திரனுக்கு வந்தது சாதாரண தூக்கம். ப்ரிஸ்க்ரிப்ஷனில் கஜேந்திரா, வள்ளி, தோரணை, பாபா, ஆளவந்தான், தலைமகன் ஆகியவையும் இருந்தன.
*10/7/2009 23:25*

---

**writerpayon:** கவிதாலயாவில் அவசரமாக ஒன்லைனர் கேட்கிறார்கள். கூகுளில் தேடினால் "I never forget a face, but in your case I'll make an exception" என வருகிறது.
*10/7/2009 23:53*

---

**writerpayon:** அவர்கள் அதை ஏற்பார்கள் என தோன்றவில்லை.
*10/7/2009 23:54*

---

**writerpayon:** சினிமா எனும் கலை வடிவத்திலேயே ஆர்வம் செலுத்தியதால் சிறுசிறு விஷயங்கள் தெரியாமலே போய்விட்டன.
*10/7/2009 23:59*

---

**writerpayon:** இன்றைய கனவில் என்ன ஸ்பெஷல் என்று கேட்டால் ஹங்கேரிய மாமிகள் என்கிறாள் நித்திராதேவி. கட்டை சாய்த்திடும் நேரம்.
*10/8/2009 00:05*

---

**writerpayon:** விடைபெறுமுன் ஒரு பாஷோ கவிதை:- புல் நுனி மீது / பனித்துளி / கடக்காத தூரம். மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/8/2009 00:13*

---

**writerpayon:** புதன்கிழமை, அக்டோபர் 8, 2009.
*10/8/2009 10:31*

---

**writerpayon:** ஹாலிவுட் படங்கள் laxatives for the soul என்று பெர்டோல்ட் பிரக்ட் சொன்னாராம். என் எழுத்து அதுகூட இல்லையாம். நோயல் சொல்கிறார்.
*10/8/2009 10:40*

---

**writerpayon:** நேற்று எழுதிய கதை:- கிராமத்திலேயே மிக வயதான கிழவி பூப்பெய்தாமல் இருக்கிறாள். கிராமத்தில் மழைபெய்து நூறாண்டுகள் ஆகிவிட்டன...
*10/8/2009 11:03*

---

**writerpayon:** மாந்திரீகம் செய்கிறார்கள். கிழவி பூப்பெய்தினால்தான் வானம் கருக்கும். ஊரிலுள்ள ஒற்றைப் பனைமரத்தை எரித்தால்தான் கிழவி பூப்பெய்துவாள்...
*10/8/2009 11:03*

---

**writerpayon:** பனையை எரிக்கிறார்கள். கிழவி பூப்பெய்துவிட்டு சாகிறாள். அவள் சடலத்தின் மேல் அடைமழை பெய்கிறது. பனைமரத்தை phallic குறியீடாக கொள்ளலாம்.
*10/8/2009 11:04*

---

**writerpayon:** இதற்கு மேல் அர்த்தம் சொல்வது விமர்சகர்களின் தலைவலி.
*10/8/2009 11:04*

---

**writerpayon:** என் புதிய நாடகம் தூக்கு கைதிகளுக்காக அரங்கேற்றப்படவிருக்கிறது. மரணத்தைவிட கொடியவை உண்டு என காட்டுவதற்காம். நல்லவிஷயத்திற்கு பயன்பட்டால் சரி.
*10/8/2009 11:19*

---

**writerpayon:** டிவி தொடர் எடுக்கும் நண்பரிடம் கிழவி கதையை சொன்னேன். பூப்பெய்துவதை நீக்கிவிட்டு கிளை கதைகள் சேர்த்து சீரியல் ஆக்கி தரமுடியுமா என கேட்டார்.
*10/8/2009 11:23*

---

**writerpayon:** நான் இடைவிடாமல் எழுதக்கூடியவன் ஆகையால் எனக்கு டிவி சீரியல் கதை திரைக்கதை வசனம் எழுதுவதுதான் எனக்கேற்ற தொழில்....

*10/8/2009 11:27*

---

**writerpayon:** ஆனால் டிவி சீரியல் தொழில்துறையில் உழைப்பதில் அறிவுஜீவித்தனமாக எதுவும் இல்லை. அதில் இறங்கினால் எனது அறிவுஜீவி இமேஜ் பறிபோய்விடும்.
*10/8/2009 11:30*

---

**writerpayon:** பிறகு எவ்வளவு பில்டப் கொடுத்தும் எனது முந்தைய மகோன்னத நிலையை மீட்க முடியாது.
*10/8/2009 11:30*

---

**writerpayon:** வித்யாசமாக ஏதாவது கதை சொல்லு என்கிறார்கள் சூப்பர்குட் பிலிம்ஸ். ரகசியமாக அவர்கள் படங்களிலிருந்தே ஒரு கதை எடுத்து தந்தால் திருப்தியாவார்கள்.
*10/8/2009 13:36*

---

**writerpayon:** படிப்பது என்றால் மற்றவர்கள் எழுதியதை படித்தல். வாசிப்பது என்றால் எனது படைப்புகளை படித்தல். #அவதானிப்பு
*10/8/2009 13:56*

---

**writerpayon:** 500 ட்வீட்களை எட்டியபின் தொகுதி 2 வெளிவரும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ப்ரின்ட் யுவர் ட்விட்டர்.காம் பதிப்பகம் வெளியிடுகிறது.
*10/8/2009 13:58*

---

**writerpayon:** ஜெயமோகன் தனது வலைதளத்தில் பாதியை இந்து பேப்பரின் Engagements பகுதி போல மாற்றியிருக்கிறார். #தகவல்
*10/8/2009 14:07*

---

**writerpayon:** இலங்கை எழுத்தாளர் போல் தோற்றம் கொடுக்கும் தமிழக எழுத்தாளர்களுக்கு கிராக்கி இருப்பதாக அடையாளம் சாதிக் கூறுகிறார். இப்போது சொல்லி என்ன பயன்?
*10/8/2009 15:05*

---

**writerpayon:** இலங்கை எழுத்தாளர்களைவிட லத்தீன் அமெரிக்க மற்றும் கிழக்கு ஐரோப்பிய எழுத்தாளர்கள் அதிகம் சம்பாதிக்கிறார்கள்.
*10/8/2009 15:06*

---

**writerpayon:** என்னைப் போல் பத்தி எழுதுவது எப்படி? http://bit.ly/c5Gc2 முடியாத காரியம். இருந்தும் தொழில் ரகசியத்தை பகிர்ந்துகொள்ளவே இந்தப் பதிவு.
*10/8/2009 19:01*

---

**writerpayon:** அரும்பாக்கத்தில் நண்பர் வீட்டுக்கு சென்றேன். அருகில் கோயம்பேடு என்ற ஊருக்கு போனேன். அந்த ஊர் சந்தை மிக பிரசித்தி பெற்றது.
*10/8/2009 22:49*

---

**writerpayon:** என் வாழ்நாளில் அவ்வளவு காய் கனிகளை பார்த்ததில்லை. "கீரை" எனப்படும் இலை தழை வகைகளும் குவிக்கப்பட்டிருந்தன...
*10/8/2009 22:51*

---

**writerpayon:** தமிழகத்தின் இயற்கை வளத்தை பற்றிய கொஞ்சநஞ்ச சந்தேகத்தையும் தீர்த்து வைத்துவிடும் கோயம்பேடுரில் காணக் கிடைக்கும் காய் கனி தழை வளங்கள்.
*10/8/2009 22:53*

---

**writerpayon:** கோயம்பேட்டில் வசிப்பவர்கள் வாழ்வில் ஒரு முறையாவது கோயம்பேடை பார்க்க வேண்டும். மனிதவாழ்க்கை இயற்கையுடன் இயைந்ததாக இருப்பதற்கு சிறந்த உதாரணம்.
*10/8/2009 22:55*

---

**writerpayon:** ஒரு பாஷோ கவிதையுடன் விடைபெறுகிறேன்:- இரக்கமற்ற சூரியன் / மலரும் மஞ்சள் பூக்கள் / காற்று வீசுகிறது. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/8/2009 23:48*

---

**writerpayon:** ஊடக சம்பவங்கள் வேதனையளிக்கின்றன. தமிழ் ஊடகங்களுக்கு தேவை ஒரு துப்பட்டா. நடிகர்களுக்கு வாயைப் பொத்த, பத்திரிக்கையாளர்களுக்கு கையை கட்ட.
*10/9/2009 11:51*

---

**writerpayon:** @anbudan_BALA ஸ்மைலி பிடிக்காதென சொல்லவில்லையே. எழுத்தில் காட்சியியல் கூறுகளை பிரயோகிக்கும் பின்நவீன பழக்கத்தை நான் ஆதரிக்கிறேன்.
*10/9/2009 11:55*

---

**writerpayon:** நான் மிகவும் முதிர்ச்சியடைந்த, கண்ணியமான, கண்டதும் பவ்யத்தையும் மரியாதையையும் தூண்டும் எழுத்தாளன் என்பதால் ஸ்மைலி பயன்படுத்துவதில்லை.
*10/9/2009 11:58*

---

**writerpayon:** ஒரு எழுத்தாளனின் எழுத்தும் செயலும் முரண்படுவது இயற்கை. அவன் எழுத்தாளன், செயலாளன் அல்ல. அவன் எழுத்தும் பேச்சும் speech act எனப்படுவது.
*10/9/2009 12:29*

---

**writerpayon:** இளம் படைப்பாளிகளுக்கு:- வலைப்பூவில் வெளியிட்ட படைப்புகளை பிரசுரிக்க பணமில்லையா? மரங்களை காப்பதற்காக புத்தகமாக்கவில்லை என சொல்லிக்கொள்ளுங்கள்
*10/9/2009 14:20*

---

**writerpayon:** மழை பெய்கிறது. அட, சில மழைத்துளிகளுக்கு என்னை அடையாளம் தெரிகிறது! அவை தோளில் வழக்கமாக பட்டாம்பூச்சிகள் அமருமிடத்தில் பட்டுத் தெறிக்கின்றன.
*10/9/2009 14:53*

---

**writerpayon:** அமெரிக்காவில் கலைமாமணி, அண்ணா விருதுகள் இல்லாத குறையை நோபல் பரிசு தீர்த்து வைக்குமா?
*10/9/2009 15:17*

---

**writerpayon:** A Clockwork Orange:- குரூர எதிர்காலத்தில் பதின்வயதினர் பல தவறுகளை செய்கிறார்கள். எதிர்காலத்தை நுட்பமாக சித்தரிக்கிறார் ஸ்டான்லி குப்ரிக்.
*10/9/2009 15:46*

---

**writerpayon:** மனைவி குழந்தையுடன் தாய்வீட்டிற்கு தேசாந்திரம் சென்றார். 2 நாட்கள் யசுஜிரோ ஓஸு இயக்கிய Champions League என்ற காவியத்தை டிவியில் பார்க்கலாம்.
*10/9/2009 17:23*

---

**writerpayon:** உலகம் நான் உலக சினிமா பார்ப்பதாக நினைத்துக்கொள்ளட்டும்.

*10/9/2009 17:26*

**writerpayon:** திடீரென நினைவுக்கு வருகிறது. முன்பு லபக்குதாசிடம் barfly-ஐ எப்படி மொழியாக்குவது என கேட்டேன். 'பாராந்தரி' என்றார். கிண்டலா என தெரியவில்லை.
*10/9/2009 17:30*

**writerpayon:** விடைபெறுமுன் ஒரு பாஷோ கவிதை:- வலையை வீசி / மீனவன் யாழிசைக்கிறான் / மீன்கள் பின்தொடர. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/9/2009 22:52*

**writerpayon:** மொழிபெயர்ப்பாளர் லபக்குதாஸ் என் அறிவுரைப்படி விசிட்டிங் கார்டில் பெயருக்குக் கீழ் "Last in Translation" என்று போட்டுக்கொண்டுள்ளார்.
*10/10/2009 09:34*

**writerpayon:** இன்று யாரும் படிப்பதற்காக புத்தகம் வெளியிடுவதில்லை. ஆண்டிறுதி புத்தக காட்சிக்கும் நூலக ஆர்டருக்கும்தான் வெளியிடுகிறார்கள் என்றார் ஒரு நண்பர்
*10/10/2009 09:53*

**writerpayon:** நண்பர் சொன்ன பின்பே நினைவுக்கு வந்தது.... நாளை காலைக்குள் 12 சிறுகதைகள் எழுதி கொடுத்துவிடுவதாக விஜயா பதிப்பகத்திற்கு சொல்லியிருக்கிறேன்.
*10/10/2009 09:56*

**writerpayon:** "ஏன் கவிதையை மட்டும் விட்டுவைத்திருக்கிறீர்கள்? இலக்கியத்தின் மீது அனுதாபமா" என்று பலர் என்னை கேட்கிறார்கள்....
*10/10/2009 10:15*

**writerpayon:** நான் கவிதை எழுதாததற்குக் காரணம், கவிதை எழுதுவது சுலபம். சவால் இல்லாத எந்த இலக்கிய வடிவத்திலும் எனக்கு ஆர்வம் இருப்பதில்லை.
*10/10/2009 10:17*

**writerpayon:** ஆறுமுகம் ட்ரெய்லர்:- ஒரு விளம்பர இயக்குனரின் காவியம். இளைஞன் ஆடல், பாடல், சண்டைகளில் ஈடுபடுகிறான். நான்லீனியர் முறையில் சிறப்பான திரைக்கதை.
*10/10/2009 11:19*

**writerpayon:** நான் வீட்டிலிருக்கும்போது காபியை டம்ளரிலிருந்து ஒரு சிறிய ஸ்பூனால் எடுத்து குடிப்பேன். அந்த ஸ்பூனை காணவில்லை. எல்லா இடத்திலும் தேடியாயிற்று.
*10/10/2009 11:27*

**writerpayon:** அனேகமாக வேலைக்காரிதான் எடுத்திருப்பாள். ஏழைகளை பற்றி எவ்வளவு நல்லவிதமாக எழுதுகிறேன். இருந்தாலும் அவர்கள் சுபாவம் எப்படி இருக்கிறது பாருங்கள்
*10/10/2009 11:29*

**writerpayon:** கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்ற குறளுக்கு எதிர்நிலையில் வைத்து இவர்களை புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.
*10/10/2009 11:31*

**writerpayon:** தேநீர்கடைக்கு சென்றேன். 10 வயதுகூட நிரம்பாத ஒரு சிறுவன் டீ தந்தான். அவன் கண்களில் ஏக்கம்.... "என்னப் பத்தியெல்லாம் பத்தி எழுதுவீங்களா

சார்?"
*10/10/2009 12:21*

---

**writerpayon:** ஞான ஒளியில் சிவாஜி அல்லது ஜஸ்டிஸ் கோபிநாத்தில் மேஜர் சுந்தர்ராஜன் போல கண்களால் உறுதியளித்துவிட்டு வந்தேன்.
*10/10/2009 12:26*

---

**writerpayon:** @parisalkaaran நான் சொல்லும் சில விஷயங்களாவது புதியவைதான். தயவுசெய்து நம்புங்கள்!
*10/10/2009 12:42*

---

**writerpayon:** ஸ்பூன் கிடைத்துவிட்டது. காது மடலில் இருந்தது. பாவம் வேலைக்காரியை சந்தேகித்துவிட்டேன். அவளாவது நான் எடுக்கவில்லை என முன்பே சொல்லியிருக்கலாம்.
*10/10/2009 12:44*

---

**writerpayon:** @parisalkaaran ஒவ்வொரு எழுத்துப் பிழையிலும் நுண்ணரசியல் இருப்பதாக டெரிடா கூறுகிறார். அவரது ஒத்துழைப்பு இன்றி மொழியியல் மேம்பட்டிருக்காது.
*10/10/2009 16:03*

---

**writerpayon:** டெரிடா போன்ற ஆழமான பொருண்மைகளை பற்றி நான் எழுதுவதில்லை. ஆழமான பொருண்மைகள் பற்றி சிந்திப்பதோடு சரி. பத்தி எழுத்தில் அவைகளுக்கு இடமும் இல்லை.
*10/10/2009 16:18*

---

**writerpayon:** லார்டு லபக்குதாஸ் மொழிபெயர்த்த பாஷோ தொகுப்பு ட்வீட் செய்து முடிந்தது. எனவே பாஷோ கவிதைக்கு பதிலாக என் சொந்த கவிதையுடன் விடைபெறுகிறேன்.
*10/10/2009 21:48*

---

**writerpayon:** இளமையே! இனிமையே! தனிமையே! / தனித்துவமே! சமத்துவமே! கவித்துவமே! / மௌனித்து கவிகிறது சமகால இரவு. நல்லிரவு. #கவிதை
*10/10/2009 21:53*

---

**writerpayon:** நேற்றும் கனவில் கடவுள் வந்தார். கனவு கலைந்தபின்னும் போக மறுக்கிறார். 'இன்னும் கொஞ்ச நேரமிருந்துவிட்டு போகிறேனே' என்று கெஞ்சுகிறார்.
*10/11/2009 14:15*

---

**writerpayon:** Kagemusha:- குரோசாவாவின் காவியம். ஒரு நிலப்பிரபு மரணிக்கிறார். ஒரு திருடன் மரணித்தவராக நடிக்கிறான். சிறப்பான எடிட்டிங், காமிரா நகர்வு.
*10/11/2009 17:02*

---

**writerpayon:** நூலகத்தில் விவேகானந்தர் புத்தகங்களை மிகவேகமாக படித்ததை பார்த்த ஒரு நூலகர் "புத்தகங்களை இவ்வளவு மேகமாக படித்து என்ன பயன்?" என கேட்டாராம்....
*10/11/2009 17:45*

---

**writerpayon:** அதற்கு விவேகானந்தர் சொன்னாராம்: "நீங்கள் ஒவ்வொரு பக்கமாக படிக்கிறீர்கள். நான் ஒவவொரு புத்தகமாக படிக்கிறேன்." நானும் அப்படித்தான்.
*10/11/2009 17:47*

---

**writerpayon:** இமயமலை அடிவாரத்தில் 2 கிரவுண்டில் நூலகம், ஜப அறை அடங்கிய

ஏ.சி. குகை இருப்பதாக ரஜினி சார் என்னிடம் கூறினார். அதை தரிசிக்க வாய்ப்பு கிடைத்தது.
*10/11/2009 18:46*

---

**writerpayon:** காந்தியின் வாழ்க்கை வரலாறை கட்டுரையாக எழுதி அலசியிருக்கிறார் ஜெமோ. தகவல் பிழை நிறைய. காந்தி பற்றி அகிம்சை பற்றி தெரியாதவர்களுக்கு பயன்படும்.
*10/11/2009 20:56*

---

**writerpayon:** "தவறு செய்வது குற்றம்" என்றார் ஒரு நண்பர். மிக ஆழமான கருத்து. நான் அவரிடம் சொன்னதைத்தான் இன்னொரு நண்பரிடம் மேற்கோள் காட்டிக்கொண்டிருந்தார்.
*10/11/2009 21:47*

---

**writerpayon:** இப்படியாகக் கழிந்தது இன்னொரு நாளும். நல்லிரவு.
*10/11/2009 23:13*

---

**writerpayon:** லார்டு லபக்குதாசிடம் போனில் கேட்டு எழுதிய பாஷோ கவிதை:- வலையில் சிக்கியபின்னும் / நீரிலிருக்கும் மீன் / வலைக்குள் பல்டி அடிக்கிறது. நல்லிரவு.
*10/12/2009 01:03*

---

**writerpayon:** வணக்கத்திற்குரியவனின் வணக்கங்கள்.
*10/12/2009 09:08*

---

**writerpayon:** என் மேனேஜரிடம் ஒரு எழுத்தாளர் தவறான புத்தகங்களை நல்ல புத்தகங்கள் என கூறியுள்ளார். வீட்டில் 20 கிலோ மார்க்கெட்டிங் புத்தகங்கள் கிடக்கின்றன.
*10/12/2009 10:10*

---

**writerpayon:** அந்த எழுத்தாளர் யார் என மேனேஜருக்கு அடையாளம் தெரியவில்லை. அவர் யாராக இருந்தாலும் அவருக்கு எனது வலுவான கண்டனங்கள்.
*10/12/2009 10:10*

---

**writerpayon:** நாசரின் முத்திரை விளம்பரங்களிலும் பளிச்சிடுகிறது. அவர் PMP கம்பிகளின் மேன்மையை கம்பீரமாக விளக்கும்போது நான்கு கம்பிகளை வாங்க தோன்றுகிறது.
*10/12/2009 10:36*

---

**writerpayon:** தொன்மம்.
*10/12/2009 11:49*

---

**writerpayon:** எவ்வளவு அழகான வார்த்தை. தொன்மம் தொன்மம் தொன்மம்.... தொன்மம்.
*10/12/2009 11:53*

---

**writerpayon:** அதேபோல ஓம் புரியின் ஜேகே சிமென்ட் விளம்பரத்தை பார்த்த பின் இந்த ஆண்டு ஜேகே சிமென்டை வைத்து ஒரு வீடாவது கட்டிவிட வேண்டும் என முடிவெடுத்தேன்.
*10/12/2009 12:14*

---

**writerpayon:** ராபர்ட் டி நீரோவும் ரியோ டி ஜெனிரோவும் ஒரே ஆளா?
*10/12/2009 12:44*

---

**writerpayon:** புல்லின் நுனியிலிருந்து மலருக்குத் தாவி மகரந்தத்தை முத்தமிடும்

பட்டாம்பூச்சிக்கு கூட கொலைப் பசி எடுக்கும். சாப்பிட்டுவிட்டு வருகிறேன்.
*10/12/2009 13:17*

---

**writerpayon:** @scanman நான் எதையும் கடிகாரத்தைப் பார்த்துத்தான் செய்வது. அதனால்தான் அதற்கு watch என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.
*10/12/2009 14:44*

---

**writerpayon:** லார்டு லபக்குதாசுடன் மதிய உணவு. பாஷோ கவிதை மொழிபெயர்ப்புகள் அடங்கிய 80 பக்க நோட்டுப்புத்தகம் ஒன்று தந்தார் லபக்குதாஸ்.
*10/12/2009 14:45*

---

**writerpayon:** நாயகன் சாவான் என்று வில்லன்கள் ரகசியத்தை அவனிடம் சொல்லி அவதிப்படுகிறார்கள். மற்ற வில்லன்களை பார்த்து கற்கும் அறிவு எந்த வில்லனுக்கும் இல்லை.
*10/12/2009 16:29*

---

**writerpayon:** அந்த 80 பக்க நோட்டுப்புத்தகத்தில் பாஷோ கவிதைகளும் தன் கவிதைகளும் தெரியாமல் 'மிக்ஸ்' ஆகிவிட்டதாக குண்டை தூக்கி போடுகிறார் லபக்குதாஸ்.
*10/12/2009 16:35*

---

**writerpayon:** பிரிட்னி ஸ்பியர்ஸ் ரசிகர்கள் என்னை பின்தொடர்வதும் ட்விட்டர் நிர்வாகத்தினர் அவர்களை நீக்குவதுமாக நடக்கிறது காமாந்தக நாடகம்.
*10/12/2009 18:00*

---

**writerpayon:** நான் அமெரிக்கா வரும்போது எடைக்கு எடை உலக சினிமா டிவிடி தருவதாக சொன்ன வாசகரை பைரசி போலீஸ் கைது செய்து 20 ஆண்டுகளுக்கு உள்ளே வைத்துவிட்டது.
*10/12/2009 19:57*

---

**writerpayon:** கவித்துவமாக விடைபெறும் நேரம் வந்துவிட்டது. லபக்குதாசின் 80 பக்க நோட்டுப்புத்தகத்திலிருந்து அனேகமாக பாஷோவின் கவிதை....
*10/12/2009 23:13*

---

**writerpayon:** மூங்கில்கள் கிசுகிசுக்கும் இரவே / என் தனிமைக்குக் / கொடுப்பாயா கம்பேனி? நல்லிரவு.
*10/12/2009 23:15*

---

**writerpayon:** இரண்டு நாட்களில் நான்கு புத்தகங்கள் எழுதுவது எனக்கே கடினமாகத்தான் இருக்கிறது.
*10/13/2009 13:08*

---

**writerpayon:** Living With the Himalayan Masters:- இமயமலை சாதுக்கள் நீர்மேல் நடக்கும், அந்தரத்தில் நிற்கும் அற்புதங்களை ஸ்வாமி ராமா சிறப்பாக வர்ணிக்கிறார்.
*10/13/2009 15:03*

---

**writerpayon:** தீவிர வாசகன் படிக்க வேண்டிய தனித்துவ சமகால புத்தகம் லிவிங் வித் தி ஹிமாலயன் மாஸ்டர்ஸ்.
*10/13/2009 15:03*

---

**writerpayon:** இந்த பெண் கவிஞர்கள் ஏன் இப்படி குதிக்கிறார்கள்? பெண் அடிமையாக இருந்தால் என்னவாம்? அதனால் எனக்கு ஒரு பிரச்சனையாவது ஏற்பட்டிருக்கிறதா?
*10/13/2009 15:43*

---

**writerpayon:** தீபாவளிக்குள் சொந்த ஜெட் வாங்கும் கனவு நிறைவேறாது போலிருக்கிறது. அநியாய விலை சொல்கிறார்கள். பாதியாகக் குறைத்து கேட்டால்கூட இறங்கி வரவில்லை.
*10/13/2009 17:50*

---

**writerpayon:** @parisalkaaran ஒரு தமிழ் எழுத்தாளன் private jet வாங்கக்கூடாதோ?
*10/13/2009 17:55*

---

**writerpayon:** எஸ்வி சேகர் சொன்னது:- நான் நகைச்சுவை நடிகனாக இருப்பதால் பலர் என்னிடம் வந்து ஒரு ஜோக் சொல்லுங்கள் என்று கேட்பது கடுப்பாக இருக்கிறது...
*10/13/2009 17:56*

---

**writerpayon:** இவர்கள் ராதா ரவியை பார்த்தால் என் பெண்டாட்டி கையை பிடித்து இழுங்கள் என்று அவரை கேட்பார்களா?
*10/13/2009 17:56*

---

**writerpayon:** @ravidreams என்னையும் வாசகர்களையும் ஒரே தராசில் வைத்துப் பார்த்து என்னை இழிவுபடுத்துவதை நான் வரவேற்கவில்லை. வெவ்வேறு தராசுகளில் வையுங்கள்.
*10/13/2009 19:48*

---

**writerpayon:** ட்விட்டரில் என்னைப் போல் பல எழுத்தாளர்கள் பெயருக்கு முன் writer என போட்டுக்கொள்வதை பார்க்கிறேன். சகோதரத்துவ உணர்வு பொங்கிப் பெருகுகிறது.
*10/13/2009 21:34*

---

**writerpayon:** நோயலுக்கு அது பிடிக்காது. பெயருக்கு முன் writer போடுவது இணைய அறிவுசார் பூணூலிசம் என்பார் அவர். எப்போதுதான் புரியும்படியாக பேசப் போகிறாரோ.
*10/13/2009 21:38*

---

**writerpayon:** தொகுதி 2க்கு மேட்டரை நாளை காலைக்குள் தர வேண்டும் என பிரின்ட்யுவர்ட்விட்டர்.காம் பதிப்பகத்தினர் கேட்டிருக்கிறார்கள். முடியுமா பார்ப்போம்.
*10/13/2009 21:49*

---

**writerpayon:** காலத்தின் மாணப் பெரியவன், சமகாலன், தனித்துவன், பணமேஜயன், அமானுஷ்யபுத்திரன்.... எல்லாம் எனது பழைய புனைபெயர்கள். கவிதையுடன் விடைபெறல் தொடரும்.
*10/13/2009 23:46*

---

**writerpayon:** பாஷோவின் கவிதை:- தொலைவில் புகைகிறது ஷின்டோ* / புகைகிறது புகைகிறது / சுருட்டு அணைகிறது. *ஒரு எரிமலை. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/13/2009 23:53*

---

**writerpayon:** ஞாலத்தின் மாணப் பெரியவனின் காலை வணக்கம்.
*10/14/2009 09:27*

---

**writerpayon:** இன்றைய பொழுதை நல்ல சிந்தனையுடன் தொடங்குவோம்....
*10/14/2009 09:28*

---

**writerpayon:** எனக்கும் மற்ற எழுத்தாளர்களுக்கும் என்ன வித்யாசம்? அவர்கள் முத்திரை

பதிக்கிறார்கள். நான் முத்திரையாகவே வாழ்கிறேன்.
*10/14/2009 09:29*

**writerpayon:** க்ரியா ராமகிருஷ்ணன் எனக்கு தற்காலத் தமிழ் அகராதியை அன்பளிப்பாக தந்திருக்கிறார். எனக்காக அதில் சமகாலத் தமிழ் அகராதி என்று அச்சிட்டிருக்கிறார்
*10/14/2009 09:35*

**writerpayon:** தமிழ்நாட்டு கோவில்களைப் பற்றி ஜெமோவிடம் பேசிக்கொண்டிருந்தபோது இடையில் சமஸ்கிருதத்தில் ஏதோ சளபுளவென்று நிறைய சொன்னார்....
*10/14/2009 10:26*

**writerpayon:** எனக்கு சுத்தமாக புரியவில்லை. எனக்கு ஜெமோவின் சமஸ்கிருதம் புரியாது. கோணங்கியின் சமஸ்கிருதம்தான் புரியும்.
*10/14/2009 10:27*

**writerpayon:** இலக்கியம் படைத்துக்கொண்டிருக்கிறேன்.
*10/14/2009 11:02*

**writerpayon:** ஒரு காட்டாற்றின் கரையில் நின்ற ஜென் துறவி லி மு பாய், "ஆற்றைக் கடப்போம்" என்றார். "எப்போது?" என்றார் உடனிருந்த இளம் சீடர்.... #ஜென் #கதை
*10/14/2009 11:39*

**writerpayon:** "ஆறு நம்மைக் கடப்பதற்குள்" என்றார் லி மு பாய். #ஜென் #கதை
*10/14/2009 11:40*

**writerpayon:** @nchokkan பத்தி எழுத்தில் எனக்குப் போட்டியாக ரஜினி சாரே வந்தாலும் ஜெயிக்க முடியாது.
*10/14/2009 13:01*

**writerpayon:** @scanman @nchokkan @ravisuga நான் பார்த்ததிலேயே மோசமான நேரக்கொல்லிகள் ஓடாத கடிகாரங்கள்தான்.
*10/14/2009 13:04*

**writerpayon:** மனிதனும் அவன் உண்ணும் உணவும் இயற்கை என்ற ஒரே பிரகிருதியின் கூறுகள். மனிதன் எதை உண்டாலும் தன்னையே உண்கிறான். பசிக்கிறது. சாப்பிடப் போகிறேன்.
*10/14/2009 13:21*

**writerpayon:** மனிதனும் அவன் உண்ணும் உணவும் இயற்கை என்ற ஒரே பிரகிருதியின் கூறுகள். மனிதன் எதை உண்டாலும் தன்னையே உண்கிறான். இப்போது சாப்பிட்டே ஆக வேண்டும்.
*10/14/2009 13:41*

**writerpayon:** பின்கழுத்தில் "eschew obfuscation" என்று பச்சை குத்திக்கொண்டிருக்கிறார் எழுத்தாளர் நாகார்ஜுனன்.
*10/14/2009 14:38*

**writerpayon:** ஒரு சக சித்தாந்தவாதியின் வேதனை என்னைக் கலங்க வைக்கிறது. http://bit.ly/oqWAv
*10/14/2009 15:01*

**writerpayon:** பத்தி தொழில்துறைக்கு வரவில்லை என்றால் என்னவாகியிருப்பீர்கள் என பேட்டிகளில் தவறாமல் கேட்கிறார்கள். ஜப்பான் சென்று ஜென் துறவி

ஆகியிருப்பேன்.
*10/14/2009 15:43*

---

**writerpayon:** இதுவரை 499 ட்வீட்களை எழுதி வெளியிட்டாயிற்று. இன்னும் ஒன்று எழுதினால் 500 ஆகிவிடும். தொகுதி 2க்கு மேட்டர் தயாராகிவிடும். எரிந்திரா!
*10/14/2009 15:51*

---

**writerpayon:** குறுங்கட்டுரைகள், சினிமா-புத்தக அறிமுகங்கள், அவதானிப்புகள் அடங்கிய ட்விட்டர் படைப்புகளின் தொகுதி 2 செம்பதிப்பு இதோ.... http://bit.ly/vGdky
*10/14/2009 16:20*

---

**writerpayon:** மற்ற எழுத்தாளர்களுக்கும் எனக்கும் என்ன வித்யாசம்? மற்றவர்கள் எழுதிவிட்டு முற்றுப்புள்ளி வைக்கிறார்கள். நான் முத்தாய்ப்பு வைக்கிறேன்.
*10/14/2009 18:32*

---

**writerpayon:** ஜெயமோகனுடன் பேசிக்கொண்டிருந்தபோது ஒன்று புரிந்தது. தஸ் புஸ் என்று பேசினால் ஆங்கிலம். தஸ்ய புஸ்ய என்று பேசினால் சமஸ்கிருதம்.
*10/14/2009 20:13*

---

**writerpayon:** நான் எழுதுவது குப்பையாம். விரதம் போல சிற்றிதழ்களில் மட்டுமே எழுதும் ஒரு தீவிர எழுத்தாளர் நேரில் விமர்சித்தார். நான் அமைதியாக சொன்னேன்....
*10/14/2009 21:02*

---

**writerpayon:** "நண்பரே, உலகில் இருவகை மனிதர்கள் இருக்கிறார்கள்:- பிலிம் காட்டி எழுதுபவர்கள், புலம்புபவர்கள். ஆகவே, புலம்புங்கள்." #வசனம்
*10/14/2009 21:02*

---

**writerpayon:** லார்டு லபக்குதாஸ் இத்தாலோ கால்வினோ பற்றித் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். மொழியாக்கம் செய்து அவரை சாகடித்தது போதாதா, என்னையுமா?
*10/14/2009 21:25*

---

**writerpayon:** எழுத்தாளனின் மரணம் (death of the arthur) என்கிற கருத்தாக்கத்தை அவர் தவறாக புரிந்துகொண்டிருக்கிறார்.
*10/14/2009 21:25*

---

**writerpayon:** @orupakkam அப்படித்தான் ரோலணட் பார்த் கூறுகிறார். ஆர்தர் என்றால் நூலாசிரியர், அல்லது விரிவாக பார்த்தால் படைப்பாளி.
*10/14/2009 21:30*

---

**writerpayon:** விடைபெறுகிறேன். பாஷோ கவிதை:- பனை மரம் / காகம் அமர / விழுந்தது பனை. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/15/2009 00:08*

---

**writerpayon:** நாளை நல்ல சிந்தனைகளுடன் துவக்கினால் அன்று முழுவதும் உற்சாகமாக இருப்பீர்கள். தெரிந்ததுதான். ஆனால் பிரபலமானவர்கள் சொன்னால் புதிய விஷயம் போல.
*10/15/2009 10:28*

---

**writerpayon:** கலைஞர் காப்பீட்டுத் திட்டம் கலைஞருக்கும் உண்டா?
*10/15/2009 10:43*

---

**writerpayon:** இத்தாலோ கால்வினோ எனது நாவலில் வரும் ஒரு கதாபாத்திரத்தைப்

போல. எனக்கு அவரைத் தெரியும். ஆனால் அவருக்கு என்னைத் தெரியாது.
*10/15/2009 11:15*

---

**writerpayon:** அழகிய கொடியே ஆடடி, மைடியர் ஜானிதானடி / நன்றியுள்ள ஜீவனிது பாரடி, மைடியர் ஜானிதானடி / டூபிடாபா டூபிடாபா லொள் லொள்....
*10/15/2009 17:38*

---

**writerpayon:** எழுத்தாளனாக இருந்தால் பில்டப் கொடுத்து கண்ணியம் காக்கவே சரியாக இருக்கிறது. வாய்விட்டு ஒரு பாட்டு பாட முடிவதில்லை.
*10/15/2009 17:38*

---

**writerpayon:** எனக்கு ண -தான் கொலை எழுத்து. வளைந்து மலைப்பாம்பு போலிருப்பதால் எனக்கு பயம். அதை தட்டச்சு செய்தபின் உடனே அடுத்த எழுத்துக்கு போய்விடுவேன்.
*10/15/2009 21:26*

---

**writerpayon:** @elavasam ஒருவருடைய மாயா இன்னொருவருடைய சாயா என இதைத்தான் ரஜினி சார் சொல்வார்.
*10/15/2009 21:33*

---

**writerpayon:** மனைவியிடம் பயன்படுத்த முடியாத வாதத்திறமையை தத்துவத்தில் செலுத்தி கடைசியில் விஷத்தை குடித்து மரணித்திருக்கிறார் சாக்ரடீஸ். என்ன ஒரு வாழ்க்கை!
*10/15/2009 22:35*

---

**writerpayon:** இன்றும் கூட யாருமற்ற பொழுதுகளில் மீசையை முறுக்கியபடி நடனமாட வைக்கும் இந்தப் பாடல் தரும் பசுமையான நினைவுகள்.... http://bit.ly/48ElnW
*10/15/2009 22:53*

---

**writerpayon:** மேடைபேச்சாளர்கள் கைதட்டல் பெறுவதற்கு பேச்சில் இடைவெளி விடுகிறார்கள். சில ட்விட்டர் எழுத்தாளர்கள் RT என்றெழுத இடம் விடுகிறார்கள். #அவதானிப்பு
*10/16/2009 00:03*

---

**writerpayon:** @anbudan_BALA வாழ்த்துக்கள் சில.
*10/16/2009 00:14*

---

**writerpayon:** இன்றிரவு விழித்திருப்பவனின் இரவு. எழுத்து வேலை இருக்கிறது. காலை வரை எழுதும் இந்தப் பேனா.
*10/16/2009 00:23*

---

**writerpayon:** பயனுள்ள வலைதளம்.... http://bit.ly/a2ZQ
*10/16/2009 01:11*

---

**writerpayon:** பாஷோ கவிதை படிக்காமல் சிலருக்காவது தவிப்பு ஏற்பட்டிருக்கும் என நினைத்தேன். உலகம் சலனமற்று இயங்குகிறது.
*10/16/2009 04:53*

---

**writerpayon:** துடுப்பைப் போட்டு / மீன்பிடிக்கும் மீனவனே / வலைக்கு மீன்கள் காத்திருக்கின்றன. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/16/2009 04:55*

---

**writerpayon:** காலையே!!
*10/16/2009 10:08*

---

**writerpayon:** காலையில் டீ சாப்பிடும்போது மாஸ்டர் "வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரம்

இல்லை" என்றார். எழுதி வைத்துக்கொண்டேன். நிறைய பஞ்ச்லைன் சேர்ந்துவிட்டன.
*10/16/2009 10:27*

---

**writerpayon:** ஆழமான கருத்துக்கள் எப்போதுமே மற்றவர்களிடமிருந்துதான் வருகின்றன. இது எனது சொந்த அனுபவம்.
*10/16/2009 10:28*

---

**writerpayon:** எனது சினிமா நண்பர்கள் சிலர் அரசியலுக்கு அழைத்தார்கள். மறுத்துவிட்டேன். கனிமொழியை "கவிதையே!" என்பது போல் என்னை "பத்தி எழுத்தே!" என்பார்கள்.
*10/16/2009 11:20*

---

**writerpayon:** @nchokkan எனது ஒரு வகை எழுத்து இன்னொன்றை பாதிப்பதில்லை. விடுப்புக் கடிதம் எழுதுவது வேறு, ராயல்டி நினைவூட்டல் கடிதம் எழுதுவது வேறு.
*10/16/2009 11:26*

---

**writerpayon:** எனக்கு மாந்திரீய யதார்த்தம் கற்றுக் கொடுத்த மலையாள மந்திரவாதி அச்சச்சுதன் பிள்ளா காலமாகி ஒரு மாதமாகியும் நினைவிலிருந்து அகல மறுக்கிறார்.
*10/16/2009 12:39*

---

**writerpayon:** சினிமாவில் அனைவரும் "artistes"தான். முதல்வர் முன்பு சினிமா துறையில் இருந்ததால் அவருக்கு "கலைஞர்" என்ற பெயர் வந்திருக்கலாம். #அவதானிப்பு
*10/16/2009 13:38*

---

**writerpayon:** தீபாவளியைக் கொண்டாட தமிழ் நான்லீனியர் குறும்பட முயற்சிகளைப் பார்ப்பதை விட சிறந்த வழி ஒன்று உள்ளதா என்ன?
*10/16/2009 14:18*

---

**writerpayon:** இன்று ஹேமாமாலினி பிறந்தநாள். கல்லூரிக் காலத்தில் என் நண்பர்கள் வகுப்புகளை கட் செய்துவிட்டு ஹேமாமாலினி படங்களுக்குப் போனது பசுமையான நினைவு.
*10/16/2009 14:40*

---

**writerpayon:** நடிகைக்கு அழகுத் தூக்கம். எழுத்தாளனுக்கு அறிவுத் தூக்கம். மீண்டும் வருகிறேன்.
*10/16/2009 15:23*

---

**writerpayon:** நான் வெகுஜன இலக்கியவாதி என ஒரு சாராரும் தீவிர இலக்கியவாதி என ஒரு சாராரும் விமர்சிக்கிறார்கள். அவர்களுக்கு புரியவில்லை. நான் ஒரு நடுவாந்தரி.
*10/16/2009 16:25*

---

**writerpayon:** நாட்டார் தீபாவளி கொண்டாடும் முறையை பார்க்க தமிழக தெருக்களில் அலைந்துகொண்டிருக்கிறேன். நான் முதலில் பார்த்தவர் வேங்கடசாமி நாட்டார்.
*10/16/2009 20:54*

---

**writerpayon:** #அடுத்த #தீபாவளிக்கு #பாரம்பரிய #கட்டிடம் #எதையாவது #தகர்த்து #கொண்டாட #வேண்டும்.
*10/16/2009 22:24*

---

**writerpayon:** எரிந்திரா! மனோஜ் நைட் சியாமளனின் 'த ஹாப்பனிங்' படத்தை தலைகீழாக பார்ப்பது போலிருக்கிறது.
*10/16/2009 23:47*

---

**writerpayon:** கவிதை பாஷோவுடையது, புழுவினுள் என்டராகும் / தூண்டில் / வாழைப்பழ ஊசி. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். தீபாவளி வாழ்த்துக்கள் மற்றும் நல்லிரவு.
*10/17/2009 00:07*

---

**writerpayon:** அமானுஷ்யபுத்திரனின் காலை வணக்கம் மற்றும் தீபாவளி வாழ்த்துக்கள்.
*10/17/2009 09:02*

---

**writerpayon:** இனி "A"வை "ஒரு" என மொழிபெயர்க்கப் போவதில்லை என தீபாவளி தீர்மானம் மேற்கொண்டுள்ளார் லார்டு லபக்குதாஸ்.
*10/17/2009 09:46*

---

**writerpayon:** கோனிச்சிவா. கைட்டே குடாசாய்.
*10/19/2009 09:17*

---

**writerpayon:** வேன் மோதி வாலிபர் சாவு. #delayedtweets
*10/19/2009 09:18*

---

**writerpayon:** தீபாவளியால் பல நூறு டன் காகித குப்பை சேர்ந்திருப்பது வருந்தத்தக்கது. நூலகங்களில் உள்ள காகிதக் குப்பை பல்லாயிரம் டன் இருப்பது அதைவிட சோகம்.
*10/19/2009 09:42*

---

**writerpayon:** 20 நயாபைசாவுக்கு கமர்கட் வாங்கி வகுப்பில் ரகசியமாக சாப்பிட்டேன். வீட்டுக்கு போய் பையை கடாசிட்டு லித்துவேனிய கேசட் பாக்கணும். #delayedtweets
*10/19/2009 09:52*

---

**writerpayon:** வகுப்பாசிரியர் லீவு. வகுப்பில அடிதடி. ரகுவுக்கு டவுசர் கிழிந்தது. ஜன்னலோரம் இலந்தை பழம் வாங்கி தின்றுகொண்டே அவதானிக்கிறேன். #delayedtweets
*10/19/2009 10:18*

---

**writerpayon:** 3ஆம் ஆயிரத்தாண்டின் முதல் பத்தாண்டின் கடைசி ஆண்டிற்கு முந்தைய வருடம் ஒரு எழுத்து மேதை இதை ட்வீட் செய்வார். - நாஸ்ட்ராடமஸ். #delayedtweets
*10/19/2009 11:23*

---

**writerpayon:** குருதிப்புனல் பற்றி "கமல்ஹாசனின் சாக்கடைப் புனல்" என ஒரு துண்டு பிரசுரம் அச்சடித்து வினியோகித்து வருகிறார் சாரு நிவேதிதா. #delayedtweets
*10/19/2009 11:34*

---

**writerpayon:** கதறக் கதற காது குத்தி மீண்டும் வீட்டுக்குக் கொண்டுவந்து தூளியில் கிடத்திவிட்டார்கள். மதம் என்றாலே வன்முறைதானா வைதீஸ்வரா? #delayedtweets
*10/19/2009 12:30*

---

**writerpayon:** இன்று கனவில் வர முடியாது என நேற்றைய கனவில் முராசாகி சொல்லிவிட்டாள். மாதவிடாயாம். கனவுலகில்கூட மாதவிடாய் இருந்தால் பிறகு கனவுகள் எதற்கு?
*10/19/2009 13:45*

---

**writerpayon:** RT @writerpayon தெருவோரம் ரூ.10க்கு கைபேசி கிடைக்கிறது. எந்த பொத்தானை தட்டினாலும் தேவுடாதேவுடா, ரண்டக்க பாடல்கள் இனிக்கின்றன. #musicmonday
*10/19/2009 14:09*

---

**writerpayon:** ஸ்டாக்ஹோம் சிண்ட்ரோம் உள்ளதாக சொல்லி சிகிச்சைக்கு ஸ்வீடன் போய்விட வேண்டும். போனபின் யாரையாவது பிடித்து நோபல் பரிசு வாங்கிவிட வேண்டும்.
*10/19/2009 14:55*

---

**writerpayon:** நானே. எனக்கே. என்னையே. என்னுடனே. என்னாலேயே. எனக்காகவே. என் மீதே. என்னை மட்டுமே. என்னைப் பற்றியே..... #ட்விட்டர்எழுத்துப்பயிற்சி
*10/19/2009 15:34*

---

**writerpayon:** 1. வெட்டிமணி 4 வயது சிறுவன். உறவினர் மகன். எனது பிரபலத்தை பயன்படுத்தி அவனை எல்கேஜியில் சேர்க்க அவனுடைய தந்தையுடன் பள்ளிக்கு சென்றிருந்தேன்.
*10/19/2009 17:06*

---

**writerpayon:** 2. என் உறவினர் பெருமையுடன் சொன்னார், அவன் கவிதை எழுதுவானாம். 2 மாதம் வந்து நின்றுபோன ஒரு சிற்றிதழில் 3 கவிதைகள் வந்திருக்கின்றன.
*10/19/2009 17:07*

---

**writerpayon:** 3. அவர் சட்டைப்பையில் இருந்து எடுத்து காட்டிய தாளில் உரைநடை போல் இருந்த ஒரு கவிதையை படித்துவிட்டு குழந்தையின் கன்னத்தை கிள்ளி பாராட்டினேன்.
*10/19/2009 17:07*

---

**writerpayon:** 4. அவனோ லாலிபாப்பை சுவைத்துக்கொண்டே, "புதுக்கவிதைல நான் எதையும் சாதிச்சிட்டதா நினைக்கல" என்கிறான்.
*10/19/2009 17:07*

---

**writerpayon:** பிரச்சினையின் நீள அகலங்களை அலசிப் பார்த்தால் காஜல் அகர்வால் ஆறு கிலோவாவது குறைப்பதே நல்லது என தோன்றுகிறது.
*10/19/2009 21:17*

---

**writerpayon:** பாஷோவின் கவிதையுடன் விடைபெறுகிறேன்:- முள்மீது கால் வைத்து / ரோஜாச் செடி / ஏறுகிறது எறும்பு. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/19/2009 22:31*

---

**writerpayon:** நிறைய டிவிடிகள் பார்த்துவிட்டேன். இனி ஒவ்வொரு படமாக ட்வீட் செய்ய வேண்டும்....
*10/20/2009 09:56*

---

**writerpayon:** மனிதன் இறந்தபின் உயிர் என்ன ஆகிறது என கேட்கிறோம். ஆனால் உடல் என்ன ஆகிறது என கேட்கிறது Shaun of the Dead. உடல் அரசியலின் வன்முறையை அலசுகிறது
*10/20/2009 10:00*

---

**writerpayon:** இமயமலை வழிகாட்டி ஜின்செங் வீட்டு புரோக்கரும்கூட. ரிஷிகேஷில் 3 BHK குகை இருப்பதாக சொல்கிறார். ஆசைதான், ஆனால் எழுத்து பணி

தடுக்கிறது.
*10/20/2009 11:33*

---

**writerpayon:** டினோசார்கள் எண்ணிக்கை குறைந்து வருவதை கவனீத்தீர்களா? #delayedtweets
*10/20/2009 12:23*

---

**writerpayon:** நக்ஸல், தலிபான், தீவிரவாதம், காஷ்மீர் போன்றவை பற்றி எனக்கு கருத்துகள் இல்லை. வன்முறை தவறு என்ற எனது சிந்தனைக்குள்ளேயே இவை அடங்கிவிடுகின்றன.
*10/20/2009 13:50*

---

**writerpayon:** ராட்சத அலைகளால் பல நகரங்கள் அழிவதை நேரில் பார்க்கும் பிரமிப்பை தருகிறது Day After Tomorrow. காமிரா நகர்வு சிறப்பாக எடிட் செய்யப்பட்டுள்ளது.
*10/20/2009 14:14*

---

**writerpayon:** யார் இந்த காந்தி? அவரை எதற்காக சுட்டார்கள்? #delayedtweets
*10/20/2009 14:29*

---

**writerpayon:** தையல் மிஷின் என ஒரு கவிதை எழுதியிருக்கிறார் பிரம்மராஜன். வழக்கம்போல் புரியவில்லை. போனில் கேட்டால் "female android" என விளக்கமளிக்கிறார்.
*10/20/2009 14:50*

---

**writerpayon:** 'இங்கு ஆழமான பேச்சுகள் மட்டுமே கண்டுகொள்ளப்படும்' என போர்டு மாட்டிக்கொள்ள வேண்டியதுதான்.
*10/20/2009 17:07*

---

**writerpayon:** என் ஆசிரியர் லோகையாதான் என்னை எழுத தூண்டியவர் என 'நிளல்' சிற்றிதழ் நேர்காணலில் கூறியபின் அவர் தாக்கப்பட்டுள்ளார். இது கண்டனத்திற்குரியது.
*10/20/2009 17:21*

---

**writerpayon:** நகைச்சுவையாக பேசுவதாக நினைத்துக்கொண்டு முழு போதையில் ஒரு நண்பர் சொல்வது போல, பதில் வாங்குகிறேன்.
*10/20/2009 23:05*

---

**writerpayon:** பாஷோவின் கவிதையுடன்:- சுமாரானவளே, / ஓடம் போன்ற கண்களில் / புரளுவதேன் கண்ணீர்? மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/20/2009 23:13*

---

**writerpayon:** காலையிலிருந்து 100 புத்தக பின்னட்டை விவரங்களை படித்து குறிப்புகளும் எடுத்துக்கொண்டேன். உயிரோட்டமாக உணர்கிறேன், அதை பாக்கியமாக கருதுகிறேன்.
*10/21/2009 10:52*

---

**writerpayon:** சிறுவயதில் ஓரிரு காமிக்ஸ் படித்ததுண்டு. இப்போது படித்தால் குமட்டுகிறது. ஆனால் என் ரேஞ்சை காட்டிக்கொள்ள அவை பற்றி எழுத வேண்டியிருக்கிறது.
*10/21/2009 11:04*

---

**writerpayon:** நான்கைந்து வெளிநாட்டு பெயர்கள், பால்யம், யௌவனம் என சமஸ்கிருத வார்த்தைகள், நாட்டார், புராண கதைகள் பற்றி ஓரிரு வார்த்தைகள்....
*10/21/2009 11:07*

---

**writerpayon:** தேடி எடுத்த தமிழ் காமிக்ஸ் தலைப்புகள், அவசரமாக படித்து ஒப்பேற்றிய காமிக்ஸ் வரலாறு, தேடல், சூழல் என ஆழமான வார்த்தைகள், காமிக்ஸ் பத்தி தயார்.
*10/21/2009 11:11*

---

**writerpayon:** வெளிநாட்டு பத்தி எழுத்தாளர்கள் எழுதுவது போன்ற விஷயங்களுக்கு இலக்கிய பூச்சு கொடுத்து பில்டப் மொழியில் எழுதுவதே எனது வெற்றியின் ரகசியம்.
*10/21/2009 12:02*

---

**writerpayon:** விரைவில் எனது வலைத்தளத்தில் "பாப் அப் விண்டோ"க்களை எதிர்பார்க்கலாம்.
*10/21/2009 12:07*

---

**writerpayon:** வெட்டவெளி தன்னை மெய்யென்றிருப்போர்க்கு பட்டயம் ஏதுக்கடி, குழந்தாய், பட்டயம் ஏதுக்கடி? -- குழந்தைச் சித்தரின் பாடலில் ஜென் விகசிக்கிறது.
*10/21/2009 13:18*

---

**writerpayon:** டிவிடி பின்னட்டைகளில் ஒரு விஷயம் புரியவில்லை. Rated R for language என்று போட்டிருக்கிறது. A for Apple என்றால் R for Rat தானே வர வேண்டும்?
*10/21/2009 14:49*

---

**writerpayon:** பிலிம் சேம்பரில் வெ.சக்கரவர்த்தி யாரிடமோ ஒரு சீன படத்தை விதந்தோதியதை கண்டு படத்தை வாங்கி பார்த்தேன். அது ஒரு பின்நவீனத்துவ முடியலத்துவம்.
*10/21/2009 14:56*

---

**writerpayon:** Advertise here
*10/21/2009 15:17*

---

**writerpayon:** "Malignant Self Love - Narcissism Revisited" என்ற புத்தகத்தை படித்து வருகிறாராம் கமல்ஹாசன். சாருவுக்கும் எனக்கும் தெரிந்த ஒருவர் தந்த தகவல்.
*10/21/2009 15:24*

---

**writerpayon:** புரியாத மொழிகளில் புரியாத காட்சிகளை பார்க்கும் பிழைப்பு எனக்கு தேவையா? உடனடியாக உலக சினிமாவுக்கு உறக்க சினிமா என பெயர் மாற்ற வேண்டும்.
*10/21/2009 16:13*

---

**writerpayon:** நேரம் சரியாக 4:15. நாலேகாலுக்கு என் ட்விட்டர் பக்கத்தை பார்ப்பதாக லார்டு லபக்குதாஸ் கூறியிருக்கிறார். PAUL CELAN!
*10/21/2009 16:15*

---

**writerpayon:** விடைபெறுமுன் பாஷோவின் கவிதை. பனித்துளிகளை எண்ணும் / பட்டாம்பூச்சி எண்ணிக்கை மறந்து / நிற்கிறது. மொழியாக்கம் லபக்குதாஸ். நல்லிரவு.
*10/22/2009 00:21*

---

**writerpayon:** சோகத்திலும் ஒரு அழகு இருப்பதை செக்காவின் கதைகளில் உணர முடியும். இணைப்பிலுள்ள படத்தின் மூலமும் உணரலாம். http://bit.ly/GWoTz
*10/22/2009 16:44*

---

**writerpayon:** என்னோடு சேர்ந்து நயன்தாரா படம் பார்த்த லபக்குதாஸ், "அவளுக்காக

விழுந்துவிட்டேன்" என்றார். திரும்பி பார்த்தால் ஆளை காணோம். கீழே கிடக்கிறார்
*10/22/2009 18:21*

---

**writerpayon:** கதை கரு: ஒரு கிழவன் மீன்பிடிக்க ஏரிக்கு போகிறான். மீன் சிக்கவில்லை. பெண் சாபத்தால் மீனான முனிவர் அது. பொரி தூவிவிட்டு கிளம்புகிறான் கிழவன்
*10/22/2009 20:52*

---

**writerpayon:** காமிக்சையும் எழுதிவிடலாமே என யோசித்தேன். புன்னகை அரும்பியது. அப்போது தற்செயலாக முகத்தை கண்ணாடியில் பார்த்து மிரண்டுபோனேன். நல்ல சகுனம்.
*10/22/2009 21:06*

---

**writerpayon:** ஒரு மாறுதலுக்காக உலக சினிமாவை அயல்மொழி சினிமா என எழுதுகிறேன். கடுகு பெருத்தாலும் காரம் போகாது. ஆனால் மிளகுதானே காரம்.
*10/22/2009 21:24*

---

**writerpayon:** ஒன்று, தெளிவாகப் புரிய வேண்டும், அல்லது சுரோணித காட்சிகள் மலிந்ததாக இருக்க வேண்டும். அப்போதுதான் அயல்மொழி சினிமாவுக்கு மரியாதை.
*10/22/2009 21:27*

---

**writerpayon:** பாஷோவின் கவிதை:- காட்டாற்றில் அடித்துச் செல்லும் / சயூரி இலை மேல் / எறும்புகள் ஊர்கின்றன. மொழியாக்கம் லபக்குதாஸ். நல்லிரவு.
*10/22/2009 22:51*

---

**writerpayon:** எண்ணற்ற உள் மடிப்புகள் கொண்ட காலைக்கு வணக்கம்.
*10/23/2009 09:15*

---

**writerpayon:** ஒரு சிறுகதையில் 40 பத்தி (இது வேறு பத்தி) இருக்க வேண்டும். அதில் ஒரு பத்தி குறைந்தால் அதன் பெயர் குறுங்கதை. #பாடம்
*10/23/2009 09:18*

---

**writerpayon:** வெள்ளிக்கிழமை, அக்டோபர் 23, 2009. #futuredelayedtweets
*10/23/2009 09:46*

---

**writerpayon:** @nchokkan கண்டிப்பாக. உங்களுக்கில்லாத பெங்களூர் மற்றும் அலுவலகம் சாராத மழையா?!
*10/23/2009 10:15*

---

**writerpayon:** பிரம்மராஜனுக்கு புரியவில்லை. கவனக்குறைவான வாக்கியங்களும் அசட்டுத்தனமான, விவரணைக்கு அவசியமற்ற கவித்துவ யத்தனங்களும் உரைநடைக்கு அவசியம்.
*10/23/2009 10:39*

---

**writerpayon:** ஒரு நண்பரின் 5 வயது மகன் 1330 குறள்களையும் ஒப்பித்து பரிசு வாங்கியிருக்கிறான். நானும் பாராட்டி பாழி நாவலை மனப்பாடம் செய்ய தந்திருக்கிறேன்.
*10/23/2009 10:42*

---

**writerpayon:** @aayilyan என்னைப் போல் யாரும் உருவாகிவிடக் கூடாது என்றுதான் அந்த புத்தகத்தை கொடுத்தேன்.
*10/23/2009 10:57*

---

**writerpayon:** இரும்புக்கை மாயாவியில் அ.கொ.தீ.க. வராதாம். லாரன்ஸ்-டேவிட்டில்தான் வருமாம். என் காமிக்ஸ் பத்தியில் தகவல் பிழையாம். நொட்டை சொல்ல 100 பேர்.
*10/23/2009 11:12*

---

**writerpayon:** மஞ்சுபார்கவி, மொரார்ஜி தேசாய், வே.மு. பொதியவெற்பன், சதீஷ் குஜ்ரால், பிரமிள், வடிவுக்கரசி.... இவர்களுக்கெல்லாம் பொதுவான ஒரு விஷயம் என்ன?
*10/23/2009 11:20*

---

**writerpayon:** இவர்கள் எல்லோருமே எனது சென்ற ட்வீட்டில் இடம்பெற்றவர்கள். #அவதானிப்பு
*10/23/2009 11:24*

---

**writerpayon:** நான் அறிவுஜீவியாக இருந்தும் ஏன் ஜிப்பா அணிவதில்லை என பலர் கேட்கிறார்கள். தேவையே இல்லை. ஜிப்பா மனதில் இருக்க வேண்டும்.
*10/23/2009 12:42*

---

**writerpayon:** @anbudan_BALA இரும்புக்கை மாயாவி கதைகளில் அழிவு கொள்ளை தீமை கழகம் என்ற அமைப்பு இல்லை. காமிக்ஸ் பற்றி எழுதும் எனக்கு அதுகூட தெரியவில்லை.
*10/23/2009 14:54*

---

**writerpayon:** நானும் பார்த்துவிட்டேன். 'ஸ்வீப்பிங்' ஸ்டேட்மெண்ட்களுக்கு சிறந்த கருவி ட்விட்டர்தான்.
*10/23/2009 18:07*

---

**writerpayon:** எனது முன்வழுக்கையை நிவர்த்திக்க, ரஜினிசார் கேரளாவிற்கு சென்ற அதே சித்த வைத்தியசாலைக்கு போகிறேன். வைத்திய-மாந்திரீக கலவை. ஞாயிறு மீள்பயணம்.
*10/23/2009 18:24*

---

**writerpayon:** சாருவின் வலைதளத்தை புதிதாகப் பார்த்த ஒரு நண்பர் அது ஒரு இணைய ரியாலிட்டி ஷோ மாதிரி இருக்கிறது என்கிறார். ரியாலிட்டி என்றால் என்ன?
*10/23/2009 22:10*

---

**writerpayon:** மலையாளத்தில் ராவு காலம் என்றால் இரவு நேரம் என்பார் ஜெயமோகன். அவருக்கு அது இரவு நேரம். எனக்கு அது தூங்கும் நேரம். விடைபெறுகிறேன்.
*10/23/2009 22:47*

---

**writerpayon:** ஆனால் பாஷோவின் கவிதையுடன்:- உறங்குவது போலும் / சாக்காடு உறங்கி விழிப்பது / போலும் பிறப்பு. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/23/2009 22:53*

---

**writerpayon:** வணக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
*10/26/2009 09:42*

---

**writerpayon:** அதிகாலைக் கனவு பலிக்கும் என்ற மரபார்ந்த கூற்றில் உண்மை இருக்கக்கூடும். தூக்கம் கலைவதாக கனவு கண்டேன். சற்று நேரத்தில் தூக்கம் கலைந்துவிட்டது.
*10/26/2009 09:46*

---

**writerpayon:** "கேசம் விருத்திக்கும் பஷ்சிம கண்டின்யுவ சல ஆசிரம மாந்திரீக வைத்ய பாஷாணாதி பிரகிருதி" என கோணங்கி சொன்ன கிளினிக்கால் முன்வழுக்கை நீங்கியது.
*10/26/2009 10:03*

---

**writerpayon:** பல சமயங்களில் இருவரும் சேர்ந்துதான் சுற்றுகிறோம். அந்த இடம் அவருக்கு மட்டும் தெரிந்தது எப்படி? ரஜினிசாருக்கும் அவர்தான் சொல்லியிருப்பாரோ?
*10/26/2009 10:04*

---

**writerpayon:** சிபிஐ டைரக்டர் அஸ்வினி குமார் சென்னைக்கு வந்திருக்கிறாராம். துப்பறியும் படங்கள் எடுப்பவராக இருக்கலாம். சந்து கிடைத்தால் சிந்து பாட வேண்டும்.
*10/26/2009 12:00*

---

**writerpayon:** எப்போது தட்ஸ்தமிழ்.காம் என்டர்டெயின்மெண்ட் காலரி பகுதியை கண்டுபிடித்தேனோ அன்றிலிருந்து எனது எழுத்துப் பணி பெரும் பின்னடைவை கண்டிருக்கிறது.
*10/26/2009 12:04*

---

**writerpayon:** ஒரு பாராவிலிருந்து அடுத்த பாராவுக்கு தாவுவது போல ஒரு இனிய பாடல்.... http://bit.ly/q6AER #musicmonday
*10/26/2009 12:33*

---

**writerpayon:** மீண்டும் ஈராக்கில் குண்டுவெடிப்பு. இது எனக்கு சுத்தமாக பிடிக்கவில்லை.
*10/26/2009 13:44*

---

**writerpayon:** இந்த சமூகம் பெண்களால் சீர்கெட்டுப் போன பின்னும் பெண்களை ஏன் மதிப்பதில்லை? #சிந்தனை #அவதானிப்பு #பெண்ணியம்
*10/26/2009 15:33*

---

**writerpayon:** எப்போது பார்த்தாலும் வெள்ளம், விபத்து என்று யாராவது செத்துக்கொண்டிருக்கிறார்கள். உலகம் எப்போதுதான் திருந்துமோ.
*10/26/2009 17:33*

---

**writerpayon:** கண்ணாடிக்கு முன் 4 மணிநேரம் அசையாமல் நின்றால் அதற்கு நமது உருவம் பழகிப்போய் அதில் அச்சாக பதிந்துவிடும் என்கிறார் கோணங்கி. முயற்சிக்கலாம்.
*10/26/2009 20:10*

---

**writerpayon:** மூங்கில் மர நுனியில் / அமர்ந்து மூடுபனிக்குள் / தேடுகிறது குருவி. - பாஷோ. மொழியாக்கம் லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/26/2009 21:37*

---

**writerpayon:** கூதல் என்றால் கடுங்குளிராம். பிறகு எப்படி....
*10/27/2009 09:55*

---

**writerpayon:** என்னதான் இருபது ஆண்டுகளாக எழுதிக்கொண்டிருந்தாலும் தமிழ் எளிதில் பிடிபடும் மொழியாக இல்லை. பல சமயங்களில் எழுதிய பிறகும் பொருள் புரிவதில்லை.
*10/27/2009 09:57*

---

**writerpayon:** பக்கத்து வீட்டில் ஒரு இளம் ஓவியர் இருக்கிறார். ஓவியங்களை வரைய கூடியவர். கியூபிச பாணியில் எனது படத்தை வரைந்திருக்கிறார். http://bit.ly/3lpgbp

*10/27/2009 10:51*

**writerpayon:** ஒரு நைஜீரிய வாசகர் மின்னஞ்சல் அனுப்பினார். ராஜ குடும்பத்தை சேர்ந்தவராம். பண உதவி கேட்கிறார். அதில் ஆதாயம் இருப்பதால் சம்மதித்திருக்கிறேன்.
*10/27/2009 11:01*

**writerpayon:** @aayilyan சாமானியரான உங்களுக்கு அழகியல் உணர்வு இருப்பது எனக்கு சற்று கலக்கத்தை ஏற்படுத்துகிறது.
*10/27/2009 11:08*

**writerpayon:** ஒரு இளைஞன் புரட்சிக்காக வீடியோ கேம் உலகிற்கு மாறுவதை சொல்கிறது வாச்சோவ்ஸ்கி சகோதரர்களின் The Matrix. சிறப்பாக நடிக்கிறார் கீனு ரீவ்ஸ்.
*10/27/2009 13:37*

**writerpayon:** மிக நுட்பமான ஆதிக்க சாதி அரசியலை கலந்து ஒரு நெடும்புனைவு எழுத வேண்டும். யாரிடம் ஆலோசனை கேட்க? எல்லோருமே கற்றுக்குட்டிகளாக இருக்கிறார்கள்.
*10/27/2009 18:05*

**writerpayon:** அட்டன்பரோவும் ஸ்பீல்பரோவும் ஒரே ஆளா?
*10/27/2009 19:48*

**writerpayon:** ஸ்பீல்பர்க், ஜேம்ஸ் காமரூன் படங்கள் உலக சினிமா அல்ல. மஜிதி, கியரோஸ்டமி, குரோசாவா, கிஸ்லோவ்ஸ்கி போன்றோரின் படங்களே உலக சினிமா.
*10/27/2009 20:10*

**writerpayon:** @ilamurugu உலக சினிமா:- தனித்துவ எடிட்டிங், காமிரா நகர்வு கொண்ட ஆங்கிலமல்லாத தனித்துவ கலை வெளிப்பாட்டு திரை வடிவங்கள். வெகுஜன சினிமா:- பிற.
*10/27/2009 21:57*

**writerpayon:** எனக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்யாசம்? மற்றவர்களுக்கு உலக சினிமா பிடிக்கிறது. உலக சினிமாவுக்கு என்னை பிடிக்கிறது.
*10/27/2009 22:44*

**writerpayon:** நித்திராதேவி அண்மிக்கிறாள். கதைசொல்லி விடைபெறுகிறேன் கவிதை சொல்லி.
*10/27/2009 22:54*

**writerpayon:** பாஷோவின் கவிதை:- உறைந்த மீனை / தின்பதற்கில்லை / பனி தாண்டா பட்டினி. தமிழாக்கம்: லார்டு லபக்குதாஸ். நல்லிரவு.
*10/27/2009 23:20*

**writerpayon:** அடுத்த 1000 ட்வீட் செம்பதிப்புக்காக சுமார் 200 ட்வீட்களை இப்போதுதான் நீக்கினேன்.
*10/28/2009 12:05*

**writerpayon:** எனது முதல் ட்வீட் தொகுப்பின் ஆங்கில பதிப்பான 'In Too Deep: Maxims & Aphorisms of Payon' தயாராகிக்கொண்டிருக்கிறது. Picador வெளியிடுகிறது.
*10/28/2009 12:14*

**writerpayon:** ரஷ்ய நாவலில் பெயர்களை ஞாபகம் வைத்துக்கொள்வதே பெரிய

வேலையாக இருக்கிறது. கிரகம்! ஜான்சன், ஜாக்சன் என்று பெயர் வைத்தால் என்ன குறைந்துவிடுமாம்?
*10/28/2009 13:16*

---

**writerpayon:** மற்றவர்களுக்கு காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு என்றால் எனக்கு காலை உணர்வு, மதிய உணர்வு, இரவு உணர்வு. எழுத்து கட்டமைய உணர்வு முக்கியம்.
*10/28/2009 13:59*

---

**writerpayon:** பாஷோ கவிதைகளுக்கு லபக்குதாஸ் ராயல்டி கேட்கிறார். இனி குறுங்கவிதைகள் இல்லை. விடைபெறுகிறார் பாஷோ.
*10/28/2009 20:42*

---

**writerpayon:** கவிதை:- கடைசி அணுகுண்டில் / உலகம் அழிந்தது / துண்டாகிக் கிடக்கும் / என் கை மட்டும் / எழுதுகிறது தொடர்ந்து. நல்லிரவு.
*10/28/2009 22:08*

---

**writerpayon:** "சோலைப்பூவில் மாலைத் தென்றல் பாடும் நேரம்...." இது போன்ற ரம்மியமான பாடல்கள் வருவதில்லை. இங்கு மரங்கள் எண்ணிக்கை குறைய அதுவும் ஒரு காரணம்.
*10/29/2009 13:12*

---

**writerpayon:** டீகடையில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அந்த பக்கம் போன ஒருவர் என்னை பார்த்து "இவர் இவ்வளவு எளிமையா" என மனதினுள் வியந்துகொண்டே போனார்.
*10/29/2009 13:39*

---

**writerpayon:** பிடித்த மேற்கோள். what can a decent man speak of with most pleasure? Answer: Of himself. Well, so I will talk about myself. - தஸ்தாயெவ்ஸ்கி
*10/29/2009 14:58*

---

**writerpayon:** தஸ்தாயெவ்ஸ்கியின் நிலத்தடி மனிதன் கூறிய இந்த வார்த்தைகளில் ஒவ்வொரு எழுத்திலும் உண்மை தெறிக்கிறது.
*10/29/2009 15:00*

---

**writerpayon:** மாமல்லபுரத்தில் பண்டைய வரிவடிவத்தில் "மஹாப்ஸ்" என பொறித்த பல்லவர் கால நாணயங்கள் கிடைத்திருப்பதாக ஒரு தொல்பொருள் துறை நண்பர் கூறுகிறார்.
*10/29/2009 15:56*

---

**writerpayon:** பெரும்சகதிக்கு சுமாரான மதிப்புரை ஒரு பத்திரிக்கையில் வந்தது. ஆசிரியரை போனில் அழைத்து ஆளை விட்டு அடிப்பேன் என மிரட்டியது பசுமையான நினைவு.
*10/29/2009 16:59*

---

**writerpayon:** வாங் கர் வாயின் In The Mood For Love:- வெவ்வேறு நபர்களுக்கு மணமான இருவர் பரஸ்பர காதலின் தயக்கத்தை மிக மெல்ல நடந்து வெளிப்படுத்துகிறார்கள்.
*10/29/2009 17:18*

---

**writerpayon:** @anbudan_BALA அவை பாஷோ கவிதைகள் அல்ல. என்னுடையவைதான். நான் ஒரு closet கவிஞன்.
*10/29/2009 22:37*

---

**writerpayon:** யூடிவி மூவீஸில் Priceless. ஆட்ரே டோட்டுவின் உடை சமகால பிரெஞ்சு

சினிமாவை நோக்கி என்னை ஈர்க்கிறது.
*10/29/2009 22:54*

---

**writerpayon:** @anbudan_BALA நான் இரண்டாவது முறை. Amelie-ம் நல்ல படம். ஏனென்றால் அது BAFTA விருது வாங்கியிருக்கிறது.
*10/29/2009 23:16*

---

**writerpayon:** மௌனம் போல் மெல்லக் கவிகிறது இரவு. விடைபெறுவதற்கான யத்தனிப்புகளை துவங்கும் வேளை.
*10/29/2009 23:17*

---

**writerpayon:** மரத்தடியில் நின்றாலும் / நேராக என் சட்டைப் பைக்குள் / பெய்கிறது மழை. நல்லிரவு.
*10/29/2009 23:44*

---

**writerpayon:** "சிலபல" என்ற வார்த்தையை 30-ஐ தாண்டிய பெண் எழுத்தாளர்களே அதிகம் பயன்படுத்துகிறார்கள். இவர்களிடம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். #அவதானிப்பு
*10/30/2009 10:48*

---

**writerpayon:** அசோகமித்திரனுக்கு சினிமா தொடர்பினால் என்ன பயன்? பிலிம் சேம்பரில் பார்த்ததில்லை. கிம் கி டுக் பார்த்திருக்க மாட்டார். ஏதோ 7-8 புத்தகங்கள்.
*10/30/2009 12:28*

---

**writerpayon:** நாட்டார் மரபுகளை உள்நாட்டார் மற்றும் வெளிநாட்டார் மரபுகள் என பிரிக்கலாம். அம்பயர் ஷெப்பர்ட் பிரித்தானியர் என்பதால் இரண்டாம் வகைப்பட்டவர்.
*10/30/2009 13:01*

---

**writerpayon:** ட்வீட் செய்துவிட்டு இருமுறை பக்கத்தை புதுப்பித்து பார்க்க வேண்டியிருக்கிறது. காலாதீத இடைவெளியில் சிக்கியிருக்கிறது ட்விட்டர்.
*10/30/2009 13:05*

---

**writerpayon:** கருத்து சுதந்திரம் துப்பாக்கி போல சக்திவாய்ந்த ஆயுதம். அது எல்லோருக்கும் கிடைத்துவிடக் கூடாது. அதற்கும் லைசென்ஸ் தரப்பட வேண்டும். #சிந்தனை
*10/30/2009 13:19*

---

**writerpayon:** புதுவகை எழுத்தாளர்கள் பெரும் வளர்ச்சி அடைந்துவருக்கிறார்கள். 2020 வாக்கில் அவர்களும் காலாண்டு வருமான அறிக்கைகளை வெளியிடுவார்கள். #அவதானிப்பு
*10/30/2009 13:22*

---

**writerpayon:** இலக்கிய பிரியனான ஒரு நண்பனுக்கு நரேந்திர மோடி பிடிக்காது. "உன்னைவிட மோசமான ஒரு ஆள் இருக்கமுடியும் என்றால் அது நரேந்திர மோடிதான்" என்பான்.
*10/30/2009 13:31*

---

**writerpayon:** உலக சினிமா சில ஆண்டுகளாகவே இருந்துவரும் பதம். அதற்குமுன் அதை கில்மா என்றுதான் அழைத்தோம். உடலரசியலின் இயங்கியலை அது சித்தரித்ததுதான் காரணம்.
*10/30/2009 13:51*

---

**writerpayon:** சில சமயங்களில் நல்ல மொழிபெயர்ப்புக்கும் மோசமான

மொழிபெயர்ப்புக்கும் இடையில் ஒரு மெல்லிய வரி மட்டுமே உள்ளது. - லார்டு லபக்குதாஸ். #quote
*10/30/2009 15:33*

---

**writerpayon:** அ.ராமசாமி போன்றோர் "பொதுப்புத்தி" என எழுதினால் பொறாமையாக இருக்கிறது. வெகுஜன எழுத்தாளனாக இருப்பதால் என்னால் அந்த சொல்லை எழுதமுடியவில்லை.
*10/30/2009 15:42*

---

**writerpayon:** ஆனால் வெகுஜன இதழ்களுக்கும் இடைநிலை இதழ்களுக்கும் இடையில் என்ன வித்யாசம்? இடைநிலை இதழ்களில் பெண்களின் படங்கள் குறைவாக இருக்கும். #அவதானிப்பு
*10/30/2009 15:44*

---

**writerpayon:** @nchokkan பெண்களைப் படிக்க வைத்தால் அவர்கள் கவிதை எழுதத் துவங்கிவிடும் அபாயம் இருக்கிறது. அதனால் இந்த பிரச்சனையை அப்படியே விட்டுவிடுவோம்.
*10/30/2009 15:53*

---

**writerpayon:** @nchokkan தமிழில் கவிதை எழுதும் பெண்களைப் பாருங்கள். எல்லோருமே படித்தவர்களாக இருக்கிறார்கள். பெற்றோர் அதற்கா படிக்க வைத்தார்கள்?
*10/30/2009 15:58*

---

**writerpayon:** ஆசாமிகள் செத்தால் செய்தி. ஆளுமைகள் செத்தால் அஞ்சலி. #அவதானிப்பு
*10/30/2009 16:05*

---

**writerpayon:** @anbudan_BALA ஔவையாரும் தேசிய கவிக்குயில் சரோஜினி வரதப்பனும்தான் நிறைய படித்து கவிதை எழுதினார்கள். இந்த துப்பட்டா வீசிகளை போல மோசமில்லை.
*10/30/2009 16:14*

---

**writerpayon:** @anbudan_BALA மரணம் என் வாசகர்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. அதனால் இது போன்ற அவதானிப்புகளை அவ்வப்போது பதிவுசெய்கிறேன்.
*10/30/2009 16:16*

---

**writerpayon:** @aayilyan எனது புத்தகம் ஒன்றை கடையில் கேட்டுப் பாருங்கள். உடனே கிடைக்கும். அதே போல சயனைடு வாங்க முயற்சி செய்யுங்கள், தெரியும் சிரமம்.
*10/30/2009 16:28*

---

**writerpayon:** @anbudan_BALA ஹென்ரிக் குறுக்கே நிற்காவிட்டால் அவர் மயிரிழையில் ரீச் செய்திருப்பார். 27ம் நூற்றாண்டில் களப்பிரர் படையெடுப்பின்போது....
*10/31/2009 19:52*

---

**writerpayon:** எழுத்தாளன் எப்படி கிரிக்கெட் பார்ப்பவனாக இருக்க முடியும்? புட்பாலுக்கு உள்ள லத்தீன் அமெரிக்க, ஐரோப்பிய பாரம்பரியச் செறிவு அதற்கு இல்லையே.
*10/31/2009 19:57*

---

**writerpayon:** விக்கெட்டை இழந்து விக்கித்து நிற்கிறது இந்தியா. இனி பல்லாயிரம் ஆண்டு வரலாறு மற்றும் மரபின் செழுமைகூட அதை காப்பாற்ற முடியாது.
*10/31/2009 20:03*

---

| | |
|---|---|
| **writerpayon:** | @sureshkannan70 புட்பாலுக்கு இலக்கியத்தில் இடமுண்டு. பீட்டர் ஹாண்ட்கே சிறப்பான நாவல் எழுதியிருக்கிறார். கிரிக்கெட்டின் இடம் டிவிக்குள்தான். *10/31/2009 20:05* |
| **writerpayon:** | மொகஞ்சதாரோ, ஹரப்பா, சித்தன்னவாசல், தஞ்சை பெரிய கோவில், பதேபூர் சிக்ரி பெருமைகளை விளக்கி நேத்தன் ஹாரிட்ஸை ஸ்லெட்ஜ் செய்யலாம் தோனி. *10/31/2009 20:30* |
| **writerpayon:** | @penathal நான் தமிழ்ச் சூழலின் கார்டு கேரியிங் உறுப்பினன் என்பதால் உங்கள் நம்பிக்கை என்னை மகிழ்விக்கிறது. *10/31/2009 23:12* |
| **writerpayon:** | இரவு உணவைத் தனதாக்கிக்கொண்டு வருகிறேன். #போஷாக்கு *10/31/2009 23:14* |
| **writerpayon:** | அறிவுப் பசி தீர்வதற்குள் தூங்கும் நேரம் வந்துவிட்டது. *11/1/2009 00:25* |
| **writerpayon:** | "Today's 148 was their ninth century partnership" என்கிறது செய்தித்தாள். யாரிடம் விளையாடுகிறார்கள்? ஒன்பதாம் நூற்றாண்டில் ஏது கிரிக்கெட்? *11/1/2009 10:39* |
| **writerpayon:** | @ksawme அவர் மொழிபெயர்த்தவை என நான் கூறியது உண்மையில் எனது சொந்த கவிதைகள்தாம். அவர் பெயரை அனுமதியுடன் பயன்படுத்தினேன். *11/1/2009 11:21* |
| **writerpayon:** | விஸ்பர், கோர்ஃப்ரீ விளம்பரங்களை பீரியட் சினிமாவில் சேர்க்கலாம். ஆனால் அவை சராசரி குறும்படத்தைவிட நீளம் குறைந்தவையாக இருக்கின்றன. #அவதானிப்பு *11/1/2009 12:03* |
| **writerpayon:** | ஜெமினி ஸ்டுடியோவில் சுனைனா தரிசனம். புன்னகைத்தேன். அவர் பதிலுக்கு புன்னகைப்பதற்கு பதிலாக என்னை பார்த்தபடி அம்மாவிடம் ஏதோ முணுமுணுத்தார். *11/3/2009 10:11* |
| **writerpayon:** | மொத்தமே 2660 வரிகள்தான் எழுதியிருக்கிறார் திருவள்ளுவர். இந்தியா சுதந்திரமடைந்த பின்னும் இந்த எண்ணிக்கையில் மாற்றம் இல்லை. #அவதானிப்பு *11/3/2009 11:06* |
| **writerpayon:** | திருவள்ளுவரின் தாடி மீசை ஜடாமுடி போன்றவற்றை பார்த்தால் அவர் வெறும் 2660 வரிகளோடு நிறுத்திவிடக்கூடிய ஆசாமியாகத் தெரியவில்லை. *11/3/2009 11:08* |
| **writerpayon:** | அயல்மொழி திரைப்படங்களில் சுரோணித காட்சிகளில் லைட்டிங் மிகவும் மங்கலாக இருக்கிறது. கதைக்கு அந்த லைட்டிங் தேவையோ என்னவோ. எல்லா கதைக்குமா? *11/3/2009 11:20* |
| **writerpayon:** | பிரம்ம பிரயத்தனம் என எதுவும் இல்லையாம். பகீரத பிரயத்தனம்தான் |

சரியாம். இதையெல்லாம் யாராவது எனக்கு முதலிலேயே சொல்லி தொலைத்திருக்கக் கூடாதா?
*11/3/2009 12:54*

**writerpayon:** வெட்டிமணியை தெருவில் பார்த்தேன். யாருடைய டிபன் பாக்சையோ மனிதத் தலை போல எட்டி உதைத்து விளையாடியபடி கனத்த பள்ளிப்பையுடன் எதிர்ப்பட்டான்.
*11/3/2009 14:11*

**writerpayon:** "துணுக்குகளை கவித்துவ நடையில் எழுதினால் அவை கவிதைகள் ஆகும்" என்றான். பின்னணி:- http://tinypaste.com/76799
*11/3/2009 14:12*

**writerpayon:** கவிதைகளை விடைபெறுவதற்கு முன் தருவதைவிட அவ்வப்போது ஃபில்லர் போல வெளியிட்டுக்கொள்ளலாம் என்கிறான் வெட்டிமணி. நல்ல யோசனையாகத்தான் படுகிறது.
*11/3/2009 14:16*

**writerpayon:** "இந்த புடவையில் எப்படி இருக்கிறேன்" என்று கேட்டார் மனைவி. இந்த புடவையை அணிந்தவள் போல் இருக்கிறாய் என்றேன். 3 மணிநேரம் எழுத நேரம் கிடைத்தது.
*11/3/2009 14:26*

**writerpayon:** (விளம்பரம்) Attack her violently. Doping for amorous connections. In Colombian Chemist we trust. http://bit.ly/sk212e
*11/3/2009 15:14*

**writerpayon:** தன்னடக்கத்தில் எனக்கு நிகர் நானேதான். #அவதானிப்பு
*11/3/2009 19:06*

**writerpayon:** காட்சிப்படுத்துதல் என்றால் என்ன? தானாக நடக்கும் காட்சியை இயக்குனர் படாதபாடு படுத்தி தன் இஷ்டத்திற்கு மாற்றுவார். இதுவே காட்சிப்படுத்துதல்.
*11/3/2009 20:52*

**writerpayon:** இங்க்மார் பெர்க்மன் கடைசி காலத்தில் பயன்படுத்திய bed pan ஈபே வலைதளத்தில் விற்பனைக்கு வந்திருப்பதாக நண்பர் கூறுகிறார். விலைதான் மிக அதிகம்.
*11/3/2009 20:57*

**writerpayon:** குழந்தைகளுக்கான கதை ஒன்றை எழுதிக்கொண்டிருக்கிறேன். இன்றிரவுக்குள் வெளியிடுவேன். படிக்காதவர்களுக்காக நாளை ஒருமுறையும் இணைப்பை அளிக்கிறேன்.
*11/3/2009 21:41*

**writerpayon:** மகாபாரதத்தில் வரும் விசித்திரவிரியன் என்ற நாகத்தை பற்றி கதை எழுத ஆசை. தொடர்பாக ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறேன்.
*11/3/2009 21:48*

**writerpayon:** 'வண்ணத்துப்பூச்சியும் விசித்திர ஓவியனும்' - குழந்தைகளுக்கான மீபுனைவு:- http://bit.ly/GvHM5
*11/3/2009 22:33*

**writerpayon:** மனிதனுக்கும் உணவுக்கும் உள்ள உறவு முக்கியமானது. அத்தகைய உறவை பேணிவிட்டு வந்து விடைபெறுகிறேன்.
*11/3/2009 22:50*

---

**writerpayon:** ஒரு சோக செய்தி:- கிளாத் லெவி ஸ்டிராஸ் மரணித்துவிட்டார். http://www.nytimes.com/2009/11/04/world/europe/04levistrauss.html
*11/3/2009 23:53*

---

**writerpayon:** மழை வந்தால் எழுதுவதற்கென சில ட்வீட்களை வைத்திருக்கிறேன். மழையைத்தான் காணவில்லை.
*11/4/2009 11:12*

---

**writerpayon:** மழைக்கிறது.
*11/4/2009 14:46*

---

**writerpayon:** மழையைப் போல் நினைவுகளை கிளறும் இயற்கை நிகழ்வு வேறெதுவும் இல்லை.
*11/4/2009 15:46*

---

**writerpayon:** சிறுவயதில் வெளியே சென்று விளையாட முடியாத நான் கூரையிலிருந்து சொட்டும் மழைநீர் தரையை தொடுவதற்குள் விரலால் சுண்டி விளையாடிய நாட்கள்...
*11/4/2009 15:57*

---

**writerpayon:** ஆயிரம் தேவர்கள் வானில் நின்று மூத்திரம் போவதே மழை என சிறுவயதில் தெரிந்துகொண்டேன். இப்போது நம்பாதது போல் காட்டிக்கொள்ள வேண்டியுள்ளது.
*11/4/2009 16:36*

---

**writerpayon:** பரிணாம வளர்ச்சியடைவது மனிதன் மட்டுமல்ல, அவனது வயதும்தான். ஒவ்வொரு ஆண்டும் அடுத்தடுத்த வயதுகளை மனிதன் அடைகிறான். #அவதானிப்பு
*11/4/2009 18:37*

---

**writerpayon:** எனக்கெல்லாம் சாகித்ய அகாதமி விருது கிடையாதா?
*11/4/2009 20:16*

---

**writerpayon:** விடைபெற முகாந்திரம் இருப்பதால் அதற்கான முஸ்தீபுகளில் இறங்கும் யத்தனிப்புகளைத் தொடங்க விழைகிறேன்.
*11/4/2009 21:46*

---

**writerpayon:** இரவோடு இரவாக / கடந்தது / இரவு. #கவிதை
*11/4/2009 22:37*

---

**writerpayon:** முதிர்காலை வணக்கம்.
*11/5/2009 11:35*

---

**writerpayon:** என் கதையை நீ வாசி / உன் கதையை நான் எழுதுகிறேன். #கவிதை
*11/5/2009 12:19*

---

**writerpayon:** திருக்குறள் சிறப்பான தனித்துவ இலக்கிய படைப்பு. ஆனால் அது எத்தனை போர்களை தடுத்தது? எத்தனை உயிர்களை காப்பாற்றியது? #சிந்தனை
*11/5/2009 12:45*

---

**writerpayon:** காமிக்ஸ் குழந்தைத்தனமான, முதிர்ச்சியற்ற ரசனையுள்ளவர்களுக்கு மட்டுமே. காமிக்ஸ் தனித்துவமான ஒரு சமகால புனைவு வடிவம்.

கதைசொல்ல சிறந்த ஊடகம்.
*11/5/2009 16:16*

---

**writerpayon:** ஒரு ஜென் கதை படித்தேன். சுத்தமாக புரியவில்லை. வேலை வெட்டி இல்லாமல் மடாலயத்தில் ஓபியடிக்கும் துறவிகளின் பம்மாத்துதான் ஜென் கதைகள்.
*11/5/2009 16:37*

---

**writerpayon:** வாழ்வின் நுட்பமான உண்மைகள் நம் பார்வையிலிருந்து தப்பிவிடுகின்றன. ஜென் கதைகள் தமது புதிரான புனைவு உத்தி மூலம் நமக்கு உணர்த்துவது இவற்றையே.
*11/5/2009 16:40*

---

**writerpayon:** ஜென் கதைகளில் பார்த்தோமானால் பௌத்த பிக்குகள் தமிழ் சினிமாவில் சார்லி, மீசை முருகேஷ் போல கதைக் கருவியாக (plot device) தொழிற்படுகிறார்கள்.
*11/5/2009 16:45*

---

**writerpayon:** ஆழமாக ஏதாவது சொல்ல வேண்டும் போல் தோன்றுகிறது. ஆனால் ஒன்றும் தோன்றவில்லை. மழைதான் மனதை கனவு நிலையில் ஆழ்த்தி தத்துவ சிந்தனையை தடுக்கிறது.
*11/6/2009 09:54*

---

**writerpayon:** அசோகமித்திரன் சிறுகதை ஒன்றை படித்தேன். எனக்கு அதுபோல் எழுத வரவில்லை என வருத்தமேற்பட்டது. அ.மி. என் கதையை படித்தால் அதேபோல வருந்துவார்.
*11/6/2009 13:32*

---

**writerpayon:** @sendhilkumaar அமரர் கல்கி, அமரர் சுஜாதா போல அமரர் புதுமைப்பித்தன், அமரர் மௌனி என்று சொல்வதுண்டா? சிந்தித்துப் பாருங்கள்....
*11/6/2009 14:48*

---

**writerpayon:** நாளொரு மேனியாக இருப்பவர்கள் நடிகைகள். பொழுதொரு வண்ணமாக இருப்பவர்கள் அரசியல்வாதிகள். #அவதானிப்பு
*11/6/2009 14:49*

---

**writerpayon:** ஒரு ராயலடி காசோலை எனக்கு தெரியாமலே நகைச் சீட்டுக்கு போய்விட்டது.
*11/6/2009 16:37*

---

**writerpayon:** நாம் மோஸ்தர்களில் சிக்கிக்கொள்ளக் கூடாது. மோஸ்தர்கள்தான் நம்மிடம் சிக்கிக்கொள்ள வேண்டும். #அறிவுரை
*11/6/2009 18:06*

---

**writerpayon:** @orupakkam நடிகைக்கு நடிக்காதபோதும் அழகாகத் தெரிய வேண்டிய நிர்ப்பந்தம். எழுத்தாளனுக்கு எழுதாதபோதும் சுவாரசியமாக உரையாடும் நிர்ப்பந்தம்.
*11/6/2009 20:49*

---

**writerpayon:** நான் போகும் ஊருக்குப் பெருமை. போகாத ஊருக்கு வலி. #அவதானிப்பு
*11/6/2009 20:57*

---

**writerpayon:** சுரோணித வலைதளங்களை பார்த்துப் பார்த்து கண்களிரண்டும் வீங்கி முலைகளாயின.
*11/6/2009 21:09*

---

| | |
|---|---|
| **writerpayon:** | மடிமீது வைத்து கொஞ்சினாலும் மடிய மாட்டேன் என்கிறது மடிக் கணினி.<br>*11/6/2009 21:45* |
| **writerpayon:** | 1000வது ட்வீட்டிற்காக காத்திருப்பது திருமணத்திற்காக காத்திருந்ததை காட்டிலும் ஏக்கத்தை ஏற்படுத்துகிறது.<br>*11/6/2009 21:49* |
| **writerpayon:** | சாரு தளத்தில் ஒவ்வொரு கட்டுரைக்கும் தன் படம் ஒன்றை போடுகிறார். கட்டாயம் 10000 கட்டுரைகள் எழுதுவார். 10000 சாரு படங்களை இணையம் தாங்குமா?<br>*11/6/2009 23:01* |
| **writerpayon:** | மழை வணக்கம்.<br>*11/7/2009 10:23* |
| **writerpayon:** | @eramurukan Wrong finger pointing wrong person. கேட்டது நானென்றா சொன்னேன்? என்னை யாரென கேட்ட முதல் ஆள் நீங்கள். வரலாறு உங்களை வரவேற்கிறது.<br>*11/7/2009 10:28* |
| **writerpayon:** | வீட்டிற்குள்ளேயே கிடப்பதால் மழை சப்தம் ஜன்னல் வழியே கேட்டுக்கொண்டிருக்கிறது. வெளியே சென்றால் சப்தத்தை நேரடியாக கேட்கலாம்.<br>*11/7/2009 10:49* |
| **writerpayon:** | ரியாலிட்டி ஷோவுக்கு வசனம் எழுத அழைத்தார்கள். சரியென்று போனால் அருகில் அமர்ந்து ஒவ்வொரு வரிக்கும் திருத்தம் சொல்கிறார்கள். விலகிவிட்டேன்.<br>*11/7/2009 11:09* |
| **writerpayon:** | என் ஆளுமைக்கு பொருத்தமான வாகனம் டயோட்டா இன்னோவா. அது ஒரு சமகால தனித்துவ யாந்திரீக அற்புதம். வாங்க ஆசை, ஆனாலும் இமேஜ் தடுக்கிறது....<br>*11/7/2009 12:03* |
| **writerpayon:** | வாழ்க்கையே பெரும் சூதாட்டம். மனிதன் நியாயமாக ஆடினாலும் போங்காட்டம் ஆடினாலும் கடைசியில் கோரமாக சாக வேண்டும். இதையே மகாபாரதம் உணர்த்துகிறது.<br>*11/7/2009 13:05* |
| **writerpayon:** | குழந்தைகளே முதுமைவரை காத்திருக்காதீர்கள். இளமை ஊசலாடும்பொழுதே மழையில் விளையாடி மகிழுங்கள்.<br>*11/7/2009 14:29* |
| **writerpayon:** | சென்ற ட்வீட்டில் ஊஞ்சலாடும்பொழுதே என படிக்கவும்.<br>*11/7/2009 14:32* |
| **writerpayon:** | கலாச்சாரத்தை சினிமா சீரழிப்பதான புலம்பல் மிகுந்த அலுப்பூட்டுகிறது. நமக்குள்ள ஒரே ஜனரஞ்சக கலை வடிவம் சினிமாதான். அதை தூற்றுவதால் வருவதென்ன?<br>*11/7/2009 16:24* |

**writerpayon:** பகல் தூக்கத்தில் கனவு வேண்டுமென யார் கேட்டார்கள்? முருகப் பெருமான் வேலால் நெற்றியில் 'அடங்கொப்புறானே' என எழுதுகிறார்.
*11/7/2009 18:19*

---

**writerpayon:** (விளம்பரம்) ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா / உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா / கனவுகள் மெய்ப்பட ராம்ராஜ் பனியன்
*11/7/2009 19:37*

---

**writerpayon:** தனக்குவமை இல்லாதானின் காலை வணக்கம்.
*11/8/2009 10:41*

---

**writerpayon:** சமகால உலக சினிமா. #threewordsaftersex
*11/8/2009 14:59*

---

**writerpayon:** ரீவைண்ட் பொத்தான் எங்கே? #threewordsaftersex
*11/8/2009 14:59*

---

**writerpayon:** நினைவிருக்கட்டும்:- முதலில் சம்பவ கதை, பிறகு ஒரு புத்தகத்தை பற்றி சிறிது, அடுத்து ஒரு அயல்மொழி படத்தை பற்றி சிறிது. முத்தாய்ப்பாக மொக்கை.
*11/8/2009 21:32*

---

**writerpayon:** சென்னையில் மழை எப்போதும் ஓய்ந்த பின்னரே அதிகம் பெய்கிறது. #அவதானிப்பு
*11/8/2009 21:38*

---

**writerpayon:** @arulselvan @dynobuoy இன்னும் 2000 ஆண்டுகளுக்கு உலகம் இருக்கும் என நான் நம்பவில்லை. எனது திட்டங்கள் அடுத்த 200 ஆண்டுகளுக்குத்தான்.
*11/8/2009 21:41*

---

**writerpayon:** ஒன்று எனக்கு கவிதை புரியவில்லை அல்லது கவிதை என்பதே மோசடி. இரண்டில் எது உண்மை என புரியவே கவிதை எழுதுகிறேன். இன்னும் விடை கிடைத்தபாடில்லை.
*11/8/2009 21:48*

---

**writerpayon:** லார்டு லபக்குதாஸ் போனில் அழைத்து கோவிலில் வலி என புலம்புகிறார். என்ன மருந்தை பரிந்துரைப்பது?
*11/8/2009 22:40*

---

**writerpayon:** ஐரோப்பிய கிராமப்புறத்தில் தமிழ்நாட்டு ரம்மியத்தின் விரக தாபம் ஒலிக்கும் பாடல். http://bit.ly/4vaqYh #musicmonday
*11/9/2009 18:55*

---

**writerpayon:** பின்நவீன புனைவுகள் எழுதும் நண்பர் ஒருவருடன் பேசினேன். அவருடைய புதிய நாவல் முழுவதும் இடாலிக்சில் இருக்குமாம். வித்யாசமான முயற்சிதான்.
*11/9/2009 19:05*

---

**writerpayon:** அன்னியப்பட்டு வாழும் மனிதர்களின் வாழ்வியலை குறியீடாக கொண்டுள்ளது Teletubbies. திரைக்கதை, ஒலி அமைப்பு, கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் சிறப்பு.
*11/9/2009 19:21*

---

**writerpayon:** எழுத்திலும் சினிமாவிலும் கவித்துவம் முக்கியம். கவித்துவத்தைவிட உயர்ந்த அழகியல் மதிப்பீடு உண்டா? உண்டு. அதன் பெயர்

உயர்கவித்துவம்.
*11/9/2009 21:44*

---

**writerpayon:** பத்திரிகையாளர்களுக்கு குவார்ட்டர்ஸ் தந்திருப்பது போல் எழுத்தாளர்களுக்கும் தர வேண்டும். அந்த இடத்திற்கு தனித்துவபுரம் என பெயரிட வேண்டும்.
*11/9/2009 21:53*

---

**writerpayon:** கனத்த மழை. பூமித் தாய்க்கு மழை கனக்கிறது.
*11/10/2009 10:53*

---

**writerpayon:** சுதந்திரம் எல்லோருக்கும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.
*11/10/2009 11:00*

---

**writerpayon:** என் மேஜை மேல் கிடக்கும் தமிழ்ப் புத்தகத்தை பார்க்கவே இளக்காரமாக இருக்கிறது. போயும் போயும் தமிழ்.
*11/10/2009 14:11*

---

**writerpayon:** அடடே, அது என் புத்தகம்தான்.
*11/10/2009 14:11*

---

**writerpayon:** இதை யார் கொண்டு வந்து இங்கே வைத்தது?
*11/10/2009 14:12*

---

**writerpayon:** பத்தி எழுத்தாளர்கள் உலகை ஆள்கிறார்கள்.
*11/10/2009 16:49*

---

**writerpayon:** 1. பிரசாத் ஸ்டுடியோ போகும் வழியில் ஒரு பரம வாசகருடன் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு பள்ளி தோழன் வந்தான்.
*11/10/2009 16:52*

---

**writerpayon:** 2. அவன் என்னை 'டா' என பேசியதை பார்த்த வாசகர் அதிர்ச்சியில் மூர்ச்சித்துவிட்டார். கிளினிக்கில் சேர்த்தோம்.
*11/10/2009 16:52*

---

**writerpayon:** எனக்கெல்லாம் ஞானபீட விருது கிடையாதா?
*11/10/2009 18:04*

---

**writerpayon:** வர்ஜினியா வுல்ஃப்பின் To the Lighthouse படித்துக்கொண்டிருக்கிறேன். சுத்தமாக புரியவில்லை. எனக்கு விருப்பமான சாகித்ய சுந்தரி அவர்தான்.
*11/10/2009 18:42*

---

**writerpayon:** வர்ஜினியாவின் To the Lighthouse-ல் வார்த்தைகள் தனித்தனியாக படித்தால் பொருள் தருகின்றன. சேர்த்து வாக்கியங்களாக படித்தால் புரியவில்லை.
*11/10/2009 18:46*

---

**writerpayon:** வர்ஜினியா வுல்ஃப், போர்ஹே, பாஷோ போன்ற எழுத்தாளர்களுக்கு ஒரு #அறிவுரை: ஆழமாக எழுதுங்கள், ஆனால் அளவு மீறி ஆழமானால் அது அதல பாதாளமாகிவிடும்.
*11/10/2009 18:49*

---

**writerpayon:** சென்ற ட்வீட் எனது 999-வது ட்வீட். இன்னும் ஒரு ட்வீட் எழுதினால் 1000 ஆகிவிடும். இரவுக்குள் 1000-வது ட்வீட்டை எழுதிவிட வேண்டும்.
*11/10/2009 18:50*

---

**writerpayon:** முதல் 100, 500, 1000 ட்வீட்களை வெளியிடுவதற்கு முன் முகமன்கள், context

இல்லா மறுமொழிகள், நன்றிகளை நீக்கினால் மின்னூல் முழுமையாக இருக்கும்.
*11/10/2009 19:21*

---

**writerpayon:** உருவகத்தை உருவினால் எதுவும் மிஞ்சாது.
*11/10/2009 20:03*

---

**writerpayon:** இலக்கியம் என்றாலே பின்நவீனத்துவம்தான் என்கிறார் Sir William Layman.
*11/10/2009 20:07*

---

**writerpayon:** வெளியே போகிறேன். தெருவில் சிலரை தற்செயலாக சந்தித்து அது பற்றி ட்வீட் செய்ய வேண்டியிருக்கிறது. உடனே அல்ல.
*11/10/2009 20:15*

---

**writerpayon:** @vanampadi நீங்கள் கூறுவதிலும் உண்மை உள்ளது. உண்மையின் பாரபட்சமின்மையை வியக்கிறேன்.
*11/10/2009 20:19*

---

**writerpayon:** ட்விட்டரிலும் இலக்கியத் திருட்டா? எரிந்திரா!
*11/10/2009 20:58*

---

**writerpayon:** வணிக எழுத்தாளர்களுக்கு ஒரு அறிவுரை:- கமர்ஷியல் எழுத்தாளர் என்று சொல்லிக்கொள்ளாதீர்கள். ஜல்லியில் ஐக்கியமாகுங்கள்.
*11/10/2009 21:21*

---

**writerpayon:** வணிக எழுத்து என சொல்லாவிட்டால் நமது புத்தகங்கள் விற்குமா என கவலை கொள்ளாதீர்கள். இப்போது ஜல்லி எழுத்தும் வணிக எழுத்துக்கு சமமாக விற்கிறது.
*11/10/2009 21:23*

---

**writerpayon:** @writerpara ஜல்லிக்கு கிடைக்கும் மரியாதை வணிகத்திற்கு கிடைப்பதில்லை. அதனால் ஜல்லித் தோல் போர்த்திய வணிகத்தில் தவறில்லை என்கிறேன்.
*11/10/2009 21:31*

---

**writerpayon:** @writerpara நீங்கள் கூறுவது புரியவில்லை. இருந்தாலும் அதை நான் ஒப்புக்கொள்ள முடியாது என்பதால் இந்த ட்வீட்டை நான் வெளியிடப் போவதில்லை.
*11/10/2009 21:45*

---

**writerpayon:** @writerpara இயற்கை அன்னைக்கு தமிழ் தாய் என்றாலே ஆகாது. குறுக்கிட்டுக்கொண்டே இருப்பாள்.
*11/10/2009 22:15*

---

**writerpayon:** ஓராயிர திவ்யப் பிரபந்தம்:- http://www.scribd.com/doc/22370138. உண்ட, பதிப்பித்த களைப்புடன் விடைபெறுகிறேன். நல்லிரவு.
*11/10/2009 22:51*

---

**writerpayon:** இன்னும் வெயிலை காணவில்லை. மழை இல்லாமல் மூளாது என சொல்லலாமா?
*11/11/2009 10:34*

---

**writerpayon:** புத்தகம் போடுவதற்காக ட்வீட் எழுதுவதை சிலர் விமர்சிக்கிறார்கள். இவர்களில் சிலர் புத்தகம் போடுவதற்காக நண்பர்களுக்கு கடிதம் எழுதுகிறார்கள்.
*11/11/2009 10:35*

---

**writerpayon:** தமிழ்ச் சூழல் என்ற வார்த்தைகளை பயன்படுத்தி சில நாட்கள் ஆகிவிட்டன. இனியும் பயன்படுத்தாவிடில் அறிவுலகம் விலக்கி வைத்துவிடும். தமிழ்ச் சூழல்.
*11/11/2009 10:48*

---

**writerpayon:** இரண்டாவது முறையாக Teletubbies பார்க்கிறேன். இரண்டாவது பார்வையில் புதிய அர்த்தங்கள் கிடைக்கின்றன. தாங்க முடியாத தனித்துவம் உள்ள சமகால படம்.
*11/11/2009 11:55*

---

**writerpayon:** @nchokkan இலக்கியம் எல்லோராலும் எழுதப்பட வேண்டும். (அப்போதுதான் எங்கள் அருமை தெரியும்)
*11/12/2009 10:59*

---

**writerpayon:** லியோனார்டோ டிகாப்ரியோவுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்.
*11/12/2009 11:17*

---

**writerpayon:** சென்னை பேச்சு மொழியில் மஞ்சா சோறு இருப்பது போல் ஆங்கிலத்தில் உலோகம் உள்ளது. You must prove you're metal என்கிற பிரயோகம் புழங்குகிறது.
*11/12/2009 11:20*

---

**writerpayon:** குறிப்பு: ரஜினிசார் என்பது ஒரே வார்த்தை. ரஜினி சார் என பிரிக்கக்கூடாது.
*11/12/2009 11:38*

---

**writerpayon:** ஜென் என ஒன்று இல்லவே இல்லை என்பதுதான் ஜென். #அவதானிப்பு
*11/12/2009 13:20*

---

**writerpayon:** ஜென்னின் இல்லாமை தத்துவத்தை நான் நம்புவதில்லை. அது எனக்கு பெரும் பீதியை தருகிறது. அதன் கவித்துவ அம்சங்கள் மட்டுமே எனக்கு விருப்பம்.
*11/12/2009 13:51*

---

**writerpayon:** காட்டாக நிலா, மூங்கில் காடு, பனித்துளி, பட்டாம்பூச்சி, இலை நுனி, கடல், ஓடம் முதலியவை.
*11/12/2009 13:52*

---

**writerpayon:** புனைவு எழுத ஐடியாக்களை திருட அயல்மொழி மன்றங்களே சிறந்த இடங்கள். கூகுள் ட்ரான்ஸ்லேட் மூலம் திருடலாம். யாருக்கும் தெரிய சாத்தியமில்லை.
*11/12/2009 14:28*

---

**writerpayon:** @sendhilkumaar நான் என் ரகசியத்தை சொல்லவில்லை. என் பேட்டை இது என தெரிவித்து மறைமுக எச்சரிக்கை விடுக்கிறேன்.
*11/12/2009 14:34*

---

**writerpayon:** விரு(ந்)து, மீண்டு(ம்), க(வி)தை என்றெல்லாம் எழுத எனக்கு ஆசை. தீவிர எழுத்தில் ஈடுபட்டிருப்பதால் எழுத முடியவில்லை.
*11/12/2009 15:14*

---

| | |
|---|---|
| **writerpayon:** | தெருவில் ஒரு குழந்தையை பார்த்து புன்னகைத்தேன். என்னை பார்த்து "கொன்னுடுவேன்" என்றது. வெலவெலத்து கிளம்பினேன். இப்படி நடப்பது இரண்டாவது முறை.<br>*11/12/2009 15:28* |
| **writerpayon:** | இலக்கியம் என்றாலே பின்நவீனத்துவம்தானா? எல்லோரும் என்னை போலவே குறுகலாக சிந்திப்பது அலுப்பூட்டுகிறது.<br>*11/12/2009 15:42* |
| **writerpayon:** | @elavasam நீங்கள் கூறுவது லூஸ் டாக் (talk) வகைப்பட்டது. மிக வீரியமானதுதான். அதுதான் எனது எழுத்து நடையின் ரகசியமும்.<br>*11/12/2009 16:31* |
| **writerpayon:** | நான் எழுதிய பத்தியை சரிபார்க்க ஒருமுறை படித்தேன். தூக்கம் கண்ணில் சொக்குகிறது. ஒரு தூக்கம் போட்டுவிட்டு வருகிறேன்.<br>*11/12/2009 16:59* |
| **writerpayon:** | @penathal அதுவேதான் எனது கருத்துப்பாடு.<br>*11/12/2009 17:01* |
| **writerpayon:** | @elavasam 'கருத்து' என்பதைவிட 'கருத்துப்பாடு' என சொல்வதில் ஒரு காத்திரம் இருப்பதை நீங்கள் மறுக்க முடியாது.<br>*11/12/2009 17:06* |
| **writerpayon:** | நான்லீனியர் படைப்புகளின் மாந்திரீக அழகியல் வேறு எவற்றுக்கும் கைவருவதில்லை.<br>*11/12/2009 17:19* |
| **writerpayon:** | பதிப்பாளர் அழைத்து சென்னை புத்தக கண்காட்சி குறித்து நினைவூட்டுகிறார். நள்ளிரவுக்குள் 2 புத்தகங்கள் எழுதி முடிக்க வேண்டும். இடைவேளை.<br>*11/12/2009 17:25* |
| **writerpayon:** | நண்பரும் சிற்றிதழ் துவங்கவிருக்கிறார். இருபது கவிதைகள் எழுதித்தர ஒப்புக்கொண்டுள்ளேன். எனது கவிதைகளை அடிக்கடி வெளியிட ரூ. 25000/- தருகிறேன்,<br>*11/12/2009 21:19* |
| **writerpayon:** | கவிதைகள் அமானுஷ்யபுத்திரன் அல்லது மழைத்துளியோன் என்கிற பெயரில் வெளியாகும்.<br>*11/12/2009 21:20* |
| **writerpayon:** | உங்கள் பெயர் எனக்கு சுத்தமாக புரியவில்லை. @uelsalwoxbuq<br>*11/12/2009 21:37* |
| **writerpayon:** | சிவப்புகோட்டு சிவப்புபேண்டில் ரஜினிசார் கம்பீரம். அவர் கண்ணெதிரிலேயே அம்மா சௌகார் ஜானகியின் குங்குமசிமிழை தட்டிவிட்டை சுமனை வெறுக்கிறேன்.<br>*11/12/2009 22:38* |
| **writerpayon:** | ட்விட்டரில் என்னை 99 பேர் பின்தொடர்கிறார்கள். இன்னும் ஒருவர் இருந்தால் 100 ஆகிவிடும். உங்கள் வீட்டிலிருந்து யாரையாவது சேர்த்து விடுங்கள்.<br>*11/12/2009 22:50* |

**writerpayon:** Matador வேனில் வந்து இறங்கி கோவிலுக்குள் அடியெடுத்து வைக்கிறார் ரஜினிசார். கிருஷ்ணர் சிலையுடன் வாதம். சிரிப்பை அடக்கி சிறப்பாக நடிக்கிறார்.
*11/12/2009 23:01*

---

**writerpayon:** "எல்லாவற்றையும் ஆண்டவன் மேலிருந்து பார்த்துகொண்டிருக்கிறான்" என்று யாராவது சொல்லும்போது எனக்கு பெரும்பயம் ஏற்படுகிறது....
*11/13/2009 10:58*

---

**writerpayon:** ஆண்டவன் என் எழுத்தை படிக்கிறானோ என்ற பீதி. இதனால்தான் பக்தி பித்துகளை தவிர்க்கிறேன்.
*11/13/2009 10:59*

---

**writerpayon:** ட்விட்டரில் நேரம் வீணாவதே தெரியவில்லை.
*11/13/2009 11:18*

---

**writerpayon:** சுத்தமாக புரியவில்லை. ஆனால் புரிந்துகொர்ண்டதாக காட்டிக்கொள்ள வேண்டிய கட்டாயம் எழுத்தாளனுக்கு. http://www.elsewhere.org /pomo/1876694707
*11/13/2009 14:37*

---

**writerpayon:** எனக்கு விருப்பமான மேற்கோள்.... அவன் மனிதனையே நம்புகிறான். - ஆண்டன் செகாவ். http://www.brainyquote.com/quotes/quotes /a/antonchekh156273.html
*11/13/2009 22:04*

---

**writerpayon:** வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு -- இந்த குறள் எந்த அதிகாரத்தில் வருகிறது என யாராவது கூறமுடியுமா?
*11/14/2009 11:03*

---

**writerpayon:** @jadespies @manikandanvis @Mentamil வள்ளுவன் என்று செய்யுளில் வருகிறதே. பிறகு அதை குறள் இல்லை என்றால் எப்படி?
*11/14/2009 11:13*

---

**writerpayon:** மார்க்வெசின் 100 years of solitude-ல் வரும் "trail of mud" என்ற கருத்தை திருடி பெரும்சகதி என நான் தலைப்பிட்டதாக ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.
*11/14/2009 12:04*

---

**writerpayon:** ஆராய்ச்சிசெய்த நேரத்தில் 4 ஏழை குழந்தைகளை படிக்க வைத்திருக்கலாம். அடுத்த நாவலில் ஒரு கெட்ட கதாபாத்திரத்திற்கு அவர் பெயரை வைக்கவேண்டியதுதான்.
*11/14/2009 12:07*

---

**writerpayon:** இந்திரா காந்தி மட்டும் எமர்ஜென்சிக்கு முன்பே என்னை பார்த்திருந்தால் "பேச்சை குறை, எழுத்தை அதிகரி" என பலகைகள் மாட்டியிருப்பார்.
*11/14/2009 12:11*

---

**writerpayon:** கார்ட்டூன் தொடர்களில் அரக்கர்கள் உரக்க சிரிக்கிறார்கள். தீயவர்கள்தான் சிரிப்பார்களா? என்ன மதிப்பீடுகளை நாம் குழந்தைகளுக்கு புகட்டுகிறோம்?
*11/14/2009 12:29*

---

**writerpayon:** கோணங்கியின் மொழி வசீகரிக்கிறது. எழுத்தாளர் எனில் எங்கிருந்தாவது எடுக்க வேண்டும். இவர் எங்கிருந்து எடுத்தார் என தெரியாதிருந்தது.... இதுவரை.
*11/14/2009 15:05*

---

**writerpayon:** காலை அபூர்வ சகோதரர்கள் பார்த்தபோது அதிலொரு வசனம்:- "கபட நாடக வேடதாரி". உடனே புரிந்தது. கோணங்கி கிரேசி மோகனிடமிருந்து எடுக்கிறார்.
*11/14/2009 15:07*

---

**writerpayon:** இன்று நான் செய்ய வேண்டியவை:- ரோஜாப்பூ முகர்தல், மழைத்துளி ரசித்தல், பட்டாம்பூச்சி ரசித்தல், கூரை சொல்லும் சிந்தனைகளை குறித்துக்கொள்ளுதல்.
*11/15/2009 12:37*

---

**writerpayon:** செத்தால் இவான் இலியீச்சைப் போல் சாக வேண்டும். அதுவே காவிய மரணம்.
*11/15/2009 12:52*

---

**writerpayon:** இந்திய அனிமேஷன் திரைப்படங்களில் கதாபாத்திரங்களுக்கு விக் வரைந்து பயன்படுத்துவதாக தெரிகிறது.
*11/15/2009 13:09*

---

**writerpayon:** ஒரு இளம் கவிஞர் வருகை. சமகால கலை இலக்கிய போக்குகள் பற்றி விளக்கினேன். அவர் தூங்காதிருக்க இடையிடையே காபி கொடுக்க மனைவி அலுத்துக்கொண்டார்.
*11/15/2009 18:21*

---

**writerpayon:** அவர் நாவலும் எழுதியிருக்கிறார். பாவம், சமீபத்தில் வேலை போய்விட்டது. கவிதைகளை படித்தேன். ஹால்மார்க் கார்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கலாம்.
*11/15/2009 18:24*

---

**writerpayon:** சாதி பெருமையும் சாதி பற்றும் முதிர்ச்சியின்மையின் அடையாளங்கள். நல்லவேளையாக எனது சாதிக்காரர்களிடம் அவை இல்லை.
*11/15/2009 18:40*

---

**writerpayon:** நாடகத்தனத்தின் ஒன்றுவிட்ட சகோதரி கவித்துவம். நேரடி சகோதரி உயர்கவித்துவம். #அவதானிப்பு
*11/16/2009 12:08*

---

**writerpayon:** வருணதேவனும் பூமாதேவியும் ஜலக்கிரீடையை முடித்துக்கொண்டாற் போல் தெரிகிறது.
*11/16/2009 12:55*

---

**writerpayon:** கடினமான ஆங்கில புத்தகங்களுக்கும் சப்டைட்டில் இருந்தால் உதவிகரமாக இருக்கும்.
*11/16/2009 14:38*

---

**writerpayon:** ஏர்டெல் ஜூனியர் சூப்பர் சிங்கரில் மகனை குத்து பாட்டு பாட வைத்து பார்வையாளர் நடுவே ஆட்டம் போட முடியாமல் எழுத்தாள கண்ணியம் தடுக்கிறது.
*11/16/2009 22:00*

---

**writerpayon:** பக். XVII, The Sakyans of South East Asia: An Introspection of Tracing Roots, எஸ் பி தாலுக்தார், கியான் பப்ளிஷிங் ஹவுஸ்.
*11/16/2009 22:10*

---

**writerpayon:** @dynobuoy தமிழ் இலக்கிய புத்தகங்களை பற்றி அவ்வப்போதாவது எழுத

வேண்டிய தேவையுள்ளபோது அதை படிப்பதிலிருந்து தப்பிக்க முடியுமா என்ன?
*11/16/2009 22:19*

---

**writerpayon:** இரவுடன் உறவாட போகிறேன். நல்லிரவு.
*11/16/2009 22:55*

---

**writerpayon:** இலக்கியம் படைப்பதாக நினைத்துக்கொண்டு இலக்கியம் என தாங்கள் நினைக்கும் ஒன்றை படைப்பவர்களை என்ன செய்வது?
*11/17/2009 16:41*

---

**writerpayon:** குழந்தைகளுக்கு மரியாதை கற்றுத்தர சிறந்த வழி நாம் அவர்களுக்கு மரியாதை அளித்தல். நான் பல சமயங்களில் என் மகனை அங்கிள் என அழைப்பதுண்டு.
*11/17/2009 17:42*

---

**writerpayon:** நாளை ஒரு ரிசப்ஷன். அதற்கு மஞ்சள் பூப்போட்ட சட்டை அணிவதா நீல கட்டம்போட்ட சட்டை அணிவதா? எழுத்தாளனின் உள்மன போராட்டங்களுக்கு முடிவேயில்லை.
*11/17/2009 21:53*

---

**writerpayon:** சாமானியர்கள் "நோயுற்ற" என எழுதுகிறார்கள். நான் "நோய்மையுற்ற" என எழுதுகிறேன். நோய்மையே வெல்லும்.
*11/17/2009 21:55*

---

**writerpayon:** காலையிலேயே டாஸ்மாக் கடைமுன் கூட்டம் குவிந்திருப்பது அவநம்பிக்கையளிக்கிறது. அப்துல் கலாமின் "இந்தியா 2020" நிறைவேற இன்னும் 11 ஆண்டுகள் ஆகும்.
*11/18/2009 10:39*

---

**writerpayon:** மற்ற கலைவடிவங்களை விடவும் சினிமா மிக வலிமையான மக்களுக்கான ஊடகம். எனக்கு தெரிந்து கட்டுமஸ்தான ஆசாமிகளே சினிமாவினால் அதிக பயன் பெறுகின்றனர்.
*11/18/2009 10:51*

---

**writerpayon:** அலாதி மனிதர் ஒருவர் அறிமுகமானார். வீடு முழுக்க தத்துவம், விஞ்ஞானம், இலக்கியம், வானவியல், சினிமா புத்தகங்கள். நல்ல வேளை, இவர் எழுதவில்லை.
*11/18/2009 10:56*

---

**writerpayon:** சங்கீத மும்மூர்த்திகள் "தியாகராஜன், புரந்தரதாசன், சோமையாஜுலு" என என் மகன் எழுதியதற்கு ஆசிரியர் 0 மதிப்பெண் தந்திருக்கிறார். என்ன அநியாயம்.
*11/18/2009 11:55*

---

**writerpayon:** ஒரு ஆசிரியர் ஒரு விடையை தவறு என முடிவுகட்டுவதற்கு முன் அந்த மாணவன் ஏன் அந்த விடையை அளித்தான் என அவன் பார்வையில் சிந்தித்து பார்க்க வேண்டும்.
*11/18/2009 11:56*

---

**writerpayon:** இந்த ஆசிரியர் வீட்டிற்கு போனபின் மனைவியின் சமையலை குறை சொல்வார் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை. இத்தகைய ஆசாமிகள்தான் இன்று ஆசிரியர்கள்.
*11/18/2009 12:00*

---

**writerpayon:** சில சங்க கால புலவர்களுக்கு விக்கும்போதுகூட தலை தட்டினால் பிடிக்காதாம். ஜெயமோகன் சொல்கிறார்.
*11/18/2009 14:28*

---

**writerpayon:** சிங்கள எழுத்தாளர் ரொமேஷ் குணசேகராவின் நாவல் ஒன்று மேஜைமேல் கிடக்கிறது. சிலர் கண்ணில் படாதிருக்க ஷோபாசக்தி நாவலால் மறைத்துவைத்திருக்கிறேன்.
*11/18/2009 14:33*

---

**writerpayon:** @scanman இப்படித்தான் அடிக்கடி பீதியை கிளப்ப முயல்கிறார்கள். 70களில் வந்த இருத்தலியமே போனபாடில்லை. பின்நவீனத்துக்காவது மவுசு குறைவதாவது.
*11/19/2009 10:15*

---

**writerpayon:** மேற்கில் சாகும் இசங்கள் செத்தபின் தமிழ்ச் சூழலுக்குத்தான் வருகின்றன. அதனால் தமிழ்ச் சூழலை இசங்களின் சொர்க்கமாக இனங்காண்பது அவசியமாகிறது.
*11/19/2009 11:00*

---

**writerpayon:** வாசகருடன் பேசுகையில் சுண்டலில் பச்சை மிளகாயை மென்றுவிட்டேன். கண்ணீர் காரணத்தை மறைக்க வழக்கத்தைவிட அதிக உருக்கத்துடன் இலக்கியம் பேசினேன்.
*11/19/2009 15:46*

---

**writerpayon:** மிகக் காரமாக சாப்பிடுவது ஆண்மையின் அடையாளம். எழுத்தாளனாக இருந்தால் அவன் மரபு உணவின் சுவையியலை ரசிப்பதன் அடையாளம்.
*11/19/2009 15:49*

---

**writerpayon:** @scanman அழகான இடம். அந்த மலைக்கு சேலமலை என்று பெயர். 1750களிலிருந்து அங்குதான் இருக்கிறது.
*11/19/2009 15:51*

---

**writerpayon:** நமது பண்டைய புராணங்களை படிக்கும்போது சில விஷயங்கள் புரிகின்றன:- சிவனே முழுமுதற்கடவுள், விஷ்ணுவே முழுமுதற்கடவுள், கந்தனே முழுமுதற்கடவுள்.
*11/19/2009 16:37*

---

**writerpayon:** புராணங்கள் கடவுளர்களை பற்றி பேசுகையில் இதிகாசங்கள் மனிதர்களை பற்றி பேசுகின்றன. இந்த பேச்சுகளை கேட்க நம் எந்திர வாழ்க்கை நம்மை அனுமதிக்கிறதா?
*11/19/2009 16:59*

---

**writerpayon:** இக்காலக் குழந்தைகளுக்கு இளமையிலேயே தொழில்நுட்பங்கள் பரிச்சயமாகவிடுகின்றன. தொழில்நுட்பத்தை சார்ந்திருக்க இப்போதே அவர்களை பழக்குகிறோம்.
*11/20/2009 11:15*

---

**writerpayon:** 12 வயதில் என் மகன் டிவியில் கம்ப்யூட்டர் கேம் ஆடுகிறான். அந்த வயதில் நான் டிவியையே டிவியில்தான் பார்த்திருக்கிறேன். நேரில் பார்த்ததில்லை.
*11/20/2009 11:16*

---

**writerpayon:** @scanman உண்மைதான். அவர் சில்ட்ரன்.... தேயார் லிவிங் யே ப்ரிவிலேஜுடு லைஃப்.

*11/20/2009 11:37*

---

**writerpayon:** மனைவியின் பெருங்கதையாடல்கள் திக்குமுக்காட வைக்கின்றன. விரைவில் ஐபாட் வாங்க வேண்டும். #musicmonday
*11/23/2009 10:17*

---

**writerpayon:** ஆடவர் 2 வகை: தடி ஆண்பிள்ளைகள், முரட்டு ஆண்பிள்ளைகள். தடி ஆண்பிள்ளைகள் ஆண்கள் எனவும் முரட்டு ஆண்பிள்ளைகள் பெண்கள் எனவும் அழைக்கப்படுகிறார்கள்
*11/23/2009 10:22*

---

**writerpayon:** சிறுகதை முடியும்போது ஏதாவது தொடங்க வேண்டும். இதுதான் "முடியும்போது தொடங்கும்" விதி.
*11/23/2009 11:45*

---

**writerpayon:** உதா:- (கடைசி வரி) நாராயணன் நான்காம் பக்கத்தை படிக்க ஆரம்பித்தான்.... மழை பெய்ய தொடங்கியிருந்தது....
*11/23/2009 11:46*

---

**writerpayon:** இந்த கடைசி வரி உத்தி சிறப்பாக கைவரும் கதைகள்.... http://bit.ly/66EtC3, http://bit.ly/4wiWWr, http://bit.ly/6Qaoaj, http://bit.ly/4CHcUd.
*11/23/2009 11:46*

---

**writerpayon:** மாபசான் பிரெஞ்சை சேர்ந்தவர். குந்தர் கிராஸ் ஜெர்மனை சேர்ந்தவர். காளிதாசர் சமஸ்கிருதத்தை சேர்ந்தவர்.
*11/23/2009 11:55*

---

**writerpayon:** வங்கிக்கு பேனா எடுத்து சென்றால் யாராவது இரவல் கேட்டு தொந்திரவு செய்கிறார்கள். அதனால் நான் பேனா எடுத்து செல்வதில்லை. இரவல்தான் வாங்குகிறேன்.
*11/23/2009 12:13*

---

**writerpayon:** "தினசரி", "நாளேடு" என்பதற்கு பதிலாக தினாந்தரி, நாளாந்தரி என சொல்லலாமா?
*11/23/2009 12:46*

---

**writerpayon:** நமக்கு ஒளி தருவது சூரியனும் நிலவும் என்கிறபோது நட்சத்திரங்களை எண்ணி பயனென்ன? #அறிவார்த்தம்
*11/23/2009 14:03*

---

**writerpayon:** நேற்று கடற்கரைக்கு சென்றேன். சமுத்திரத்தின் விசாலம் இன்னும் கண்களுக்கு பழகவில்லை. பல கடல் அலைகள் காலை தொட்டுவிட்டு சென்றன.
*11/23/2009 15:28*

---

**writerpayon:** கடல் அலைகள் அனைத்தும் ஒரே மாதிரி இருப்பதால் அதே அலைகள் திரும்பி வந்தால்கூட அடையாளம் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை.
*11/23/2009 15:29*

---

**writerpayon:** ஒரு பெயரற்ற சினிமாவை பார்த்தேன். ஓயாமல் புணர்கிறார்கள். பெண்கள் அழுகையும் ஓலமும். பார்த்தபின் கனத்த இதயத்துடன் டிவிடி பிளேயரை நிறுத்தினேன்.
*11/23/2009 22:51*

---

**writerpayon:** சமகால யதார்த்தத்தினின்று விலகியது என எச்சரிக்கும் முகமாக "முன்னொரு காலத்தில்" என கதையை துவங்குகிறோம். ஆனாலும்

குழந்தைகளுக்கு புரிவதில்லை.
*11/23/2009 22:58*

---

**writerpayon:** குழந்தைகளுக்காக எழுதும்போது "முன்னொரு காலத்தில்". பெரியவர்களுக்காக எழுதும்போது "அவனால் அதை நம்ப முடியவில்லை."
*11/23/2009 23:03*

---

**writerpayon:** வலதுகை இல்லாத ஒருவரை டீக்கடையில் பார்த்தேன். இறைவா இவருக்கு இடதுகை பழக்கம் இருக்கட்டும் என எண்ணிக்கொண்டேன். சீனியை போட்டு தொலைத்தாலென்ன.
*11/24/2009 09:50*

---

**writerpayon:** மணி 10 என்றது கடிகாரம். சரி என்றேன் நான்.
*11/24/2009 10:03*

---

**writerpayon:** செவன் சமுராயை மீண்டும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். குரோசாவாவுக்கு இந்த படம் நன்றாக கைவந்திருக்கிறது. சப்டைட்டில் எழுத்துரு மனதை அள்ளுகிறது
*11/24/2009 10:10*

---

**writerpayon:** உலக சினிமா உலக சினிமா உலக சினிமா உலக சினிமா.
*11/24/2009 10:23*

---

**writerpayon:** ஏன், அயல்மொழி சினிமாவும்கூட.
*11/24/2009 10:23*

---

**writerpayon:** வடிவேலு காமெடி தார்க்கோவ்ஸ்கி படம் போல உள்ளது. சுத்தமாக புரியவில்லை. வெளியே சொல்ல முடியாமல் என் பாணியில் உரக்க சிரித்து சமாளிக்கிறேன்.
*11/24/2009 11:23*

---

**writerpayon:** எனக்கும் நகைச்சுவைக்கும் ரொம்ப தூரமாம். இடையே பஸ் சர்வீஸ் விட்டால்கூட வேலைக்கு ஆகாதாம். நண்பர் ஒருவர் கூறுகிறார்.
*11/24/2009 11:24*

---

**writerpayon:** தூலமான விஷயத்திற்கும்.... சூட்சுமமான விஷயத்திற்கும்.... போக்குவரத்து வசதி.... எப்படி சாத்தியம்? புரியவில்லை.
*11/24/2009 11:24*

---

**writerpayon:** ஐபாட் வாங்கிவிட்டேன். Enter விசையை அதில் தேடிக்கொண்டிருக்கிறேன்.
*11/25/2009 11:07*

---

**writerpayon:** 2 மாதங்களுக்குமுன் பேயோன் என எழுதி செலவிட்ட 1000 ரூ. தாள் இன்று என் கைக்கு மீண்டது. பணமே என்னை விரும்பும்போது என்னை யார் குறைகூறமுடியும்?
*11/26/2009 10:09*

---

**writerpayon:** @PeerMhd நிகழ்கலைஞ_ர்_ டு யூ.
*11/26/2009 10:17*

---

**writerpayon:** சிலர் 'மணமுறிவு' என எழுதுகிறார்கள். 'முறிவு' என்பதில் என்ன ஒரு வன்முறை! அதையே 'விவாகரத்து' என்றால் எவ்வளவு இனிமையாக உள்ளது. கனியிருப்ப....
*11/26/2009 10:21*

---

**writerpayon:** விவாகரத்திலும் பிரச்சனை உள்ளது. இழுத்தடித்தால் ரத்து அல்ல. உடனே

செய்தால்தான் ரத்து. ரயில் டிக்கெட்டை 2 ஆண்டுகளுக்குபின் ரத்து செய்யமுடியுமா?
*11/26/2009 10:24*

---

**writerpayon:** மணமுறிவு morbid சொல்லாடலாக இருந்தாலும் சரியான பொருளை கொண்டுள்ளது. சமகால தமிழ் எழுத்து ரொமாண்டிக் தன்மை கொண்டதால் விவாகரத்தை ஏற்கலாம்.
*11/26/2009 10:28*

---

**writerpayon:** விவாகரத்தின் ரொமான்சை யாரும் மறுக்க முடியாது.
*11/26/2009 10:28*

---

**writerpayon:** லபக்குதாசை ஏதோ பல்கலைக்கழக மாநாட்டிற்காக ராட்டர்டாம் அனுப்புகிறார்கள். "ராட்டர்டாம் எங்கிருக்கிறது?" என குழந்தை போல ஆர்வமாய் கேட்கிறார்.
*11/26/2009 14:44*

---

**writerpayon:** பாரிசில் பாரிஸ் ஹில்டன் என ஒரு ஹோட்டல் உள்ளது. பெரிய மாநாடுகள் நடக்குமிடம். ழான் ழாக் ரூபேர் என்ற பெயரை உச்சரிக்க முடிந்தால்தான் அனுமதி.
*11/26/2009 15:43*

---

**writerpayon:** @TBCD நானெல்லாம் செத்தால் என் இடத்தை நிரப்ப ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அதனாலேயே இப்போதைக்கு சாகக்கூடாது என்கிற வைராக்கியம்.
*11/26/2009 21:24*

---

**writerpayon:** சிறிய வெள்ளி சீப்பால் மீசைக்கு வகிடு எடுத்துக்கொண்டிருக்கிறேன். மீசையை ஷாருக்கானின் சிகையலங்காரத்தை போல வடிவமைக்க வேண்டும்.
*11/26/2009 21:26*

---

**writerpayon:** குறும்பத்தி என்கிற புதிய இலக்கிய வடிவத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமித மகிழ்ச்சி அடைகிறேன்.
*11/26/2009 21:47*

---

**writerpayon:** தெருவிலொருவர் வந்தார். வாழ்வில் வருதல்கள் சகஜம். காம்யுவின் The Fall-ல் ஒருவர் வருவார். மஜிதியின் Baranல் காதல் வரும். அஜக்தா. #குறும்பத்தி
*11/26/2009 21:47*

---

**writerpayon:** 'ஓல்' என்கிற வார்த்தை 'ஓலம்' என்பதிலிருந்து வந்திருக்குமோ? இறந்தால் உற்றார் ஓலமிடுவதால் 'ஓலை' என்கிற வார்த்தை வந்திருக்குமோ? #சந்தேகம்
*11/26/2009 22:55*

---

**writerpayon:** உடலுறவு சார்ந்த தாந்திரீக சடங்குகளில் ஓம் என்பதற்கு பதிலாக ஓல் என்கிற வார்த்தையைத்தான் பயன்படுத்துகிறார்கள். #தகவல் #ஆராய்ச்சி
*11/26/2009 23:01*

---

**writerpayon:** @scanman இது முற்றிலும் மொழி ஆராய்ச்சி. சுரோணித சிந்தனாவாதம் அல்ல.
*11/26/2009 23:08*

---

**writerpayon:** @gkarthy ஆராய்ச்சி வேறு, சொந்த சரக்கு வேறா? புது தகவலாக

இருக்கிறதே....
*11/26/2009 23:08*

---

**writerpayon:** முத்துகளோடு கடலிலிருந்து / வெளிப்படுகிறாள் கடல்கன்னி / சிரித்த வாயின் / பற்களும் முத்துக்களாக. #கவிதை நல்லிரவு.
*11/26/2009 23:40*

---

**writerpayon:** நான் கிரிக்கெட் பார்ப்பதை வெளியே சொல்லிக்கொள்ள முடிந்தால் டபிள்யூ ஜி கிரேஸ் பற்றி பத்தி எழுதலாம். கொடுப்பினை இல்லை.
*11/27/2009 10:04*

---

**writerpayon:** ஒரு பாட்டியை பார்த்தேன். முதுமை தவிர்க்க இளமையில் சாகலாம். சார்த்ரின் Nausea-ல் கிழவர் சாவு. குரோசாவாவின் Ran-ல் கூட. பிலோமா. #குறும்பத்தி
*11/27/2009 10:32*

---

**writerpayon:** பாட்டு கேட்டேன். ஒலிகளின் நடனம் இசை. மார்க் சால்ஸ்மனின் Soloist-ல் செல்லோவும் கதாபாத்திரம். Amadeus-ல் மொசார்ட். என்னமோ போ. #குறும்பத்தி
*11/27/2009 10:49*

---

**writerpayon:** அன்பை ஆசையால் அளக்க முடியாது. #அவதானிப்பு
*11/27/2009 11:20*

---

**writerpayon:** ட்விட்டரில் என் அவதானிப்புகளை பதிவு செய்ய துவங்கியபின் மற்றவர்கள் அவதானிப்பை குடிசை தொழிலாக்கிவிட்டார்கள். #அவதானிப்பு
*11/27/2009 11:21*

---

**writerpayon:** அளவுக்கு மிஞ்சினால் அவதானிப்பும் விஷம் என இவர்களுக்கு புரியவில்லை. கிலுகிலுப்பை கிடைத்த குழந்தை போல் விளையாடுகிறார்கள்.
*11/27/2009 11:23*

---

**writerpayon:** சமகால கூகிள் வேவ் அழைப்புகள் சில கிடைத்துள்ளன. அழைப்பு பெற விரும்புவோர் மின்னஞ்சலை அனுப்பவும்.
*11/27/2009 19:05*

---

**writerpayon:** 1000க்கு மேற்பட்ட பக்கங்களை கொண்ட நூல்களை நூல்கண்டு என அழைக்கலாமா? #அறிவார்த்தம்
*11/30/2009 10:36*

---

**writerpayon:** கவிநயா என்று ஒரு புனைப்பெயரா? எரிந்திரா!
*11/30/2009 11:04*

---

**writerpayon:** ஒரு வாசகர் போன் செய்தார். "திநமும் கதய் எழுதுகிரேன்" என்றார். "தினமும் கதை எழுதுகிறேன்" என திருத்தினேன். "நீங்களுமா?" என்றார் புரியாமல்.
*11/30/2009 11:37*

---

**writerpayon:** புத்தகம் எழுதுபவனெல்லாம் 'அன்புடன்' என எழுதி எனக்கு பிரதி அனுப்பிவிடுகிறான். ரகசியமாக டிஸ்போஸ் செய்ய கொல்லையில் கிணறு தோண்டுகிறேன்.
*12/2/2009 10:37*

---

**writerpayon:** எனது ட்விட்டர் பக்கத்தில் என் பெயருக்கு கீழ் Verified Account என போடுவதில்லையே?
*12/2/2009 10:56*

---

**writerpayon:** பார்வையற்ற கிழவன் சாலையை கடக்க உதவினேன். அவனின் அபரிமித அதிர்ஷ்டத்தை மகிழ்ந்தாலும் அந்த அதிர்ஷ்டத்தை அவன் உணரவில்லையே என கிலேசித்தேன்.
*12/2/2009 14:55*

---

**writerpayon:** மிருகக்காட்சி சாலையை ஆங்கிலத்தில் 200 என அழைப்பது எதனால்? அதில் சரியாக 200 விலங்குகள்தான் இருக்குமா?
*12/2/2009 15:22*

---

**writerpayon:** சிங்களர்களின் சராசரி இனிஷியல் எழுத்து எண்ணிக்கை 4.
*12/2/2009 16:17*

---

**writerpayon:** Tarkovskyயின் Nostalghia பார்த்தேன். தனித்துவமான படம். சுத்தமாக புரியவில்லை. புரிந்திருந்தால் படம் இன்னும் நன்றாக இருக்கும் என்பது என் ஊகம்.
*12/3/2009 11:34*

---

**writerpayon:** @srikan2 கீஸ்லோவ்ஸ்கியை புரிந்துகொள்வது அவ்வளவு கடினம் அல்ல. தார்கோவ்ஸ்கிதான் தாலியறுத்துவிடுவார்.
*12/3/2009 11:49*

---

**writerpayon:** வங்கக் கடலோரம் மனச்சோர்வு உருவாகியிருப்பதால்தான் மழை பெய்கிறதாம். சுயமாக கண்டுபிடித்தது போல் கூறுகிறார் மொழிபெயர்ப்பாளர் லபக்குதாஸ்.
*12/3/2009 14:39*

---

**writerpayon:** அலைதலில் உள்ள ரொமாண்டிக்கை விட முடியவில்லை. தஸ்தாவஸ்கியின் Gamblerஐ படித்தபின் அதன் கதாபாத்திரங்களை ஜெர்மனியின் தெருக்களில் தேடியலைந்தேன்.
*12/3/2009 20:16*

---

**writerpayon:** அதேபோல ஆர்வெல்லின் Animal Farmஐ படித்தபின் லண்டனின் பண்ணைகளில் பன்றிகளை தேடியலைந்தேன். எழுத்தாளனுக்கு தேடல் மட்டுமல்ல, அலைதலும் முக்கியம்.
*12/3/2009 20:19*

---

**writerpayon:** ஒருமுறை சரோஜா தேவி கதை படித்துவிட்டு கல்பனா என்ற பாத்திரத்தை தேடி எங்கே அலைவது என தெரியாமல் அலைந்ததை மறக்க முடியாது.
*12/3/2009 20:21*

---

**writerpayon:** இந்த அலைதலே பின்னர் தேசாந்திரத்திற்கு வித்திட்டது. அலைதல்கள் முடிந்தன. இருந்தாலும் பத்திகளுக்கு உபயோகப்படுகின்றன. அது முக்கியம்தானே.
*12/3/2009 20:29*

---

**writerpayon:** மந்திரவாதியின் உயிர் கிளியில் இருப்பதுபோல் எனதுயிர் உலக இலக்கியத்தில். உலகம் அழிந்து அதனால் உலக இலக்கியம் அழிந்தால் எனதுயிரும் போய்விடும்.
*12/4/2009 10:14*

---

**writerpayon:** இணையதளங்களில் இருமொழிகள் மரணிப்பதை பார்க்கிறேன். தமிழும் ஆங்கிலமும் போட்டி போட்டுக்கொண்டு மாறி மாறி செத்துக்கொண்டிருக்கின்றன.
*12/4/2009 10:37*

---

**writerpayon:** ஒரு தீவிர எழுத்தாளன் ட்விட்டரை உபயோகித்தால் தீவிரத்தன்மையை இழந்துவிடுவானா? நான்கு நாட்களாக இக்கேள்வியில் மூழ்கி செயலற்று இருந்தேன்.
*12/9/2009 11:22*

---

**writerpayon:** டால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு படித்துக்கொண்டிருக்கிறேன். அதீத இழுவை. எந்த மரத்தை அழித்து இதை அச்சிட்டிருப்பார்கள்? ரப்பர் மரமாக இருக்குமோ?
*12/9/2009 11:38*

---

**writerpayon:** பாலகுமாரனுக்கு விசிறி சாமியார். ஜெமோக்கு யதி. சாருவுக்கு நித்யானந்தா. சிலருக்கு சேகுவேரா. எனக்கு 30 ரூபாய் டிவிடி. வாழ்க புனிதங்கள்.
*12/9/2009 12:04*

---

**writerpayon:** மழை ஓய்ந்தது. எனக்கு பொதுவாக மழையே பிடிக்காது. வேண்டவே வேண்டாம் என ஒதுக்கிவிடுவேன். கடும் கோடை வெயிலை பழிவாங்க மழையை புகழ வேண்டியிருந்தது.
*12/9/2009 12:10*

---

**writerpayon:** எனக்கெல்லாம் புலிட்சர் பரிசு கிடையாதா?
*12/9/2009 12:30*

---

**writerpayon:** "மீண்டும் வருதல்" என்பதைவிட "மீண்டு(ம்) வருதல்" என எழுதுவது கவர்ச்சி. பொருள் மாறவில்லை என்றாலும் சுவாரசியமாக இருப்பதான தோற்றம் முக்கியம்.
*12/9/2009 13:22*

---

**writerpayon:** சிறுதுணுக்குப் பெரும்பத்தி.
*12/9/2009 13:58*

---

**writerpayon:** என்னை உலக சினிமாவுக்கு இழுத்தது பைசைக்கிள் தீ:ப். அதை பார்த்தபோது எனக்கு வயது பனிரெண்டு. பன்னிரண்டு என திருத்தாதீர்கள். பனிரெண்டுதான் தவறு.
*12/9/2009 17:39*

---

**writerpayon:** நண்பர் கோணங்கி எழுதுவதை சமஸ்கிருத அகராதி வைத்துக்கூட படிக்க முடியவில்லை. இருந்தாலும் மணிப்பிரவாள நடையை தனியாளாக காப்பதை பாராட்ட வேண்டும்.
*12/9/2009 17:52*

---

**writerpayon:** "என்ன கொடுமை இது சரவணன்".... "வடை போச்சே".... "உக்காந்து யோசிப்பீங்களோ"....
*12/9/2009 22:42*

---

**writerpayon:** வெகுஜன பண்பாட்டின் நசிவுதான் சுயசிந்தனையை தடுத்து சினிமா வசனங்கள் மக்கள் பேச்சில் கலக்க காரணமாகிறது. இத்தனைக்கும் அவை நான் எழுதியவைகூட அல்ல.
*12/9/2009 22:43*

---

**writerpayon:** எனது புத்தகம் ஒன்றை ஒரு இந்தி பேராசிரியரிடம் மொழிபெயர்க்க கொடுத்தேன். படித்துவிட்டு "பஹுத் போர் ஹே" என்றார். போர்ஹேயுடன் ஒப்பிடுகிறார்.
*12/10/2009 15:16*

---

**writerpayon:** தொடங்குவது அனைத்தையும் முடித்தாக வேண்டியிருப்பது எழுத்தாளனின் பிரத்தியேக சாபக்கேடு.
*12/10/2009 16:18*

---

**writerpayon:** உலகம் சூடாவதால் தண்ணீரின் ஈரத்தன்மை குறைந்து கட்டியாவதாக நாளேட்டில் படித்தேன். இதற்கும் என் வீட்டு குழாய் அடைப்புக்கும் தொடர்பு இருக்கலாம்.
*12/10/2009 17:54*

---

**writerpayon:** சிறுகதையோ கட்டுரையோ மனதில் தெளிவு இருந்தாலும் தொடங்குவது கடினம். ஒரு இளம் எழுத்தாளர் என்னை ஆலோசனை கேட்டார். "அந்த" என தொடங்க சொன்னேன்.
*12/10/2009 19:56*

---

**writerpayon:** பாலிதீன் உறையில் காசுகளை போட்டு கயிறு கட்டி தொங்க விட்டிருக்கிறேன். எதற்காக இத்தனையும் என்கிற தத்துவ கேள்வி எழும்போதெல்லாம் ஆட்டுவதற்காக.
*12/10/2009 20:35*

---

**writerpayon:** @spinesurgeon ஆ.... தகவல் பிழையின் தனித்துவ நறுமணம்....
*12/10/2009 21:06*

---

**writerpayon:** சுரேஷ் டெண்டுல்கர் குழுவின் கூறுகிறது, ஒவ்வொரு மூன்றாவது இந்தியனும் ஏழையாம். இடமிருந்தா வலமிருந்தா? ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹா!
*12/10/2009 23:35*

---

**writerpayon:** @aayilyan இந்த மூன்று, நான்கு, பத்தொன்பது என்கிற கணக்கு எனக்கு என்றுமே புரிந்ததில்லை.
*12/10/2009 23:40*

---

**writerpayon:** இன்று ஒரு மிச்சிகன் பல்கலை பேராசிரியர் என்னை பார்க்க வந்தார். அமெரிக்க இலக்கியத்தில் தன் புலமையை காட்டிக்கொள்ள முயன்று தோற்றார். பாவம்.
*12/10/2009 23:46*

---

**writerpayon:** நாளை ட்விட்டருக்கு வர மாட்டேன். எழுத்தாளன் நாளைக்கும் சேர்த்து சிந்திக்க வேண்டியுள்ளது.
*12/10/2009 23:51*

---

**writerpayon:** எறும்புகள் மழைக்காலத்திற்கு சேமிப்பதுபோல் எழுத்தாளனும் படைப்பூக்கம் இல்லாத சமயங்களில் பயன்படுத்த முன்பே எழுதி வைக்க வேண்டும்.
*12/10/2009 23:51*

---

**writerpayon:** எனது நூல்கள் அச்சேற மரணிக்கும் மரங்கள் சொர்க்கத்திற்கு போகும் என்பதில் சந்தேகமில்லை. இங்கிருந்தே சொர்க்கத்தில் மரம்வளர்ப்பதில் மகிழ்ச்சி.
*12/11/2009 00:04*

---

**writerpayon:** எம்ஜிஆரும் ரஜினிசாரும் பல பத்தாண்டுகளில் எட்டிய உயரத்தை ஒரு பத்தாண்டில் எட்ட முயன்றால் என்ன ஆகும் என்பதற்கு அஜித்தும் விஜயும் படிப்பினைகள்.
*12/11/2009 00:46*

---

**writerpayon:** சினிமாவில் musical foreboding போல சிறுகதையில் முடிவு வரப் போவதை எப்படி காட்டலாம்? பத்திகளில் வாக்கிய எண்ணிக்கையை படிப்படியாக குறைக்கலாமா?
*12/11/2009 10:14*

---

**writerpayon:** மேகமும் மூட்டமுமாக மந்தாரிக்கிறது ஊர்.
*12/11/2009 10:20*

---

**writerpayon:** என் தெருவில் சந்தேகத்திற்குரிய விதத்தில் நடமாடிய ஒருவனை போலீஸ் பிடித்தது. யார் கதையையோ திருடினானாம். நாட்டில் எதெல்லாம் குற்றம் பாருங்கள்.
*12/11/2009 10:28*

---

**writerpayon:** செவிக்கு உணவு, வாய்க்கு ஒலி.
*12/11/2009 12:20*

---

**writerpayon:** "கற்பழிக்கிறான்" என நான் எழுதியதை சிலர் கரிக்கிறார்கள். வன்புணர்ச்சிதான் "பொலிடிகலி கரெக்ட்" என எனக்கு தெரியும். ஆனால் நான் அபொலிடிகல்.
*12/11/2009 12:40*

---

**writerpayon:** வீட்டிற்கு ஒருவர் வந்தார். வாசகரா என்றால் அரசு அதிகாரியாம். வருமான வரி என்கிற கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்தினார். பணம் நான் தர வேண்டுமாம்.
*12/11/2009 12:52*

---

**writerpayon:** "கலைத்துவம்" என ஒரு வார்த்தையை இன்று படிக்க நேர்ந்தது. மெய் சிலிர்த்துப் போனேன். உயர்கவித்துவம் போல அழகான வார்த்தை.
*12/11/2009 13:05*

---

**writerpayon:** நான் மட்டும் பெரிய அமெரிக்க எழுத்தாளனாக இருந்தால் ட்விட்டரே எனக்கு தேவைப்படாது. ட்வீட் செய்யும் ஒவ்வொன்றிற்கும் பிரஸ் ரிலீஸ் அனுப்புவேன்.
*12/11/2009 13:08*

---

**writerpayon:** ஒரு கதையை ஜனித்ததும் எழுத வேண்டும். இல்லையேல் பிறர் எழுதிவிடுவார்கள். நமக்கு தோன்றுமுன்பே பிறருக்கு தோன்றும் அபத்தங்களும் நிகழ்வதுண்டு.
*12/11/2009 13:16*

---

**writerpayon:** இன்று சுஜாதாவினேன். "நைலான் கயிறு" சாருவுக்கு பிறகும் புதிதாகவே இருக்கிறது.
*12/11/2009 13:41*

---

**writerpayon:** பாரதியை மரியாதையுடன் பாரதியார் என அழைப்பது போல நாலடியை நாலடியார் என அழைக்கிறார்கள். பாரதியைவிட நாலடி சற்று மூத்தவர்.
*12/11/2009 14:09*

---

**writerpayon:** வெளியே போய்விட்டு வீடு திரும்பும்போது வீட்டு வாசலில் பத்து பேர்

நின்றிருப்பதை பார்த்தால் லேசாகும் மனது வீட்டுக்குள் நுழைந்ததும் கனக்கிறது.
*12/11/2009 14:23*

---

**writerpayon:** ஒரு கதையை எப்படி முடிப்பது என தெரியவில்லை. நான் அதை முடிக்காமலே அது முடிந்துவிட்டது என புரிந்துகொள்ளும் பக்குவம் வாசகனுக்கு எப்போது வரும்?
*12/11/2009 14:40*

---

**writerpayon:** இன்று என் திருமண நாள். கொண்டாட மனைவி என் மாமியார் வீடு செல்கிறார். மாமனாரோ இங்கு வருகிறார். நானும் அவரும் கோவிலுக்கு போவதாக திட்டம்.
*12/14/2009 09:00*

---

**writerpayon:** புத்தக கடையில் ஒரு சிறுவன் கையில் நான் எழுதிய ஒரு குழந்தைகள் புத்தகம். அவன் பின்னட்டையை திருப்பி என் படத்தை பார்ப்பதற்குள் நடையை கட்டினேன்.
*12/14/2009 09:54*

---

**writerpayon:** இலக்கியத்தை ஒழிக்க வேண்டும். அதுதான் தீவிர இலக்கியத்திற்கு எதிரி.
*12/14/2009 10:45*

---

**writerpayon:** சினிமாவில் நுழையும் எழுத்தாளர்கள் தனித்துவத்தை இழப்பதான குற்றச்சாட்டு குற்றச்சாட்டு பொதுப்படையானது, அதனால் நகைப்புக்குரியது.... (1/3)
*12/14/2009 11:00*

---

**writerpayon:** சினிமாவிலேயே முழுமையாக இறங்கிவிட்டால் அது ஏற்படலாம். நான் ஆற்றிலொரு கால், சேற்றிலொரு கால் வைத்திருப்பதால் தனித்துவத்தை இழக்கவில்லை. (2/3)
*12/14/2009 11:00*

---

**writerpayon:** ஆறு என சினிமாவைத்தான் கூறுகிறேன். சேற்றில் என்ன கிடைக்கப் போகிறது? (3/3)
*12/14/2009 11:00*

---

**writerpayon:** சிலர் நான் எழுதும் ஒவ்வொரு ட்வீட்டிற்கும் வாதிப்பதை பார்த்தால் பாவமாக இருக்கிறது. இவர்களுக்கு கல்வெட்டுகளுடன் பேசும் பழக்கமும் இருக்கலாம்.
*12/14/2009 11:11*

---

**writerpayon:** கோட்பாட்டுரீதியாக மகிழ்ச்சியாகவே இருக்கிறேன். இருந்தும் மனதை எதுவோ ஓயாமல் உறுத்துகிறது. எது என தெரிந்தால் மனநிம்மதி கிடைத்துவிடும்.
*12/14/2009 12:05*

---

**writerpayon:** என் ரேஞ்சிற்கு எனது அறையை யூனியன் பிரதேசமாக அறிவித்து அதற்கென்று தனி சீதோஷ்ண நிலையை ஒதுக்கீடு செய்வதுதான் நியாயம்.
*12/14/2009 14:17*

---

**writerpayon:** என் மகன் பகுத்தறிவுவாதியாகி விடுவானோ என்கிற பயத்தில் தினமும் அவனுக்கான காம்ப்ளானில் ஒரு சிட்டிகை விபூதி கலக்குகிறேன்.
*12/14/2009 15:02*

---

**writerpayon:** மழையில் அப்படி என்ன இருக்கிறது, இந்த எழுத்தாளர்கள் இவ்வளவு

வார்த்தைகளை வீணாக்குவதற்கு? மேலிருந்து தண்ணீர் கொட்டுகிறது. அவ்வளவுதானே.
*12/14/2009 16:29*

---

**writerpayon:** சுவற்றோரம் சமகால தனித்துவ எறும்பு வரிசை. நம்மிடம் இல்லாத ஒழுங்கு, அழகு என நினைத்துக்கொண்டேன், அவற்றின் மேல் ஒரு டம்ளர் தண்ணீரை ஊற்றியபடி.
*12/14/2009 16:50*

---

**writerpayon:** தெலுங்கானா விவகாரம் வந்ததிலிருந்து எக்ஸ்பான்ஷனிச அபாலஜிஸ்டுகளின் காலமாகிவிட்டது.
*12/14/2009 17:06*

---

**writerpayon:** தற்காலிக உண்மைகளை பற்றிய நிரந்தர உண்மைகளை எழுதுபவனே எழுத்தாளன். இது நான் எழுதியதுதான். இருந்தாலும் யாராவது எனக்கு புரிய வைத்தால் நல்லது.
*12/14/2009 17:42*

---

**writerpayon:** தொடர்ந்து எழுதி எழுதி புத்தகங்களை உற்பத்தி செய்துகொண்டிருந்தால் ஒரு கட்டத்தில் தனி தொழில்துறையாகிவிடலாம்.
*12/14/2009 22:06*

---

**writerpayon:** மனிதன் தோன்றி பல்லாயிரமாண்டுகள் பரிணமித்தபின்னும் மனித நாகரிகத்தை பீடித்துள்ள நோய் எது தெரியுமா? தெரிந்தால் சொல்லுங்கள். பத்தி எழுத தேவை.
*12/14/2009 23:03*

---

**writerpayon:** காலை நடை இனிமையாக இருந்தது. குளிரும் இதம். காம்பவுண்ட் சுவர்களுக்கு வெளியே எட்டிப் பார்த்தன செடிகள். அப்படியே மிங் வமிச சீனாவின் ரம்மியம்.
*12/15/2009 11:04*

---

**writerpayon:** மனித வாழ்வில் பல ஆழமான கூற்றுகள் 'மனித வாழ்வில்' என தொடங்குகின்றன.
*12/15/2009 12:06*

---

**writerpayon:** இரவு புதிய கதையை தட்டச்சு செய்தபோது ஒரு கொசு வந்தது. அவதானித்தேன். அது கொசு அளவிலான விமானமாய் பறந்து வெளியேறியது. என் மனதையும் இழுத்தபடி.
*12/15/2009 12:15*

---

**writerpayon:** விழாவில் சாரு 'ஷகிலா சீடி வேணுமா?' என கேட்டார். என்னை இதைவிட மோசமாக கேவலப்படுத்த முடியாது. கிரேஸ் கெல்லி சிடி எல்லாம் கிடைக்காதா?
*12/15/2009 15:01*

---

**writerpayon:** கணினி பழுதாகிவிட்டது. கணினி பழுதாகும்போது வெள்ளை தாளில் எழுதித்தான் எனக்கு பழக்கம். இந்த ட்வீட்டை கூட வெள்ளை தாளில்தான் எழுதுகிறேன்.
*12/16/2009 10:38*

---

**writerpayon:** சமீபத்தில் ஒரு ஸ்பானிஷ் படத்தை பார்த்தேன். தற்போது எழுதும் பத்தியில் அதன் முழு கதையை மாங்குமாங்கென்று எழுதிக்கொண்டிருக்கிறேன்.
*12/16/2009 10:41*

---

**writerpayon:** @penathal வணக்கம். எனது உள்ளம் அவ்வளவு தட்டையானதல்லவே. என் எழுத்துதான் அப்படி.
*12/16/2009 10:47*

---

**writerpayon:** மலையாள மனோகரா நாளிதழில் என் நேர்காணல் வெளியாகிருக்கிறது. மலையாளத்தில். அதை படிப்பவர்கள் நான் மலையாளம் பேசுவேன் என நினைக்கக் கூடும்.
*12/16/2009 15:15*

---

**writerpayon:** @ksawme உங்களை போல நிரட்சரகுட்சியான ஒருவரை பார்த்ததில்லை.
*12/16/2009 16:09*

---

**writerpayon:** தமிழ் சினிமாவின் புது அலை, பதிப்புலக மறுமலர்ச்சி, ரியாலிட்டி வலைதளங்கள் போன்றவை அடங்கிய புதியதோர் உலகத்தில் எழுத்தாளனுக்கு கௌரவம் தேவையா?
*12/16/2009 16:35*

---

**writerpayon:** வானம் மிக இருளும்போதெல்லாம்.... உலகம் அழிந்து எனது டிவிடி தொகுப்பு சேதமடைந்துவிடுமோ என்கிற பயம். சிறுவயதிலிருந்தே இந்த பயம் இருக்கிறது.
*12/16/2009 16:58*

---

**writerpayon:** @aayilyan அவரவர் கழலை அவரவருக்கு.
*12/16/2009 17:05*

---

**writerpayon:** என் மகன் எனக்கு சரியான இலக்கிய வாரிசாக வருவான் என தோன்றுகிறது. "அர்த்தம்னா என்னப்பா அர்த்தம்?" என்று கேட்கிறான்.
*12/16/2009 20:41*

---

**writerpayon:** @writerpara மோஸ்தர்கள் மதங்களை போல. நமக்கு ஆர்வம் இல்லை என்றால் விட்டுவிட வேண்டும். அவற்றை பாவிப்பவர்களை கேவலமாக பாவிக்கக்கூடாது.
*12/16/2009 20:57*

---

**writerpayon:** Impressionism என்கிற புத்தகத்தை புரட்டிக்கொண்டிருக்கிறேன். இதுவரை 62 பக்கங்களை புரட்டியிருக்கிறேன். முன்னுரை XVIII பக்கங்களை சேர்த்தால் 80.
*12/17/2009 09:39*

---

**writerpayon:** பல வண்ண பெயிண்ட்களை அளவுமீறி குடித்த அஜீரணத்தால் வாந்தியெடுத்தது போலொரு ஓவியம். வான்கோ என்பதற்கு பதில் வான்கோழி என பெயரிட்டிருக்கலாம்.
*12/17/2009 09:41*

---

**writerpayon:** புத்தக வெளியீடு என்றால் லாரியில் அனுப்பியது போல் வந்துவிடுகிறார்கள் கூட்டமாய். இங்கே என்ன அவிழ்த்துப் போட்டா ஆடுகிறோம்? வருகைக்கு நன்றி.
*12/17/2009 11:42*

---

**writerpayon:** புத்தக வெளியீடு என்றாலே லாரியில் அனுப்பியது போல்

வந்துவிடுகிறார்கள் கூட்டமாய். இங்கே என்ன அவிழ்த்துப் போட்டா ஆடுகிறோம்? வருகைக்கு நன்றி.
*12/17/2009 11:43*

---

**writerpayon:** கட்டுப்படுத்தாதீர்கள். கட்டுரைப்படுத்துங்கள். #பொன்மொழி
*12/17/2009 12:08*

---

**writerpayon:** இமய மலை உருகிப் போவதற்குள் ஒரு எட்டு பார்த்துவிட்டு வந்துவிட வேண்டும். ஆனால் இந்த மழையில் எங்கே போக முடிகிறது. #ஹோபன்கேகன்
*12/17/2009 13:12*

---

**writerpayon:** சித்திர புத்திர மித்திரனே! இந்திர சந்திர சுந்தரனே! மன்மதனே சண்முகனே அக்கட இக்கட சுத்துறனே! - 'நாளை விடுமுறை' படத்திற்கு நான் எழுதும் பாடல்.
*12/17/2009 14:31*

---

**writerpayon:** எனக்குள்ள சுதந்திரம் என் கதைகளுக்கு இல்லை. நான் எழுதுவதால் நன்றாக இருப்பது தவிர அவற்றுக்கு வேறு வழி இல்லை. வருத்தமாக, மகிழ்ச்சியாக உள்ளது.
*12/17/2009 14:54*

---

**writerpayon:** அதே நூலில் நூற்றுக்கணக்கான காக்கைகள் பல வண்ணங்களில் எச்சமிட்டதைபோல ஒரு ஓவியம். வரைந்தவர் பெயர் மோனே. பட்டியிண்ட மோனே என திட்ட தோன்றியது.
*12/17/2009 17:32*

---

**writerpayon:** மைக்ரோனீஷிய மொழி என ஒரு மொழி இருக்கிறதா? அந்த மொழி சினிமாவை பார்த்தாக வேண்டுமே....
*12/18/2009 09:38*

---

**writerpayon:** நான் ட்விட்டரில் ஆள் மற்றும் புத்தக பெயர்களை உதிர்ப்பதை பார்த்து சிலர் நான் நிறைய தெரிந்தவன் என நினைக்கிறார்கள். நடக்கட்டும், நடக்கட்டும்.
*12/18/2009 09:40*

---

**writerpayon:** தமிழ்ச் சூழலில் 736 பக்கங்களை கொண்ட புத்தகங்களுக்கான ஒரு வெற்றிடம் இருக்கிறது. எனது அடுத்த புத்தகம் 736 பக்கங்களை கொண்டதாக இருக்கும்.
*12/18/2009 10:10*

---

**writerpayon:** தார்க்கோவ்ஸ்கி-மிசோகுச்சி.... இருவரில் அதிகம் விளங்காதவர்கள் யார்? எனது ஓட்டு ஃபாஸ்பிந்தருக்கு.
*12/18/2009 10:32*

---

**writerpayon:** உலக இலக்கியம் பற்றிய கட்டுரை நூலுக்கு கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. எங்கிருந்தும் எடுக்கலாம். சொந்தமாகவும் எழுதலாம். என் பெயரில் வரும்.
*12/18/2009 10:44*

---

**writerpayon:** எனக்கு நடப்பதாக நான் பத்தியில் எழுதும் சம்பவங்களில் 1 சதவீதம்கூட எனக்கு நடப்பதில்லை. மனதிற்குள்ளும் வாழலாம்தானே.
*12/18/2009 11:15*

---

**writerpayon:** இத்தாலிய நியோ ரியலிசம் போணியாகிறது.
*12/18/2009 12:43*

---

**writerpayon:** ட்விட்டர் சமகால தமிழக ரேஷன் கடை போலுள்ளது. முழுமையாக 140 எழுத்துகளை பயன்படுத்த விடுவதில்லை. 4-5 எழுத்துகள் குறைந்தால்தான் அனுமதிக்கிறது.
*12/18/2009 13:17*

---

**writerpayon:** துணுக்குறுதல் வாசிப்பு அனுபவம் ஆக முடியாது.
*12/18/2009 14:40*

---

**writerpayon:** @kanapraba இப்போது விமரிசகர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதன் காரணம் ரசிகர்கள் விமரிசகர்கள் ஆகி வருவதுதான்.
*12/18/2009 14:45*

---

**writerpayon:** லண்டன் பனி என்ன அழகு! இங்கோ, இருக்கும் வெப்பத்தில் பனி உருகி சாதாரண மழையாக பெய்துகொண்டிருக்கிறது.
*12/18/2009 15:25*

---

**writerpayon:** ஜன்னல் வழியே பார்த்தால் ஒரு முதியவர் வாழைப்பழ தோலில் வழுக்கி விழுகிறார். ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா! யாராவது கைகொடுங்கள் அப்பா! ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா! ஐயோ, ஐயோ!
*12/18/2009 18:53*

---

**writerpayon:** பயணம் சிறக்கட்டும் என வாழ்த்துகிறார்கள். எல்லோரும் குண்டுச்சட்டிக்குள்தான் குதிரை ஓட்டுகிறோம். இது என்ன பெரிய பயணம்? ஓ, அக பயணமா?
*12/18/2009 19:04*

---

**writerpayon:** வீட்டு வேலை அனைத்தையும் மனைவிதான் செய்ய வேண்டுமாம், குப்பையையும் நானே கொண்டு போய் கொட்ட வேண்டுமாம். என்ன அநியாயம் இது?!
*12/18/2009 20:39*

---

**writerpayon:** நிலம் வாங்க வேண்டும். காணி நிலம் வாங்க வேண்டும்....
*12/18/2009 21:30*

---

**writerpayon:** ஒரு பள்ளி தோழனை பார்த்தேன். என் வெற்றி அவனுக்கு ஆச்சரியம். மேடை பயம் இல்லையா என்றான். பயப்பட வார்டுரோப் மால்பங்ஷனா ஏற்பட போகிறது என்றேன்.
*12/18/2009 22:11*

---

**writerpayon:** 100க்கு மேற்பட்ட பருக்கைகளை சேமியா இழைகளால் கோர்த்து சோற்று மாலை அனுப்பியுள்ளார் ஒரு வாசகர். புல்லரிக்கிறது. ஃபிரேம்செய்ய தந்திருக்கிறேன்.
*12/19/2009 11:35*

---

**writerpayon:** எழுத்தாளனின் அங்கீகாரம் இல்லாமல் விமரிசகன் வெற்றி பெற முடியாது.
*12/19/2009 14:46*

---

**writerpayon:** இன்று எதை தெரிந்தாற்போல் காட்டிக்கொள்வது? யோசிக்கிறேன்....
*12/21/2009 13:07*

---

**writerpayon:** Gone with the Wind பார்த்தேன். அதிர்ந்தேன். இது மார்கரெட் மிட்செலுடைய Gone with the Wind நாவலின் அப்பட்டமான காப்பி. அவர்கள் செய்தால் சரியா?
*12/21/2009 13:11*

---

**writerpayon:** அதீத மன எழுச்சி தரும் கவித்துவங்களால் ரத்த அழுத்தம்

ஏற்பட்டுவிடாதா?
*12/21/2009 13:31*

---

**writerpayon:** மேக மூட்டத்தை பார்த்தால் மும்மாரியும் இன்றே பெய்துவிடும் போலிருக்கிறதே.
*12/21/2009 13:33*

---

**writerpayon:** எனது உளவாளி ஒருவர் ட்ரெஞ்ச் கோட்டு, ஃபெடோரா தொப்பி, பூட்ஸ் கேட்கிறார். அவர் நாயர் பிரியராம். எந்த நாயரும் அவற்றை அணிந்து பார்த்ததில்லை.
*12/21/2009 14:04*

---

**writerpayon:** காலை தெருவில் கொட்டாவி அடக்க கைதூக்கினேன். பதறி ஓடியது ஒரு நாய். என் நிலைபாட்டை தெளிவுபடுத்த அதன் பின்னே ஓடினால் அது மேலும் வேகமாய் ஓடியது.
*12/21/2009 15:08*

---

**writerpayon:** தமிழ் இலக்கியத்தில் வித்யாசமான ஒரு மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. உரைநடையில் கவித்துவமும் கவிதையில் உரைநடைத்துவமும் ஏறிவிட்டது.
*12/21/2009 15:44*

---

**writerpayon:** மழை வந்தாலே வாசகர்கள் பயந்து சாகிறார்கள். நான் அதை வர்ணித்து மரண மொக்கை போடுவேனோ என்று. ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா!
*12/21/2009 17:50*

---

**writerpayon:** என் சிறுவயதில் பெய்த மழைகளின் ரம்மியம் சமகால மழையில் இல்லை. மழைகளுக்கிடையிலுமா தலைமுறை இடைவெளி?
*12/21/2009 23:07*

---

**writerpayon:** ஒரு கோப்பை சூடான தேநீரை மெல்ல பருகியபடி மழையை ரசிப்பவர்களிடம் உஷாராக இருக்க வேண்டும். எந்த சமயத்தில் என்ன செய்வார்கள் என்று சொல்லமுடியாது.
*12/21/2009 23:15*

---

**writerpayon:** குடிக்கும்படி என்றாவது துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டால் வோட்காவையும் சாக்கேவையும் கலந்து குடிப்பதையே விரும்புவேன். மற்றபடி குடி ஆகாது.
*12/21/2009 23:46*

---

**writerpayon:** நாளைக்காக திட்டமிட்டு இன்றை வீணாக்குகிறோம். இன்றைக்காக திட்டமிட்டு நேற்றை வீணாக்கியது போல.
*12/22/2009 09:50*

---

**writerpayon:** அறிவிப்பு:- எனது ட்வீட்கள் நூல் வடிவில் வரவிருக்கின்றன (மொத்தமாக ஒரே நூலில்). நான் இட்ட பதில் ட்வீட்களில் உங்கள் ட்விட்டர் பெயர் உள்ளது....
*12/22/2009 14:16*

---

**writerpayon:** உங்கள் ட்விட்டர் பெயருடன் எனது ட்வீட்களை வெளியிட உங்கள் அனுமதி தேவை. சம்பந்தப்பட்டவர்களிடம் தனி செய்தியில் அனுமதி கோருகிறேன்.
*12/22/2009 14:17*

---

**writerpayon:** என் கணினி பழுதுபார்க்கப்படுகிறது. வேறு வேலை இல்லை. இன்றைய

செய்தித்தாளை மறுவாசிப்பிற்கு உட்படுத்திக்கொண்டிருக்கிறேன்.
*12/22/2009 14:33*

---

**writerpayon:** 80களில் என் நண்பர் ஒருவரின் முழுநேர வேலையே 'யாரோ' என்கிற பெயரில் பத்திரிகைகளுக்கு பொன்மொழி எழுதி அனுப்புவதுதான்.
*12/22/2009 14:40*

---

**writerpayon:** மனைவியுடனான தகராறுகளை கவனமாக கையாள வேண்டும். கரணம் தப்பினால் சரணம்.
*12/22/2009 15:16*

---